No. M. 2569

22 AUG 1938 MADRAS

1241

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 9

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 7

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஜமாதுல் அவ்வல் மீ

1938ஹு ஜூலை மீ

1. அல்குர்ஆன் ... 161 2. அல்ஹதீது ... 164
3. ஹிந்திப் பிரச்னை ... 165
4. முஸ்லிம் மன்னர்களும், ஸ்திரீகளும் ... 166
5. காதலுக்காகவா மணம் புரிதல் ... 171
6. மேனாட்டுச் சதிபதிகள் ... 173
7. நஞ்சோதர்களின் மனப்பான்மை ... 176
8. காதியான் கலீபாவிற்கு பகிரங்கக் கடிதம் ... 178
9. இப்போதே இல்லையேல் எப்பொழுதுமில்லை ... 180
10. இந்து முஸ்லிம் ஒற்றுமை ... 182
11. முஸ்லிம்கள் கவனிப்பார்களா? ... 183
12. முஸ்லிம் சமூக முன்னேற்றத்தைத் தடுக்க சூழ்ச்சி ... 186
13. காங்கிரஸின் கபட சூழ்ச்சி ... 188
14. மேனாட்டுநாகரீகமும் மக்களின் வீழ்ச்சியும் ... 189
15. 192, 16. 195, 17. 197, 18. 200.

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	”	4 0 0
தனிப் பிரதி ...	”	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 AUG 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 ஜமாதுல் அவ்வல் மீ 1938ஹு ஜுலை மீ	இதழ் 7

அல்குர்ஆன்

உங்களுக்கு வலியாக இருப்பவர் அல்லாஹ்வும், அவனது றஸூலும், ஈமான் கொண்டார்களே அவர்களுமாவார்கள். அவர்கள (அல்லாஹ்விற்குக்)கீழ் படிந்தவர்களாக இருக்கிற நிலைமையில் அவர்கள் தொழுகையை நிலை நிறுத்தி ஜக்காத்தையும் கொடுப்பார்கள். மேலும், எவர் அல்லாஹ்வையும், அவனது றஸூலையும், ஈமான் கொண்டவர்களையும் வலிகாராக்கிக்கொண்டாரோ நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தார்தான் மிகைத்தவர்கள். (திருகுர் ஆன்)

சோதரீர்! இந்த ஆயத்தில் இறைவன் முஸ்லிம்களுக்கு உதவிக்காரர்களாக, தலைவர்களாக, அன்பர்களாக, வழிகாட்டிகளாக, காரியகர்த்தர்களாக இருக்கத் தகுந்தவர் எவர் என்பதையும், மிகைத்தவர்கள், ஜெயம் பெறக் கூடியவர்கள் யாவர் என்பதையும் நமக்கு அறிவித்திருக்கிறான். இந்த ஆயத்து அருளப்பட்ட காலத்தில், உலகில் முஸ்லிம்கள் லக்ஷக் கணக்கில் இல்லை; அவர்களது எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் தானிருந்தது. இஸ்லாம் மதத்தின்பால் கடும்பகை கொண்டு முஸ்லிம்களைப் பகைவர்கள் துன்புறுத்திக் கொண்டும், முஸ்லிம்கள் சொல்லொணாத் துன்பத்திற்குட்பட்டுக்கொண்டுமிருந்த காலத்தில்தான் இந்த ஆயத்து அருளப்பட்டது. இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி உண்மையாகவே அந்த முஸ்லிம்கள் நடந்துகொண்டதால் அவர்கள் நாளுக்கு நாள் பலமடைந்து, இறுதியாக சம்பூர்ண வெற்றியையும் அடைந்தார்கள் என்ற விபரம் சரித்திரங்களிலிருந்து தெள்ளத்தெளிய வெளியாகின்றது. அக்காலத்திலுள்ள முஸ்லிம்கள் தாங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம்; பகைவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள் என்று நினைத்து அஞ்சவில்லை. அல்லாஹுதஆலா ஒருவனையே அஞ்சிப் பணிந்து, அவனையே தலைவனாக ஏற்றுக் கொண்டனர். ஆகவே, அவன் அவர்களுக்கு உதவி புரிந்தான். ஆனால், இக்காலத்திலோ முஸ்லிம்களாகிய நாம் இக்குவலயத்தில் கோடிக் கணக்காகப் பெருகியிருக்கிறோம். இருந்தும்பய

னென்ன? எங்கும் முஸ்லிம்கள் கஷ்டத்திலும், சங்கடத்திலும் இருக்கின்றனர். இதற்கு காரணம், இக்காலத்திலுள்ள வெகு ஜனங்கள் இந்த ஆயத்திற் கூறப்பட்ட விஷயங்களைக் கவனியாமல் பிற ஜாதியினரைத் தங்களது உதவிக்காரர்களாகவும், தலைவர்களாகவும் கருதி அவர்கள் கூறும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததேயாகும். எவருடைய உதவியை எதிர்பார்த்து முஸ்லிம்கள் நடந்துகொண்டார்களோ, அவர்கள் முஸ்லிம்களை ஒடுக்கி விடுவதற்காகவே முயலுகின்றனர். இதற்கு உதாரணம் காட்டவேண்டும் என்பதில்லை, இற்றைநாளில் முஸ்லிம்கள் இருந்துவருகிற நிலைமையும், அவர்களுக்கு நடைபெற்றுவரும் காரியங்களுமே போதிய சான்றாகும்.

முற்காலத்திலுள்ள முஸ்லிம்கள் அல்லாஹ்வையும், அவனது றஸூலையும், மூமின்களையும் தங்களுடைய உதவிக்காரர்களாக, தலைவர்களாக, காரிய கர்த்தர்களாக ஏற்படுத்தி இருந்தார்கள் என்பதனால் முஸ்லிம் அல்லாதாரைப் பகைத்துக்கொண்டிருந்தார்கள் என்பது கருத்தல்ல. அக்காலத்திலும் முஸ்லிம் அல்லாதார்தான் பெரும்பான்மையினராக, மெஜாரிட்டியினராக இருந்தனர். அவர்களுடன் முஸ்லிம்கள் ஒத்துழைத்தனர். ஆனால், முஸ்லிம் அல்லாதாருக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்ற முறையிலல்ல, அவர்களுக்குச் சமமான ஒரு தனி சமூகத்தினர் என்ற முறையில் ஒத்துழைத்தனர். முஸ்லிம் அல்லாதாருடன் மத சம்பந்தமான காரியங்களில் விலகி இருந்து, உலக சம்பந்தமான காரியங்களில் ஒருவரோடொருவர் சேர்ந்து இருந்தனர். நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் திரு மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவிற் குடியேறியபோது, மதீனாவிற்கு அக்கம் பக்கத்திலுள்ள முஸ்லிம் அல்லாதாருடன் உடன்படிக்கை செய்துகொண்டு, அவர்களுடன் இணக்கமாகவே வாழ்ந்தார்கள். ஆனால், அவர்களுடன் இணக்கமாக வாழ்வதற்காக மத சம்பந்தமான காரியங்களில் விட்டுக் கொடுத்து விடவில்லை. ஆனால், இக்காலத்திலுள்ள நமமவர் இத்தேசத்திலுள்ள பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழவேண்டும் என்பதற்காக மத சம்பந்தமானவைகளையும்கூட விட்டுக் கொடுக்க முன் வருகின்றனர். தவிர மத சம்பந்தமான அறிவைக் கற்றுக்கொள்ளுவது முஸ்லிம்களுக்கு முதற் கடமையாக இருந்து வருகிறது. முஸ்லிம்களால் எழுதப்பட்ட பாட புத்தகங்களில் இஸ்லாம் மதத்தின் கொள்கைகள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வரலாறுகள், முதலியவைகளைப்பற்றியும் அவசியத்திற்கு ஏற்றவாறு சிறிது எழுதி இருக்கின்றனர். அதிற் பிற மதத்தாரைப்பற்றி குறையோ தோஷமோ கூறப்படவில்லை. அப்படியுள்ள புத்தகத்தை ஸ்கூல்களில் பாடப் புத்தகமாக வைத்துப் பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுப்பதைக் கூட பிறமதத்தினர் சகிக்கவில்லை. பிற மதத்தினரைத் திருப்திப் படுத்துவதற்காக முஸ்லிம்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் கூட அத்தகைய புத்தகங்களை ஸ்கூலில் படித்துக் கொடுக்க வேண்டாம் என்று உத்தரவு போடுகிறார்கள். இவ்விஷயம் எல்லைப்புற மாகாணத்தில் நடந்தது. அங்கு 95 சத விகிதத்திற்கு முஸ்லிம்கள் வசிக்கின்றனர். அங்குள்ள ஸ்கூல்களிலெல்லாம் முஸ்லிம் சிறுவர்களே பெரும்பான்மையினர். அப்படி இருந்தும் அங்குள்ள 5 சத விகிதமுள்ள முஸ்லிம அல்லாதாரைத் திருப்திப்படுத்துவதற்காக அங் தள்ள முதல் மந்திரியார், தன்னை பக்கா முஸ்லிம் என்று சொல்லிக் கொள்பவர், முஸ்லிம் மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் படித்துக் கொடுக்க பாடப் புத்தகமாக வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் போடுவதாக வாக்குறுதி செய்தாராம். மந்திரிப் பதவியிலும், முதல் மந்திரியாக இருக்கிற ஒரு முஸ்லிமுக்கு இத்தகைய மனப்பான்மை வந்ததற்குக் காரணம் என்னவென்றால், மேலே கூறிய தெய்வ வசனத்திற் கூறப்பட்ட கட்டளையை மறந்து, முஸ்லிம் அல்லாதாரைத் தமது தலைவர்களாகவும், உதவிக்காரர்களாகவும், காரிப கர்த்தர்களாகவும் ஆக்கிக் கொண்டதேயாகும்.

முஸ்லிம்களுக்கு உண்மையான உதவிக்காரர்கள் அல்லாஹ்வும், றஸூலும், முஸ்லிம்களுமே யாவர். முஸ்லிம் அல்லாதாரைத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டவர்கள் முஸலிம்களால் ஏற்படுத்தப்பட்ட பொது ஸ்தாபனங்களை ஏளனம் செய்யவும், அந்த ஸ்தாபனங்களுக்குத் தலைமை வகித்துக் காரியங்களைப் பார்த்து வருபவர்களைத் தூற்றவும் பின் வாங்குகின்றனரில்லை. முஸ்லிப் லீகும், அதன் நிர்வாகிகளும் முஸ்லிம்களை ஒன்று சேர்ந்திருக்கும்படியாகக் கூறுகின்றனர்; முஸ்லிம்களுக்கு இந்தியாவிலுள்ள அரசியல் உரிமைகளில் கிடைக்க வேண்டிய பாகத்தைக் கொடுத்து விடும்படியாகக் கூறு

கின்றனர்; முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வும் ரஸூலும், முஸ்லிம்களும்தான் தலைவர்கள் என்றும், முஸ்லிம் அல்லாதார் தலைவர்களாகவோ, காரிய கர்த்தர்களாகவோ இருக்க முடியாது என்றும் கூறுகின்றனர். இதனை முஸ்லிம் அல்லாதார் மிகைத்த காங்கிரஸ் வாதிகள் அங்கீகரிப்பதில்லை. அவர்களைப் பின்பற்றி வருகிற காங்கிரஸ் முஸ்லிம்கள் முஸ்லிம்லீகை தூற்றுகின்றனர். "முஸ்லிம்களுக்குப் பயங் காட்டுகின்றனர்; முஸ்லிம்லீக்தான் முஸ்லிம்களின்பிரதி நிதித்துவம் வாய்ந்த சபை என்பதை காங்கிரஸ் வாதிகள் அங்கீகரிக்க வேண்டும்; அதற்கப்புறம் காங்கிரஸுக்கும் முஸ்லிம்லீகுக்கும் ஒப்பந்த மேற்படப்பட வேண்டும்" என்று முஸ்லிம்லீக் தலைவர்கள் கூறுவதற்குக் காரணம, முஸ்லிம் அல்லாதார் முஸ்லிம்களுக்குத் தலைவர்களாக இருக்கக் கூடாது என்பதும், முஸ்லிம்கள் அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதுமே யாகும். முஸ்லிம் அல்லாதாரைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று திருகுர் ஆன் கூறுகிறது. "ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்னர் வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களில் நின்றும் உங்களது மார்க்கத்தைப் பரிகாசமாகவும் விளையாட்டாவும் எடுத்துக் கொண்டவர்களையும், காபிர்களையும் வலிமார்களாக (அதாவது தலைவர்களாக, காரியஸ்தர்களாக, உதவிக்காரர்களாக) ஏற்றுக் கொள்ளாதீர்கள்." என்பதாக தெய்வத்திரு வேதம் கட்டளையிடுகிறது. காபிர் என்ற பதத்திற்கு அல்லாஹ்விற்கு இணை வைப்பவர்கள், அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள், சன்மார்க்கத்தைத் தழுவாதவர்கள் என்று பல பொருள்களிருக்கின்றன. இக்காலத்தில் இந்தியாவிலுள்ள முஸ்லிம் அல்லாதார் முஸ்லிம்களது மதக்கொள்கைகளையும், போதனைகளையும், திருகுர்ஆனையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பரிகசித்தும், இழிவுபடுத்தியும், கேலி செய்தும் பிரசங்கிப்பதும், பிரசுரங்கள் வெளியிடுவதும், இதனைக் கண்டு ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் அவர்களை கொலை செய்வதும் அப்புறம் வகுப்புக் கலகம் தோன்றுவதும் சகஜமாகிவிட்டது. இவ்விதமான மனப்பான்மையுள்ளவர்களை திருகுர் ஆனின் கட்டளைக்கு மீறி தலைவர்களாக ஏற்றுக்கொள்வதால் முஸ்லிம்களுக்கு நஷ்டமும் கஷ்டமுமே விளையும் என்பதிற் சந்தேகமில்லை. முஸ்லிம்கள் உண்மையாகவே தங்களுக்கு வெற்றியும் ஜெயமும், அல்லாஹ்வின் உதவியும் வேண்டும் என்று விரும்புவார்களாயின், தாங்களும் கண்ணியமான ஒரு சமூகத்தினர் என்று உலகில் உயிர் வாழ நினைப்பார்களாயின் அவர்கள் அல்லாஹ் ரஸூல் ஆகியவர்களது கட்டளைக்கு முதல் ஸ்தானத்தைக் கொடுத்து திருகுர்ஆன், ஹதீது ஆகியவைகளிற் கூறப்பட்டுள்ள விதி விலக்குகளின் படி நடந்து, முஸ்லிம்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க முன்வர வேண்டும். அல்லாஹ்வின் உதவியில்லாமல் ஒன்றையும் சாதிக்க முடியாது. அல்லாஹ்வின் இஷ்டத்திற்கு மாறாக நம்மை எவரும் எதுவும் செய்துவிட முடியாது. இவ்வித நிலைமையில் மற்றவர்கள் பயங் காட்டுவதற்காகவோ, அல்லது பெரும் பான்மையினராக இருக்கிறார்கள் என்பதற்காகவோ அல்லாஹு தஆலாவின் கட்டளையை மீறி முஸ்லிம் அல்லாதாரைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்வது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

(164-ம் பக்கத் தொடர்)

களுக்குச் சென்றால் தொழுகைக்கு வருபவர்கள் அநேகமாக எல்லோரும் நரைத்தவர்கள் என்றே கூறலாம். செல்வமுள்ளவர்கள் தங்களிடமுள்ள செல்வத்தின் பெருமையால் மார்க்கக் காரியங்களை நிறைவேற்றவோ, பொதுஜன நன்மைக்கான ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டுமென்றோ கருதுவதில்லை. இவ்வாறான காரியங்களைச் செய்யவேண்டும் என்று எவரேனும் கூறினால், அவரைத் தனது சுயநலத்திற்காகக் கூறுபவர் என்று ஈனமாக மதிக்கின்றனர். அப்புறம் அச்செல்வம் அவர்களை விட்டு நீங்கி தரித்திரம் பிடுங்கித்தின்ன வாரம்பித்தால், அதனைச் செய்தோமா? இதனைச் செய்தோமா? என்று கை சேதப்படுகின்றனர். சுகமாக இருக்கிற காலத்தில் சிற்றின்பத்தில் மூழ்கி நோய்வாய்ப் பட்டபின் "அல்லாஹ், அல்லாஹ்" என்று ஜபிக்கிறார்கள். எனவே, தங்களுக்குக் கிடைத்த இச்சொற்பாயுளில் நல்ல சமயங்களைத் தவறவிடா திருக்குமாறு நம் முஸ்லிம் நேயர்களை கேட்டுக் கொளகிறோம்.

அல்ஹதீது

ஐந்துக்கு முன் ஐந்தைக் கொள்ளை முதலாகக்கொள். உனது வயோதிகத்திற்குமுன் உன் வாலிபத்தை, உனது நோய்க்கு முன் உன் சுகத்தை, உனது அலுவலுக்கு முன் உன் சாவகாசத்தை, உனது தரித்திரத்திற்கு முன் உன் சீமான் தனத்தை, உனது மரணத்திற்கு முன் உன் ஜீவியத்தை (க்கொள்ளை முதலாகக்கொள்).

இந்த ஹதீதில் மனிதனுக்குச் சம்பவிக்கக் கூடிய பத்துக்காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வயோதிகம், வாலிபம், நோய், சௌக்கியம், அலுவல், சாவகாசம், தரித்திரம், சீமான் தனம், மரணம், ஜீவியம். ஆக இப்பத்து வகை நிலைகளில் மனிதன் தனக்கு வேண்டியதைச் செய்து கொள்வதற்கு வசதியானவைகள் ஐவகை நிலைகளேயாகும். வாலிபப் பருவத்தில் மனிதனது ஸ்தூலத்தில் பலம், ஊக்கம், உணர்ச்சி, பயமின்மை, உற்சாகம் முதலியவைகளெல்லாம் இருக்கும். வயோதிகப் பருவத்தில் இவை குன்றிவிடும். வாலிபமாக இருக்கிற சமயத்தில் ஒரு கெட்ட பழக்கத்தை அல்லது நல்ல பழக்கத்தை ஒருவன் உண்டு பண்ணிக்கொண்டால் அவனது வயோதிக காலத்தில் அவனைவிட்டு அது நீங்காது. ஆதலால்,வாலிபமாக இருக்கும்போதே தொழுகை, நோன்பு முதலிய சன்மார்க்கச் கிரியைகளைச் செய்வதுடன் மார்க்கத்திற்காகாத கெட்டசெய்கைகளை விட்டு விலகிக்கொள்ளவும் வேண்டும். நோய் வாய்ப்பட்டு விட்டால் மனைவி மக்கள் உற்ருர் உறவினர் முதலியவர்களது அதிகாரம் தனது செல்வத்தில் நடைபெற வாரம்பித்துவிடும். தனது இஷ்டம்போல் தன் பொருளைத் தான தர்மஞ்செய்ய சட்டமும் இடங்கொடுக்காது. தான் நினைத்ததைச் செய்துகொள்ள தேகத்தில் பலமுமிருக்காது. ஆதலால், நோய்வாய்க்குட்படுவதற்குமுன், தேக சௌக்கியமாக இருக்கும்போதே நற்கிரியைகளைச் செய்யல், தான தர்மமளித்தல் முதலியவைகளைப் புரிதல் வேண்டும். மனைவி மக்கள் பாரம் தலையிலேறி அவர்களுக்குச் சம்பாதித்துப் போட வேண்டிய பொறுப்பும், இதர பல காரியங்களின் பொறுப்பும் ஏற்படுவதற்கு முன்னதாகவே சாவகாசமான காலத்தை வேடிக்கை வீணான காரியங்களில் கழிக்காமல் இறைவனது சன்மார்க்கத்திற்குத் தொண்டு புரிதல் வேண்டும். தரித்திரமுள்ள மனிதன் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் அவனுக்குச் செல்வாக்கு ஏற்படமாட்டாது. இது உலக இயற்கை. தவிர, சீமான் தனமிருக்கும் போது பொருளைக்கொடுத்து அநேக நற்காரியங்களை உலகினுக்குச் செய்யலாம். தரித்திரம் வந்தால் இவைகளைச் செய்ய முடியாது. ஆதலால், சீமான் தனத்தைச் சரியான வழியில் உபயோகிக்கவேண்டும். இவ்வுலகில் மனிதராக இருக்கிற நாம் செய்யும் சகல காரியங்களும் சொற்பகால ஜீவியத்தில்தான். இந்த ஜீவியத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டால் அப்புறம் நாம் எதையும் செய்துகொள்ளச்சக்தியற்றவர்களாகி விடுகிறோம். ஆகவே, அறிவாளிகள் தங்களது ஜீவிய காலத்தையும், வாலிபப் பருவத்தையும், சாவதானமான காலத்தையும், சீமான் தனத்தையும், தேக சௌக்கியத்தையும் கொள்ளை முதலைப்போல் பாவித்துச் சரியான காரியத்தில் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். மறு உலக காரியங்களுக்காக வேண்டியதை இவ்வுலகிலேயே தேடிக்கொள்ள வேண்டும். தங்களுக்குக் கிடைத்திருக்கிற இவ்வைம் பெரும் பாக்கியங்களை இவ்வுலகில் துர்விநியோகம் செய்துவிட்டால் அப்புறம் மறு உலகில் நாம் கைசேதப் படவேண்டியதேற்படும்.

ஆனால், முஸ்லிம்களாகிய நம்மவரிற் பெரும்பாலர் இந்த ஹதீதில் சொல்லப்பட்ட விஷயங்களையே அடியுடன் மறந்து விட்டார்களோ என்று நினைக்க வேண்டியதிருக்கிறது. வாலிபமான காலத்தில் டிராமா, நாடகம், கூத்து என்ற பல வீணான பாபமான காரியங்களில் ஈடுபடுகின்றனர்; வாலிப காலத்தில் ஆசைப்பட்ட காரியங்களைச் செய்து பார்த்துக் கழித்துவிடவேண்டும் என்று கூறுகின்றனர். மஸ்ஜிது

(இதன் தொடர் 163-ம் பக்கம் பார்க்க)



ஹிந்திப் பிரச்னை

சென்னை மாகாண சர்க்கார் இந்துஸ்தானியை இம்மாகாணத்திலுள்ள சில செக்கிண்டரி ஸ்கூல்களில் முதல் மூன்று பாரத்திற்குக் கட்டாயப் பாடமாக ஏற்படுத்தி இருக்கின்றது. இம்மாகாணத்திலுள்ள காங்கிரஸ் வாதிகளும், காங்கிரஸ்வாதி அல்லாதாரும் இதனைப் பலமாக எதிர்க்கின்றனர். மந்திரிமார்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிற இடங்களிலெல்லாம் கருப்புக்கொடிகளால் மந்திரிகளை வரவேற்கின்றனர். முதல் மந்திரி வீட்டில் சத்தியாக்கிரகஞ்செய்கின்றனர். ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதமிருப்பதாகப் பிரதிக்ஞை செய்து சென்ற மே மாதம் 1-ந்தேதி முதல் உண்ணாவிரதமிருந்து உயிரை இழக்கவும் தயாராகிவிட்டார். தமிழ் நாட்டினர் மட்டுமில்லாமல் ஆந்திரர்களும், கன்னடியர்களும்கூட கட்டாய ஹிந்தியை எதிர்க்கின்றனர். விருப்பமில்லாத ஒரு சமூகத்தாரிடம் வலுக்கட்டாயமாக ஹிந்தியைப் புகுத்துவது நல்லதல்ல. மந்திரி சபையினர் கட்டாய ஹிந்தியை ஏற்படுத்தாமல் இஷ்டப்பாடமாக வைததிருந்தால் அதற்கு இத்தனை எதிர்ப்புகள் தோன்றி இரா.

ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்குச் சொல்லப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. வட இந்தியாவிற்குச் சுற்றுப் பிரயாணம் செய்பவர்களும் அங்கு வியாபாரம் செய்பவர்களும் அவசியமேற்படின் தாங்களாகவே ஹிந்தியைக் கற்றுக்கொள்வர். இந்தியாவிற்கு ஹிந்திதான் பொதுப் பாஷையாக இருக்கவேண்டும் என, இந்தியாவின் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை. இந்தியாவிற்கு பூரண சுயேச்சை கிடைத்து, இந்தியர்களின் மத்திய பார்லிமெண்டில் எல்லா மாகாணப் பிரதிநிதிகளும், எல்லா வகுப்புப் பிரதிநிதிகளும் கலந்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தபின், அம்முடிவின்படி பின்னர் நடந்து கொள்ளலாம். ஹிந்தியைப் பொதுப் பாஷையாக ஆக்கவேண்டு மென்ற காரணத்திற்காக, சித்தாந்தத்திற்காக இப்பொழுதே கட்டாயப் பாடமாக ஆக்குவது அவசியமில்லை. அத்துடன், அதனை எதிர்ப்பவர்களின்மீது நடவடிக்கை எடுத்து ஜெயிலுக்கு அனுப்புவதும் உசிதமாகத் தோன்றவில்லை. ஹிந்தி சத்தியாக்கிரகிகள் களவாடவில்லை வேறு வகையான போக்கிரித்தனம் செய்யவில்லை, அவர்களிலும் கண்ணியவான்களும், படித்தவர்களும், சர்வகலாசாலைப் பட்டதாரிகளும் இருக்கின்றனர். தாய் பாஷை அபிமானத்தால் அவர்கள் சத்தியாக்கிரகம் செய்து, தங்களது எதிர்ப்பை மந்திரி சபையினருக்குத் தெரிவித்து, கட்டாய ஹிந்தியை அகற்றவேண்டும் என்று முயலுபவர்களைக் கடுங்காவல் தண்டனைக்குட்படுத்துவது தர்மமல்ல. காங்கிரஸ் சத்தியாக்கிரகிகளுக்குக் கடுங்காவல் தண்டனை விதித்ததைக் கண்டித்த அதே கோஷ்டியினர் இன்று ஹிந்தி எதிர்ப்பாளரிடம் நடந்துகொள்ளும் முறை நீதியாகாது

இஃதிருக்கட்டும், ஹிந்தி பாஷையிலும் உருது பாஷையிலுமிருக்கிற அரபி, பார்ஸி சமஸ்கிருத கடின பதங்களை எடுததுவிட்டு சுலபமான பதங்களைக் கொண்ட ஹிந்துஸ்தானி பாஷையைப் பொதுப் பாஷையாக ஆக்குகிறோம் என்று இக்கிளர்ச்சிக்குப் பின் காங்கிரஸ் வாதிகள் கூறுகின்றனர். இதற்கு அர்த்தமில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், இந்த பாஷை உருதுவும் ஹிந்தியுமல்லாத புதுப் பாஷை என்றே கூறவேண்டும். ஹிந்தி பாஷையைத் தெரிந்தவர்கள் அவர்கள் அறிந்திருக்கிற, பேசிப் பழகி இருக்கிற சமஸ்கிருத கடின பதத்தை மறந்துவிடுவார்களா? இதுபோல் உருது தெரிந்தவர்கள், தங்கள் பழக்கத்தில் வந்துள்ள அறபி, பார்ஸி கடின பதங்களை மறந்து விடுவார்களா? இரு வகுப்பினரும் மறக்கவும் முடியாது

தங்கள் பழக்கத்தைக் கைவிடவும் முடியாது. இவ்வித நிலைமையில் அவைகள் ஒழியப்போவ தில்லை. ஆகவே, அறபிப் பதங்களையும் பார்ஸிப் பதங்களையும் கொண்ட உருது பாஷையை தேவ நாகரீ லிபியில் எழுத அங்கு அக்ஷரம் கிடையாது. தேவநாகரீ லிபியில் உள்ள இரண்டொரு அக்ஷரம் பார்ஸி லிபியில் இல்லை. இவ்வித நிலைமையில் காங்கிரஸ்காரர்கள் கூறு கிற ஹிந்துஸ்தானி பாஷைக்கு பார்ஸி லிபியோ, ஹிந்தி லிபியோ சரியான லிபியாக இருக்க இடமில்லை. சுருங்கக் கூறுமிடத்து, அறபி பார்ஸி பதங்களை தமிழில் எழுதுவதற்கும் தேவநாகரி லிபியில் எழுதுவதற்கும் வித்திபாச மில்லை. அறபி, பார்ஸி பதங்களை தேவநாகரீ லிபியில் எழுதினுல் அப்பதங்களின் உச்சரிப்பு நிச்சயமாகச் சிதைந்து விடும். ஆதலால், காங்கிரஸ் வாதிகள் கோருகிற ஹிந்துஸ்தானி பாஷை எழுதுவதிலோ பேசுவதிலோ அனுபவ சாத்தியமானதாகத் தோன்ற வில்லை.

முஸ்லிம்கள் கட்டாய இந்தியை எதிர்க்காம லிருக்கும் பொருட்டு வட இந்தியாவிலுள்ள முஸ்லிம் ஆசிரியர்களைக் கொண்டு, ஹிந்தி பாட புத்தகங்களை பரிசிலனை செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வருஷம் அரசாங்கத் தார் பிரசுரித்த ஹிந்திப் பாடப் புத்தகத்திற்குத் தான் முஸ்லிம் ஆசிரியர்களின் பரிசிலனை கிடைத் தது. இனி அரசாங்கத்தார் எக்காலத்திலும் தனிப்பட்ட மனிதர்கள் எழுதும் புத்தகங்களை ஸ்கூல்களில் பாடப் புத்தகமாக வைக்கவே மாட்டார்கள் என்பதற்கு ஒரு ஆதரவும் இல்லை. இவ்வெதிர்ப்பின் வேகத்தைக் குறைப் பதற்காகச் சொற்ப காலத்திற்கு இக் கட்டுத் திட்டங்கள் இருந்தாலும், இனி யொரு காலத்தில் தேச மக்களில் இஷ்டப் படுகிறவர்களெல்லோரும் தங்கள் இஷ்டப்படி புத்தகங்களை எழுதி, டெக்ஸ்ட் புக் கமிட்டியில் அங்கிகரிக்கச் செய்து, பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக வைக்கத்தான் போகி ருர்கள். அதில் அவர்கள் அறபி, பார்ஸி, சமஸ் கிருத கடின பதங்களைச் சேர்த்தால் அதனைத் தடைப் படுத்த முடியாது; பெயருக்கு மாத்திரம் சட்டத்தை ஏற்படுத்தலாம். கடின பதங்களைச் சேர்க்கக்கூடாது என்று தடை விதிக்கலாம்; ஆனுல், காரியத்தில் அப்படி ஒன்றும் நடைபெற முடியாது. ஏனெனில், கடின பதம் என்பது இன்னது என, வரை யறுக்கப்படவில்லை. அதனை வரையறுத்துக் கூறவும் முடியாது. ஒருவருக்கு ஒரு பதம் கடினமாகத் தோன்றுவது இன்னொருவருக்கு கடின பதமாகத் தோன்ருமலிருக்கலாம். ஆத லால், டெக்ஸ்ட் புக் கமிட்டியினரும்கூட இதனை அங்கிகரிப்பதில் இச்சட்டத்தை நேர்மையாக அனுஷ்டிக்க முடியாது. ஆகவே, இந்தியா விற்குப் பொதுப் பாஷையை உண்டாக்கும் முயற்சியை மாகாண சர்க்கார்கள் கைவிட்டு, மத்திய சர்க்காரிடம் ஒப்புவித்துவிட்டால், கட் டாய ஹிந்திக்காக இப்பொழுது மாகாண சர்க் கார்கள் செலவு செய்யும் தொகையை மாகாண அபிவிருத்திக்கான காரியங்களில் செலவு செய் தால் இம்மாகாணத்தில் வாழும் மக்கள் நன் மையடைவார்கள் என்று நம்புகிருேம்.

முஸ்லிம் மன்னர்களும் ஸ்திரீகளும்

இந்தியாவில் முஸ்லிம்களைத் தவிர சில ஹிந்து வகுப்பினரும் கோஷா முறையை அனுஷ்டித்து வருகின்றனர். இவ்வகுப்பினர் கோஷா முறையை அனுஷ்டிக்கும் ரீதி இஸ்லா மிய பர்தாவிற்கு ஏற்றதல்லவென்பது மெய். என்ருலும், ஹிந்துக்களிலும் ஒருவகுப்பார் கோஷா முறையை அனுஷ்டிக்கின்றனர் என்ப திற் சந்தேகமில்லை. சில ஹிந்து வகுப்பில் பால்ய விவாகம் வழக்கத்திலிருந்து வருகிறது. எனவே, இவ்வகுப்பார் கோஷா முறையை அனுஷ்டிப்பதற்கும், பால்ய விவாகப் பழக்கத் திற்கும் அவர்கள் எந்தக் காரணத்தைக் கூறிக் கொண்டாலும் நமக்கு அதன்மீது அக்கரை இல்லை. ஏனெனில், அவைகளை அவர்கள் மத தர்மம் போல் கருதி இருக்கின்றனர். ஆதலால், அவைகளைப்பற்றி குணதோஷங் கூற நாம்

விரும்பவில்லை. என்றாலும், இக்காலத்திலுள்ள சில ஹிந்து சரித்திரக்காரர்களும், முஸ்லிம்கள் பால் துவேஷங்கொண்ட சிலரும் இவர்களிடம் இருந்து வருகிற இவ்விரு வழக்கத்திற்கும் முஸ்லிம் மன்னர்கள் மீது பழியைச்சுமத்துவது தான் நமக்கு வருத்தமாக இருக்கிறது. முஸ்லிம் மன்னர்களும், அவர்களது உத்தியோகஸ்தர்களும் முஸ்லிம் அல்லாத யௌவன கன்னிகைகளைக் கற்பழித்தல், பலவந்தமாகத் தூக்கிச் செல்லல் முதலிய காரியங்களைச் செய்தனர்; அவர்கள் விவாகமான ஸ்திரீகளைத் தீண்டுவதில்லை; ஆதலால், ஸ்திரீகள் பருவ வயதை அடைவதற்கு முன்பே அவர்களை விவாகம் செய்துகொடுத்து விடும் வழக்கம் சில சமூகத்தாரிடம் ஏற்பட்டுவிட்டது, என்பதாக அவர்கள் கூறுகின்றனர். இவர்களது இக்கூற்று முஸ்லிம்கள் மீது வீண்பழி சுமத்துவதாக இருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. முஸ்லிம்களது ஆதிக்கம் இந்தியாவில் உச்சஸ்தானத்திலிருந்த போதும் சரி, வீழ்ச்சி யடைந்த பிறகும் சரி முஸ்லிம் மன்னர்கள் ஸ்திரீ விஷயத்தில் மிகக் கண்டிப்பாக நடந்து வந்திருக்கின்றார்கள் என்பதும், தங்களது உத்தியோகஸ்தர்கள் அவர்களது உத்தியோகப் பதவியை வகித்து வரும் பிரதேசத்தில் விவாகம் செய்வதையும் கூட விலக்கி இருக்கிறார்கள் என்பதும், இதரர்களின் ஸ்திரீகளைப் பலவந்தமாக மணந்துகொள்ள முயலுபவர்களுக்கு மரண தண்டனையையுங் கூட விதித்திருக்கிறார்கள் என்பதும் சரித்திரங்களிலிருந்து வெளியாகிறது.

அக்பர் சக்கிரவர்த்தியின் புதல்வர் ஜஹாங்கீர் என்பவர் பட்டத்தரசராக இருந்தும் தனது ராஜீய அலுவல்களை எல்லாம் தனது மனைவியான நூர்ஜஹானிடம் ஒப்படைத்து விட்டு, பொம்மை அரசராக இருந்தார் என்றும், சிற்றின்பப் பிரியர் என்றும் சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இவரது தந்தையின் காலமுதல் இவரது பேரர் ஔரங்கஜேப் சக்கிரவர்த்தியின் காலமுடிய மொகலாய அரச வம்சத்தினரின் ஆட்சி உச்சஸ்தானத்திலிருந்தது. இவரது ஆட்சி காலத்தில் முன்ஸிப்கான் என்பவர் முல்த்தானில் கொத்தவாலாக (போலீஸ் அதிகாரியாக) இருந்தார். இவர் விபசாரப்பிரியர். துர்நடத்தையுள்ளவர். இவர் அரச ஆடம்பரமாக முல்த்தானில் இருந்து கொண்டிருந்தார். எந்நேரமும் அவிசாரிப் பெண்களுடன் கலந்து கொண்டே இருப்பார். சுருங்கக் கூறின், இவரது வாழ்க்கையே பாவமான வாழ்க்கைஎனக் கூறுவது பொருந்தும்.

தற்செயலாக அந்தக் கொத்தவாலின் திருஷ்டி ஒரு ஹிந்துக் கன்னிகையின் மீது விழுந்து விட்டது. அவளும் அக் கொத்தவால் வசிக்கும் தெருவிலேயே குடியிருந்து வந்தாள். கொத்தவால் தனது உத்தியோக பதவியைப் பற்றிப் பெருமைபாகக் கருதி இருந்ததால், அக்கன்னிகையை விவாகம் செய்து கொள்வதாக அவளது தந்தைக்குச் சொல்லி அனுப்பினல், அவர் அதனை மறுக்க மாட்டார் என்பதாக எண்ணிக்கொண்டார். ஆகவே, அவர் தம்முடைய சில நண்பர்களை அவ்வரிவையின் தந்தையிடம் அனுப்பி, அவளைத் தனக்கு மணம் முடித்துத்தரவேணும் என்று கேட்டார்.

அந்த ஸ்திரீயின் தந்தை நல்ல நிலைமையிலுள்ள, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவராதலின் கொத்தவாலின் இத் துணிச்சல் அவருக்கு மிக அதிருப்தியை அளித்தது. ஆகவே, கொத்தவாலினல் அனுப்பப்பட்ட அந்தத்தூதுவர்களிடம் அவர் அன்பாக நடந்துகொள்ளவில்லை. தனது கோரிக்கைக்கு அந்த ஹிந்து இணங்கவில்லை என்ற விவரம் அந்த கொத்தவாலுக்கு தெரிந்தபோது ஆத்திரம் மிக உண்டாயிற்று. நியாயமோ, அநியாயமோ எவ்விதத்திலும் அந்த யுவதியைக் கைப்பற்றி விட வேண்டும் என்று திட சங்கல்பம் செய்து கொண்டார். முதலாவதாக அவளது தந்தையின் மீது பொய் வழக்கு ஒன்றைச் சற்பனை செய்து அவரை அரஸ்டு செய்தார். பிற்காலத்தில் அந்த பெண் சம்பந்தமாக ஏதேனும் வியவகாரமேற்பட்டால் தனக்கும் அந்த ஹிந்துவிற்கும் விரோதமிருந்தது என்றும், இவ்விரோதத்தின் காரணமாகத் தன்மீது அவதூறு சொல்வதாகவும் கூறித் தன்மீது குற்றம் வராமற்றடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கொத்தவாலின் கருத்து இப்பொய் வழக்கேற்பட்ட சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் காலையில் அவ்வரிவை வெளியிற் புறப்பட்டபோது அவளைத் தூக்கி வந்து எங்கேயோ ஒரு இடத்திற்கு அனுப்பி விட்டார்.

இவள் காணமற்போன செய்தி நகரில் காட்டுத் தீ போல் பரவிற்று; எங்கும் ஒரே கொதிப்பும் ஆத்திரமும் பொங்கின. நகரிலுள்ள படித்த ஹிந்து முஸ்லிம் கனவான்களிற் சிலர் இச் சம்பவத்தை ஜஹாங்கீருடைய தர்பாரிலேயே சொல்லவேண்டும் என்று முடிவு செய்த

னர். உடனே, லாகூருக்குச் சிலர் வந்தனர். அக்காலத்தில் ஜஹாங்கிர் சக்கிரவர்த்தி லாகூரில் தான் குடி இருந்து கொண்டிருந்தார். அவரது தர்பாரில் இத்தூதர்கள் சென்று விஷயத்தை விபரமாகக் கூறினர்.

ஜஹாங்கிரிடம் இச் செய்தியைக் கூறும் போது, அவரது புதல்விக்கு அம்மாதிரியான சம்பவம் நடந்ததுபோல அவ்வளவு கோபமும் ஆத்திரமும் அவருக்கு ஏற்பட்டது. இத்தூதுவர்களை அவர் அரசாங்க விருந்தினராக இருக்கச் செய்துவிட்டு, முன்ஸிப் கானை உடனே உத்தியோகத்திலிருந்து ஸஸ்பென்டு செய்து, தமது தர்பாருக்கு இழுத்துவரும் படியாக உத்திரவனுப்பினர். முன்ஸிப் கான் தான் நிரபராதி என்பதாக ருஜுச் செய்ய எவ்வளவோ முயன்றார். ஆனால், அவர் மீது குற்றம் ருஜுவாகி விட்டது. ஆகவே, முன்ஸிப் கான் அந்தப் பெண் இருக்குமிடத்தைக் காண்பிக்காவிடில், அவருக்கு மரண தண்டனை என்றும், பெண்ணை ஒப்புவித்தால் ஆயுள்கால சிறைவாச தண்டனை என்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது. இதன் பலனாக, ஒளித்து வைக்கப்பட்ட ஸ்திரீ நான்கு நாட்களுக்குப் பின் தர்பாரில் ஆஜர் செய்யப்பட்டாள். முன்ஸிப்கான் ஆயுள்கால சிறை தண்டனையை ஏற்றுச் சிறைவாசம் செய்து கொண்டிருந்தார். இவ்வாறு சில நாட் சென்றபின் சில உத்தியோகஸ்தர்கள் முன்ஸிப்கானின் தண்டனையைச் சிறிது தளர்க்க வேண்டும் என்று சக்ரவர்த்தியிடம் சிபார்சு செய்தனர். ஆயினும், அவர் அத்தண்டனையை மாற்றாமல் இக்குற்றத்திற்கு இதுதான் மிகக் குறைந்த தண்டனை என்பதாகப் பதில் கூறி விட்டார்.

மற்றொரு சம்பவம்

இச் சம்பவத்தைப் போலவே மற்றொரு சம்பவமும் மொகலாய வம்சத்தின் வீழ்ச்சிக்காலத்தில் நிகழ்ந்திருப்பதாகச் சரித்திரங்களிலிருந்து தெரிய வருகிறது. இக்காலத்தில் அமீர் ஆகா சாகிப் என்ற ஒருவர் ஒரு கத்திரி வகுப்பைச் சேர்ந்த ஒருவனின் மீது பர்யாது செய்தார். அந்தக் கத்திரியின் மனைவி இஸ்லாம் மதத்தைத் தழுவி, தன்னை விவாகம் செய்துகொண்டதாகவும், இப்பொழுது அக்கத்திரி தனது மனைவியான அப்புதிய முஸ்லிம் ஸ்திரீயை நிர்ப்பந்தமாகத் தனது வீட்டில் தடுத்து வைத்திருப்பதாகவும், அவளைத் தம்மிடம் ஒப்புவிக்கவேண்டும் என்பதாகவும் பர்யாதில் கூறி இருந்தார். தமது கக்ஷியை ருஜுப் படுத்துவதற்காக ஆகாஸாகிப் பல சாக்ஷிகளையும் விட்டார். இவ்விருவருக்கும் விவாகம் நடந்தபோது வாங்கப்பட்ட மண உடைகளையும்கூட அவர் கோர்ட்டில் சமர்ப்பித்தார். மணப்பெண்ணான அந்தப்புதிய முஸ்லிம் ஸ்திரீ அணிந்திருந்த மண உடை அந்தக் கத்ரி வீட்டை சோதனை செய்தபோது அகப்படவும் செய்தது. இந்த உடை முஸ்லிம் மணப் பெண்ணுக்கு அணிவிக்கும் உடை தினுசைச் சேர்ந்ததாகவே இருந்தது.

லாகூரில் இவ்வழக்கை விசாரித்த காஜீ சாகிப் சாக்ஷியங்களையும், இதர ரிக்கார்டுகளையும் கவனித்து "இச்சம்பவத்தை கத்ரீ மறுத்தாலும், சாக்ஷியங்களிலிருந்தும் ரிக்கார்டுகளிலிருந்தும் அந்த ஸ்திரீ இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டதாகவும், ஆகாசாகிபை விவாகம் செய்து கொண்டதாகவும் ருஜுவாகிறது. ஆதலால், அவளை அவளது முஸ்லிம் கணவனிடம் அதாவது ஆகா சாகிபிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அந்த ஸ்திரீ தற்போது ஹிந்துக்களுடன் இருப்பதால், தனது ஹிந்து பந்துக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு, அவர்களது பயமுறுத்தல்களுக் கஞ்சி தனது மதமாற்றத்தையும் விவாகத்தையும் மறுக்கக்கூடும் இல்லையேல் அவள் இதனை மறுப்பதற்கு எவ்விதக் காரணமும் தோன்றவில்லை" என்பதாக தீர்ப்புக் கூறிவிட்டார்.

விவாகம், விவாகப் பிரிவினை, இவைபோன்ற இன்னும் சில காரியங்கள் சம்பந்தமாக வழக்குகளேற்பட்டால் அதனைக் காஜி சாகிப் விசாரித்துத் தீர்ப்புக்கூறவேண்டும்; அந்தத் தீர்ப்பை மாகாண கவர்னர்கள் அங்கீகரிக்க வேண்டும். இருவரும் ஏகமனதாக அந்த வழக்கில் முடிவு செய்தால் தான் அந்தத் தீர்ப்பு அமுலுக்கு வரும் என்பது அவ்வரசாங்கத்தின் சட்டம். ஆகவே, இச் சட்டத்திற்கேற்ப, இவ்வழக்கின தகவல்களும் ரிக்கார்டுகளும், தீர்ப்பும் மாகாண அதிபதியின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் அனுப்பப்பட்டன. இந்த ரிக்கார்டுகளைப் பார்த்த மாகாண அதிபதியான ஜக்ரியாகான் என்பவர் சந்தேகங்கொண்டு, தீர்ப்பை அங்கீகரிப்பதை ஒத்திவைத்துவிட்டு, அவரே இதனை நேரில் துப்பறிய வாரம்பித்தார்.

இவ் விவாகம் கட்டுமானமாகச் சொல்லப்பட்ட விவாகமேயன்றி உண்மையான விவாகமில்லை என்றும், ஒரு வண்ணாத்தி பலர் அறிய

இஸ்லாத்தைத் தழுவி, இவ்வுடையில் ஆகா சாகிபை விவாகம் செய்து கொண்டதாகவும், அப்புறம் இவ்வுடைகளை அந்த கத்ரீ ஜாதிப் பெண்ணின் வீட்டில் வைத்து விட்டதாகவும் வெளியாயிற்று. இதன் பேரில் வழக்கு மறு விசாரணைக்கு வந்தது. எல்லா விவரங்களும் அம்பலத்திற்கு வந்தன. மண உடையை அக் கத்ரீ பெண்ணின் வீட்டில் வைத்த அவ்வண்ணாத்தி இதில் மிகச் சமர்த்தாக நடித்திருப்பதால் அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மண மகனாக இருந்தவரும் வாதியுமான ஆகா சாகிபுக்கும் மரண தண்டனை கொடுக்கப்பட்டது. இவரை ஆதரித்து சாக்ஷியங்கூறிய சாக்ஷிக்காரர்களுக்கும் பலதரப்பட்ட தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இவை மொகலாய வம்சத்தினரின் ஆட்சி காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனைகளாகும். முஸ்லிம் அல்லாத ஸ்திரீகளது கற்பையும் மானத்தையும் கண்ணியத்தையும் மொகலாய வம்சத்து அரசர்கள் எவ்வளவு தூரம் மதித்துக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதும், முஸ்லிம் அல்லாத ஸ்திரீகளின் கற்பைப் பங்கப்படுத்த முயன்ற முஸ்லிம்களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்தன என்பதும் இச்சம்பவங்களிலிருந்து விளங்கும். இவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டிருந்த அரச வம்சத்தினரைத்தான் இக்காலத்திலுள்ள சிலர், மதத் துவேஷ முள்ளவர்கள், ஒரு தலைப் பக்ஷமாக நடந்து கொண்டவர்கள், ஹிந்து மதத்தை அழிக்க முயன்றவர்கள் என்றெல்லாம் குற்றங் கூறுகின்றனர்.

ஒரு அமெரிக்கர் முன்னேற்ற மடைந்த தெங்கனம்?

ஒருவர் அமெரிக்காவில் மிகப் பிரபலமடைந்திருந்தார். ஆனால், அமெரிக்காவிற்கு வெளியில் அவரது பெயரை வெகு சிலரே கேள்விப் பட்டிருப்பர். சமீப காலத்திற்றான் அவர் மரித்தார். அவரது ஜீவியம் பிறருக்கு மிகப் பிரயோஜனகரமாக இருந்தது. பரோபகாரியான இவரது பெயர் ஆர்தர்நேஷ். இவர் இரண்டே இரண்டு தினங்கள் மட்டிலும் நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தார்.

மிஸ்டர் ஏ. நேஷ் தமது ஜீவியத்தை ஹிதோபதேசி என்ற முறையில் ஆரம்பித்தார். ஆனால், வியாபாரத்தின் மூலம் மன்பதைகளுக்கு அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும் என்ற எண்ணத்தால் அவர் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டார். கூலிக்காரர்கள், சம்பளக்காரர்களது மனதைச் சந்தோஷப்படுத்தினால் தொழில் அபிவிருத்தி யடையும் என்ற முறையில் தொழில் நடத்தினால் தமதுதொழிலுக்கு விருத்தி ஏற்படும் என்று கருதி, அவ்விதமே செய்தார். ஆகவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அவரது தொழில் ஆச்சரியப்படத்தக்க முறையில் வெற்றி யடைந்து முதற்றரமான தொழிலாயிற்று.

முதலாவதாக அவர் ஸன்ஸனட்டி என்ற ஊரில் தையற்றொழில் சாலையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அத்தொழிற்சாலை மிகவும் சிறியதாகவே இருந்தது. ஒருநாள் அவருக்கு மிகவும் மனவருத்த மேற்பட்டது. கண்டிராக்டின் பேரில் கூலிக்காரர்களிடம் துணியைத் தைக்கச் செய்வதால் அவர்களிடம் அளவிற்கதிகமான வேலை வாங்கப்படுகிறது; ஆனால், அவர்களுக்குக் கூலியாகக் கிடைக்கும் பொருள் மிக மிகக் குறைவாக இருக்கிறது; அவ்வாறு சொற்ப சம்பளம் கொடுத்தும் தொழிற்சாலை லாபகரமான முறையில் நடைபெறவில்லை என்பதை உணர்ந்து வருந்தினார். ஆகவே, கண்டிராக்டிற்கு துணிகளைத் தைக்கக்கூடாது என்ற எண்ணத்தால் தையல் மெஷின்களை அவர் முதலாவதாக விலைக்கு வாங்கினார். தொழிற்சாலையிலேயே எல்லாத் தையல் வேலைகளும் நடைபெற வேண்டும் என்பது அவரது நோக்கம். இப்படிச் செய்ததால் அவரது தொழில் இன்னும் அதிகமாக க்ஷீணித்தது. இறுதியாக தொழிற்சாலையை மூடிவிட வேண்டும் என்றும் முடிவு செய்தார். என்றாலும், இன்னும் மூன்று நான்கு மாதங்கள் வரை வேறு முறையில் இதே தொழிலை நடத்தி அதிர்ஷ்டத்தைப் பார்த்து விடவேண்டும் என்று நினைத்து, அதற்கான முறைகளைப் பற்றி சிந்திக்கலானார். அதிகமாக, ஆழ்ந்து யோசனை செய்தபின் அவருக்கு ஒரு யுத்தி தோன்றிற்று. "பிறர் நம்மை எவ்வாறு நடத்த வேண்டுமென்று எதிர் பார்க்கிறோமோ அவ்வாறு நாம் பிறரை நடத்தவேண்டும்" என்ற யுக்தி தோன்றிற்று. இந்த யுக்தி அவர் மனதிற்றோன்றிய வுடன், இனிமேல் எப்பொழுதும் இதே முறையிற்றான் தொழில் நடத்தவேண்டும் என்று திட்டம் செய்து கொண்டார். இத்திட்டத்தின் படி வேலையையும் ஆரம்பித்தார். எதிர்பார்த்த

தற்கு அதிகமான லாபமும் கிடைத்தது. இவ்வித மிருக்கையில் ஒரு நாள் அவர் தமது தொழிற்சாலைக்குட் சென்றார். முதலாவதாக அவருக்கு ஒரு கிழவிதான் தென்பட்டாள். அவளது வயது மிஸ்டர் ஆர்தர்நேஷின் அன்னையின் வயதிருக்கும். துணிகளில் பொத்தான்களை வைத்துத் தைக்கும் வேலை அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அவளுக்கு வாரத்தில் 4 டாலர் கூலி. அவளுக்குக் கிடைக்கும் கூலி மிகச் சொற்பம். "இவளுக்கு வாரத்திற்கு 12 டாலர் கூலி கிடைத்தால் தான் எனது மனத்திற்குச் சாந்தி ஏற்படும்" என்பதாக அவர் மனதிற்குள்ளாகச் சொல்லிக் கொண்டார்.

ஆகவே, அவளுக்கு 4 டாலரிலிருந்து 12 டாலருக்குக் கூலியை உயர்த்தினர். அப்புறம் ஒவ்வொரு தொழிலாளியின் வேலையையும் பரிசீலனை செய்தார். அங்கு மொத்தம் 29 பேர் வேலை செய்து கொண்டிருந்தனர். எல்லோருக்கும் ஏககாலத்தில் இரட்டிப்புச் சம்பளத்தை உயர்த்தினர். அதற்கப்புறம், அவர் நோய்வாய்பட்டார். ஆதலால், இரண்டு மாதகாலம் வரை தொழிற்சாலைக்குவர அவரால் முடியவில்லை. சுகத்திற்காக வேறு ஒரு ஊருக்கு இக்காலத்திற்செல்லவேண்டிய நிர்ப்பந்தமு மேற்பட்டது. பிறகு தேகசுக மேற்பட்டதும் தொழிற்சாலையைப் பார்க்க வந்தார். தொழிற்சாலை நஷ்டத்தில்தான் வேலை செய்துகொண்டிருக்கும்; ஆதலால், அங்கு சென்றதும், அதனை மூடிவிடுவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டியதேற்படும் என்று நினைத்துக்கொண்டே வந்தார்.

ஆனல் தொழிற்சாலைக்கு வந்தபின் அவருக்கேற்பட்ட ஆச்சரியத்திற்கு எல்லை இல்லை. தொழிலாளிகளில் அக்கிழவி ஒருத்தி மட்டிலும் தான் தொழிலுக்கு வராமல் நின்றிருந்தாள். என்றாலும், 29 பேர்களுக்கு பதிலாக 30 பேர்கள் இப்பொழுது வேலை செய்து கொண்டிருந்தனர். ஆனல், இதற்குமுன் நடந்து கொண்டிருந்த வேலையைப் பார்க்கினும் இப்பொழுது மும்மடங்கு அதிகமான வேலை நடந்துகொண்டிருக்கிறது. செலவைப் பார்க்கினும் வரும்படி அதிகமாகவும் இருந்தது. எஞ்சி இருந்த ரூபாய்களை எல்லாம் பாங்கியில் போட்டு வைத்திருந்தனர். இனி என்ன செய்யலாம்? என்று அவர் எண்ணினர். எஞ்சி இருக்கும் ரூபாய்களை எல்லாம் வேலைக்காரர்களுக்கு அவரவர் திறமைக்குத்தக்கவாறு சமமாகப் பிரித்துக் கொடுப்பதுதான் சரியான முறையாகும் என்று கருதினர். அவ்விதமே பங்கு வைத்துக் கொடுத்தார். இதனல் தொழிற்சாலைச் சொந்தக்காரருக்கும் தொழிலாளருக்கு மிடையில் உண்மையான சகோதரத்துவம் உண்டாகிவிட்டது.

இப்போதோ தொழிற்சாலை இரவு பகலாக முன்னேற்றமடைய வாரம்பித்தது; லாபமும் குவியத்தொடங்கியது; ஜனங்களும் ஏராளமாக அவரிடம் துணிகளைத்தைக்க வந்தனர். வாரத்தில் 44 மணி நேரம் தான் வேலை செய்யப்பட்டது. வாடிக்கைக்காரர்களுக்கு நல்ல உயர்தரமான உடைகள் கிடைக்கத் தொடங்கின. 1919-ம் வருஷத்தில் அத்தொழிற்சாலை 29 ஆயிரம் பவுனுக்குத்தான் வேலை நடந்திருந்தது. ஆனல், 1920 ம் வருஷத்தில் 4 லக்ஷம் பவுனுக்கு வேலை நடந்தது.

இது அமெரிக்காவிலுள்ள தையற்றொழில்காரர் ஒருவர் முன்னேற்றமடைந்த விபரம். இவர் எடுத்துக் கொண்ட இந்த யுக்தி முஸ்லிம்களுக்குப் புதியதல்ல. 1300 வருஷங்களுக்கு முன்பே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மனித வர்க்கத்தாருக்குப் போதித்த உபதேசமாகும். வியாபாரத் தொழிலிலும் "முலாரபா" முறையில் தொழில் நடத்தும்படி அப்பெருமகர் நமக்கு உபதேசித்து விட்டுச்சென்றிருக்கிறார்கள். ஆனல், இக்காலத்திலோ நம்மவருக்குப் பேராசை அதிகமாகி விட்டதால் திறமைசாலிகளான ஏழைகளுக்கு நல்ல கூலியைக் கொடுக்காமல் அதிக வேலை வாங்கமூலதனம் படைத்தவர்கள் விரும்புகிறார்கள். சொற்பக் கூலியை, குடும்பத்திற்குப் போதாத வருவாயைப் பெற்றுக் கொண்டு உண்மையுடன் உழைக்க ஏழைகளும் விரும்புவதில்லை. இதனல் நம்மவர் செய்யமுற்படும் தொழில் அபி விருத்தியடையாமல் நாளுக்கு நாள் க்ஷீணிக்கிறது. இதனை நம்மவர் ஒருபடிப்பினையாகக் கொண்டு, கூலிக்காரர்கள், சம்பளக்காரர்களது வயிற்றிலடிக்காமல், அவர்களது மனதைத் திருப்திப்படுத்தித் தங்களது தொழில்களை அபிவிருத்தி செய்வார்களாக.

காதலுக்காகவா மணம் புரிதல்?

உலகம் பிறந்த காலம் முதல் மண வாழ்க்கை மனித அபிவிருத்திக்கு இன்றியமையாததாக இருக்கிறது. உலகத்திலுள்ள சகல மதங்களும் மணவாழ்க்கையை போற்றியே வருகின்றன. குடும்பத்தை நடத்தும் முறை முதலிய விஷயங்களைப்பற்றி ஒவ்வொரு மதத்திலும் சட்டதிட்டங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மனித வர்க்கத்தில் மட்டுமில்லாமல் இதர மிருகங்களிலும், விருக்ஷங்களிலும்கூட ஆண் பெண் என்ற இருஜாதி இருந்து கொண்டுதா னிருக்கிறது. சுருங்கச் சொல்லுமிடத்து, ஒவ்வொரு வஸ்துவிற்கும் ஒரு ஜோடி இருந்தே வருகிறது. என்ருலும், இற்றைநாளிலுள்ள சிலர், நவீன நாகரீகம் பெற்றவர்களிற் பலர் மணம் புரிவதன் நோக்க மென்ன வென்பதைக் கவனியாமல் "காதல் மணம்" என்று கூறிக்கொண்டு, தங்களது காம இச்சையை நிறைவேற்றிக்கொள்ள ஜாதி மத பேதங்களைக் கவனியாமல் கலப்பு மணம் புரிகின்றனர். கலப்பு மணம் புரியாதவர்களிலும்கூட சில தம்பதிகள் தங்களது காம இச்சையை நிறைவேற்றிக் கொள்வதையே முதன்மையாகக் கருதுகின்றனர். சதிபதிகளுக்கிடையில் ஏதேனும் சிறிது பிணக்கேற்பட்டால் பெரும்பாலும் ஸ்திரீகள், "தங்கள்மீது தங்கள் பர்த்தாக்களுக்கு அன்பில்லை, வேறு ஸ்திரீயின்மீது ஆசை வைத்திருக்கிருர்" என்று மிகச் சுலபமாகக் கூறி விடுகின்றனர். இப்படிக் கூறுவது முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் என்ற பாகுபாடின்றி எல்லா ஜாதி ஸ்திரீகளிடத்திலும் பொதுவாக இருந்து வருகிறது. இதனைக் குறித்து அமெரிக்காவிலுள்ள பிரபல ஆசிரியரான R. பிலிப் என்பவர் ஒரு வியாசத்தை எழுதி அந்நாட்டுப் பத்திரிகை ஒன்றில் பிரசுரம் செய்திருக்கிருர். அதன் சாராம்சம் வருமாறு:—

"எனது கணவர் என்னிடம் காதல் கொள்ளவில்லை; அவர் என்மீது அன்பு கொள்ள வேண்டும்; அன்பென்னும் வெள்ளத்தில் மூழ்கவேண்டும்; தனது உணர்ச்சியை என்னிடம் வெளியிட வேண்டும் என நான் விரும்புகிறேன்; என்ருலும், அவர் என்னிடம் அபிமான மில்லாதவராகவே அவரை நான் காண்கிறேன்" என்று புகார் கூறுவது ஒன்றிரண்டல்ல, பல ஸ்திரீகள் கூறுவதை நான் நேருக்கு நேர் செவியேற்றிருக்கிறேன். கிட்டத்தட்ட ஒவ்வொரு ஸ்திரீயும் தனது மணுளனைக் குறித்து இவ்வாறு முறையிடுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனல், அவ்வேழை ஸ்திரீகளுக்கு என்ன தெரியும்? மனைவியர் காம விகாரத்தை நிவர்த்திசெய்வதற்காக மட்டுமில்லை, அவர்களது அந்தஸ்து, மணம்புரிவதன் நோக்கம் இதினும் மிக உயர்ந்தது.

பர்த்தாக்கள் காம விகாரத்தைத் தீர்ப்பவர்கள் என்ற எண்ணம் பதிவிரதைகளுக்கு எங்கிருந்துதான் உண்டாயிற்ருே? தெரியவில்லை. கணவனது கடமைகளில் அவன் மனைவியிடங் காதல் கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்பது எவ்வாறு ஏற்பட்டது என்பது என் அறிவிற்கு எட்டவில்லை. கணவன் மனைவிகளுக் கிடையிலுள்ள சம்பந்தம், காதல் காமம் என்ற சம்பந்த முடையதாயில்லை, அது ஒரு வாழ்க்கையின் சம்பந்தம்; இச் சம்பந்தத்திற்கும் காமத்திற்கும் மிகத் தூரமான சம்பந்தங்கூட இல்லை.

தங்களிடத்தில் ஆடவர்கள் காதல் கொள்ளவேண்டும், அன்பு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஸ்திரீகளது இருதயத்தில் தோன்றியதற்கு பொறுப்பற்ற வாலிபர்களின் தூரதிருஷ்டி இல்லாத செய்கைகளே காரணம் என்று நான் கருதுகிறேன். விவாகம் முடிந்த ஆரம்பக் காலத்தில் தவறானதும் பொய்யானதுமான அன்பை வெளியிட்டு ஸ்திரீகளைத் தவறில் ஆழ்த்தி விடுகின்றனர் அவ்விளங்காளையர்கள். தவறில் ஆழ்த்தும் இதே செய்கைதான் பிற்காலத்தில் சதிபதிகளுக்கிடையில் பிணக்கு உண்டாகுவதற்குக் காரணமாக இருக்கிறது.

நமக்கு ஒரு ஸ்திரீயின்மீது அன்பேற்பட்டு விட்டது, காதல் உண்டாகிவிட்டது என்ற காரணத்திற்காக நாம் அவளை மனைவி யாக்குவதில்லை என்பதை நீங்கள் உறுதியாக நம்புங்கள். எதற்காக ஸ்திரீகள் சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றனரோ அந்தப் பொறுப்புக்களை அவர்கள் தங்கள் சிரமேற்றாங்கிக் கொள்வார்கள் என்ற எண்ணத்திற்காகவே நாங்கள் ஸ்திரீகளை வாழ்க்கைத் துணைவிகளாகக் கொள்கிறோம். ஸ்திரீயானவள் நமது குடும்ப வாழ்க்கையை ஒழுங்கானதாகவும் நேர்மையானதாகவும் ஏற்படுத்த வேண்டும்; திறமையான ஒரு மானேஜரைப்போல் வீட்டுக் காரியங்களைச் செவ்வைப்படுத்த வேண்டும்; அவளுடன் புதிய சந்ததியினர் உண்டாகவேண்டும் என்பதுதான் ஸ்திரீயின்வேலை. இக்காரியங்களுக்காக காதல் வேண்டும் என்ற அவசியமில்லை, அன்பு தேவையில்லை. இக்காரியங்களுக்காக ஸ்திரீகள் புத்திசாலியாகவும், விவேகியாகவும், கெட்டிக்காரியாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

சில கனவான்கள் காதல், காமம் என்ற விகாரங்களில் பீடிக்கப்பட்டபின், விவாகம் செய்து கொள்கின்றனர். என்னுடைய இவ்வபிப்பிராயத்தை இத்தகைய நண்பர்கள் ஆக்ஷேபிக்கக்கூடும், ஆனால், அவர்கள் தவறிலிருக்கிறார்கள் என்று அவர்களுக்கு நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர்களிடம் இன்னமும் வாலிப உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. இதனாற்றான், காதல் மணத்தின் கெடுதல்களை அவர்கள் உணரவில்லை. வாலிபம் என்ற போதை அவர்களை விட்டிறங்கும்போது, உணர்ச்சி என்ற புயலுக்குப் பதிலாக உசிதம் அநுசிதம் என்ற சக்தி தோன்ற வாரம்பித்துவிடும். அது போழ்து, கடமை மணத்தின்முன் காதல் மணம் எப்பொழுதும் தோல்வியடைந்தே வந்திருக்கிறது என்பது அவர்களுக்குப் புலப்படும்.

காதல் மணம் எப்பொழுதும் ஒரு உணர்ச்சியின் பேரிலே நடைபெறுகிறது. இருதரத்தாரும் காதல், உணர்ச்சி ஆகியவைகளினால் குருடராகி, பிற்காலத்தில் விளையும் பயனை லக்ஷியம் செய்யாமல் தாம் பத்திய பந்தத்தில் இணைந்து விடுகின்றனர். இந்த நுட்பமான நிலைமையில் நாகரீக வித்தியாசத்தையோ, அல்லது இயற்கை வித்தியாசத்தையோ அவர்கள் கவனிப்பதுமில்லை, சிந்திப்பதுமில்லை. இருகுடியர்களைப் போலாகிவிடுகின்றனர். மதுவின் போதையிலேயே விவாக காரியத்தை நடத்திக்கொள்கின்றனர். பின்னர், இந்த போதை இறங்கும்போது அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தவறை உணருகின்றனர்.

கடமை விவாகத்தில் காதல் என்ற குருட்டு உணர்ச்சி கலந்திருப்பதில்லையாதலின், ஸ்திரீ புருஷன் ஆகிய இருவரும் நன்கு ஆலோசனை செய்து, விஷயத்தை உணர்ந்து ஒருவரை ஒருவர் திருப்தியுடன் ஏற்றுக்கொள்கின்றனர். தீர்க்காலோசனை செய்து, விஷயத்தை உணர்ந்து இக்காரியத்திற்கு அவர்கள் அடியெடுத்து வைப்பதன்பயனாக அவர்களது வாழ்க்கை ஒன்றுபோல் நிரந்தரமாக, நேர்மையான முறையில் நடைபெறுகிறது.

புருஷர்களிடமிருந்து காதலை எதிர்பார்க்கிற ஸ்திரீகள் உண்மையாகவே தவறிலிருக்கின்றனர். விவேகமும் அறிவும் உள்ள எந்தக்கணவனும் தனது மனையாட்டியினிடம் பயித்தியக் காரத்தனமான காதலைக் கொள்ளமாட்டான்; அவளது ஜீவியம் நடுத்தரமான நிலைமையில் நடைபெறவேண்டும் என்றே முயற்சி செய்கிறான். காதல் வேட்டை, காம நுகர்ச்சி பிரயோஜனமற்றதும் முட்டாட்டனமானதுமான ஒரு செய்கையாகும். அறிவை விரும்பும் வகுப்பினர் இதனை விட்டு எப்பொழுதுமே ஒதுங்கி இருந்து வருகின்றனர்.

"காதல், காமம் என்பதை அடிப்டையாகக் கொள்ளாமல், நடைபெறுகிற மணம்தான் வெற்றிகரமானது என்று சொல்லவேண்டும். ஏனெனில், காதல் மணம், அல்லது மணத்திற்குப்பிறகு காதல் இவை இரண்டும் இந்த ஜீவியத்தின் திட்டத்தை சின்னபின்னமாக்கி விடுகின்றன" என்பதாக அமெரிக்காவிலுள்ள பிரபலதலைவரான இப்ராஹீம் நிகல்ஸன் கூறிக்கொண்டிருந்தார். இப்ராஹீம் நிகல்ஸன் மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லாப் பேரறிஞர்களும் "விவாகமும் காதலும் ஒன்றுக்கொன்று நேர் முரணான இரண்டு காரியங்கள்" என்பதாகவே அபிப்பிராயம் கூறிஇருக்கின்றனர்.

உண்மையை நீங்கள் விசாரிப்பீர்களாயின், கணவன் மனைவி என்ற பந்தமே தொழில் முறையிலேற்படும் பந்தத்தைப் போலிருக்கிறது என்றுகூற முடியும். திறமையான ஒரு ஊழியர் இரண்டு பெரிய தொழிற்சாலையை இணைத்து லாபகரமாக நடத்துவதுபோலவே, அறிவுள்ள தம்பதிகளிருவரும் தாம்பத்திய வாழ்க்கையை நடத்தவேண்டும். இரு தொழிற்சாலைகளுக்கு மிடையில் காதலோ காமமோ இல்லாமலிருந்தும் அவைகள் வெற்றி கரமாக நடப்பதுபோல இவ்விரு தம்பதிகளும் காமம், காதல் என்பதை அடிப்படையாகக் கொள்ளாமல் வெற்றிகரமாக வாழவேண்டும்.

புருஷர்கள் காதல் கொள்ளவில்லை என்று குறைகூறுவதை ஸ்திரீகள் விட்டுவிட வேண்டும். ஆனால், கணவனாக இருப்பதற்குரிய கடமைகளை அவன் சரியாக நிறைவேற்றுகிறானா இல்லையா? என்பதை அவள் கவனிக்கவேண்டியது அவசியம். அவன் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதில் அசிரத்தையாக இருக்கிறானா? இல்லையா? மனைவியின் அவசியங்களை எந்த அளவிற்குக் கவனிக்கிறான்? என்பதை அவள் கவனிக்க வேண்டும். இதனைப்பார்க்கினும் அதிகமாக அவள் சிந்திப்பாளாயின் அவள் மனைவியல்ல. அவள் ஏமாற்றல், பித்தலாட்டம் என்ற உலகில் இருக்கவிரும்புகிற ஒரு குடித்தனக்காரி என்றே அவளைக்கூறவேண்டும்"

இப்பேரறிஞரின் நல்லுபதேசத்தை மக்கள் பின் பற்றி யொழுகுவார்களாக.

மேனாட்டுச் சதிபதிகள்.

இஸ்லாம் மதத்தின் மீது அந்நியர்கள் கூறும் தோஷங்களில் "விவாக விஷயத்தில் இஸ்லாம் மதம் ஸ்திரீகளுக்கு அநீதி செய்திருக்கிறது; விவாக விலக்குச் செய்யும் உரிமையைக் கணவனிடம் ஒப்பு வித்திருக்கிறது; கணவன் இஷ்டப் பட்டால் எவ்விதக் காரணமுமின்றி மனைவியை விவாக பந்தத்திலிருந்து விலக்கி விடலாம்; ஆனால், ஸ்திரீக்கு அவ்வுரிமை அளிக்கப் படவில்லை; கணவன் எவ்வளவு கொடுமை செய்தாலும் அதனைச் சகித்துக் கொண்டு இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஸ்திரீகளுக்கு இருக்கிறது" என்ற குற்றச் சாட்டும்

ஒன்ருகும். இஸ்லாம் பதம் ஸ்திரீ புருஷர் ஆகிய இருவருக்கும் விவாக ஒப்பந்தம், விவாக விலக்கு ஆகிய சகல காரியங்களிலும் உரிமை அளித்திருக்கிறது. ஸ்திரீகள் கணவன்மார்களால் கொடுமையாக நடத்தப் பட்டால், அக்கொடுமையினின்றும் தப்பித்துக் கொள்ள இஸ்லாம் மதச் சட்டங்கள் இடங்கொடுக்கின்றன. அவசியமேற்படின், விவாக பந்தத்தை அறுத்துக் கொள்ளாமல் முடியாது என்றிருந்தால் விவாக பந்தத்தை சட்டப்படி முறித்துக் கொள்ள ஸ்திரீக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையைத்தான் "குல்உ" என்பதாகச் சொல்லப்படுகிறது. இன்ஷா அல்லாஹ் சமயம் வாய்த்தால் இதனைப் பற்றி விரிவாக எழுதலாம். ஆனால், ஒரு விஷயத்தை மட்டிலும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகும். விவாக விலக்கு செய்யும் உரிமையை புருஷர்களிடம் விட்டுவைத்திருப்பதற்கும், விவாகப் பிரிவினையை கோர்ட்டு மூலம் அடைய வேண்டுமென்று மனைவிக்கு அனுமதி அளித்திருப்பதற்கும் யாது காரணம் என்பதை இப்பொழுது மேனுடுகளில் நடைபெறும் விவாக விலக்கு வழக்குகளிலிருந்து தெரியவரும். மேனுடுகளில் விவாக விலக்குகளைக் கோர்ட்டு மூலமாகத்தான் செய்து கொள்ள வேண்டும். ஸ்திரீ புருஷர் ஆகிய இவ்விருவரும் விவாக விலக்கிற்காக ஒருவர் மீது மற்றொருவர் வழக்குத் தொடுக்கலாம். அந்நாட்டுச் சட்டத்திற்கேற்ற காரணங்களை ருஜூச் செய்தால் விவாக விலக்குச் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்படும். இல்லையேல், வழக்குத் தள்ளுபடி செய்யப்படும். இக்கோர்ட்டுகளில் விசாரணைக்கு வந்த இரண்டொரு வழக்குகளை நேயர்கள் படித்துணர்ந்து மேனுட்டுச்சதிபதிகள் நிலை எவ்வாறிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்வார்களாக.

1. ஒருவனை மணந்துகொண்ட ஒரு மிஸ் ஸாஹிபா இரண்டு வருஷங்கள் வரை தன் கணவனுடன் வாழ்ந்து விட்டு, அப்புறம் அவனிடமிருந்து விவாக விலக்குப் பெறவேண்டும் என்று விரும்பினள். விவாக விலக்குக் கோர்ட்டில் பர்யாது செய்தாள். அவளது பர்யாதில் அவள் விவாக விலக்குப் பெருவதற்காகக் கூறி இருக்கும் ஸ்டேட்மெண்டில், "எனது கணவன என்னை அளவிற்கதிகமாக நேசிக்கிருன்; இன்றுவரை அவன் எனது மனத்திற்குப் பிடிக்காததைச் செய்பவில்லை; என்னை வருத்தப்படுத்தவுமில்லை; என்னுடைய பல கெட்ட பழக்கங்களையும்கூட அவன் மலர்ந்த முகத்துடன் சகித்துக்கொண்டான்; எந்தக் காரியத்தையும் செய்யவேண்டாம் என்று என்னை அவன் தடுக்கவுமில்லை; எக்காரியத்தைக் குறித்தும் என்னை அவன் கண்டிக்கவுமில்லை என்றும், நான் ஸ்திரீ ஜாதியைச் சேர்ந்தவளாகையால் சிற்சில சமயங்களில் கணவன் மனைவிக்கிடையில் சிறு சிறு பிணக்குகளுமிருக்க வேண்டுமென விரும்புகிறேன்; பிணங்கிக்கொள்ளலும், பிணக்கைத் தீர்த்தலும் கூட இந்த ஜீவியத்திலுள்ள இன்பகரமான வாழ்க்கையின் முக்கிய காரியங்களாக இருக்கின்றன; இதற்கு சந்தர்ப்பம் வாய்க்காத இடங்களில், ஒரே நேச வாழ்க்கையிலிருப்பது இந்த ஜீவியத்திற்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது; இந்த இரண்டு வருஷ காலத்தில் அமைதி, சமாதானம், பிணக்கில்லாமை ஆகிய இந்நிலைமைகளுக்குள் நான் எப்படி ஜீவித்திருந்தேன் என்பதே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது, நாங்களிருவரும் பிரிந்துவிடுவதுதான் சிறந்தது" என்பதாக எழுதப்பட்டிருந்தது.

அன்பர்காள்! விவாக விலக்குச் செய்து கொள்வதற்காக இந்த ஸ்திரீ கூறிய காரணத்தை நன்கு கவனியுங்கள். எவ்வளவு விசித்திரமானது? கணவன் நேசிக்கிருன், அதிலும் அளவிற்கதிகமாக நேசிக்கிருன், என்பதுதான். இதனைப் பார்க்கினும் அதிக முக்கியமான காரணம் அவளுக்குக் கிடைக்கவில்லை. விவாக விலக்குச் செய்துவிடுயபடி நிர்ப்பந்திக்கப்படுவதற்குக் கணவனின்மீது இதனைப் பார்க்கினும் அதிகக் கடுமையான குற்றம் வேறு ஒன்றையும காணேம்.

2. மற்றொரு மிஸ் ஸாஹிபாவான மிஸ் ஹேலன் என்பவள் விவாக விலக்குக்கோர்ட்டில் ஒரு பர்யாது செய்தாள். "தனது கணவன் தன்னை முத்தமிடுவது நாளுக்குநாள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வருகிறது" என்பதாக அந்த தாவாவில் அவள் குற்றம் கூறி இருந்தாள். இதற்குப் புருஷன் மறுமொழி கூறுகையில் "இப்பொழுது நான் முன்னிருந்ததைப் பார்க்கினும் அதிகமாகவே முத்தங் கொடுத்துககொண்டிருக்கிறேன் என நினைக்கிறேன். ஏனெனில், எனது முகவாய்க்கட்டை எலும்புகளெல்லாம் அலுத்துவிட்டன. எப்பொழுதுமே எனது முகவாய்க் கட்டையில் அலுப்பின் அறிகுறி காணப்பட்டுக்கொண்டே இருக்கிறது" என்பதாகக் கூறினன்.

இதன்பேரில் ஜட்ஜ் "இனிமேல் முத்தங் கொடுப்பதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறி இருவரையும் அனுப்பிவிட்டார்.

3. மிஸஸ் பிலிப் என்பவளுக்கு விவாகமாகி எட்டு வருஷங்களாகின்றன. இரண்டு குழந்தைகளுமிருக்கின்றன. இவர்களது வாழ்க்கை வெளித் தோற்றத்தில் நல்லவிதமாகவே இருந்தது. ஆனால், ஸ்திரீகளின் நூதனமான தன்மை இந்த இணக்கத்தையும் ஒற்றுமையையும் எத்தனை காலத்திற்குத்தான் சகித்துக்கொண்டிருக்கும்? அவளுக்கு மனதிற்குள்ளாகவே வெறுப்புத் தோன்றிற்று. ஒருநாள் தனது கணவன் மரத்தின்மீது ஏறுவதைப் பார்த்து விட்டாள். அவளுக்குப் பொறுமையாக இருக்க முடியவில்லை. உடனே, விவாக விலக்குக் கோர்ட்டுக்கு பர்யாதுடன் சென்றாள். கோர்ட்டில் அவள் கொடுத்த வாக்குமூலத்தில் "எனது புருஷன் மரத்தின்மீதேறுகிறான்; ஏறும்போது முற்றிலும் குரங்கைப்போலவேதான் தோன்றுகிறான்; விவாகத்திற்குமுன் எனது கன்னிப் பருவ காலத்தில் இவ்விபரத்தை நான் அறியவில்லை; இவ்விதமான மனிதனுடன் நான் ஒரு நிமிஷ நேரங்கூட குடித்தனம் செய்ய என்னால் இயலாது" என்று கூறினாள்.

4. மிஸஸ் எட்வின் என்பவள் விவாக விலக்குக் கோர்ட்டில் தாக்கல் செய்த பிரயாதில் "மிஸ்டர் எட்வின் என்னை விவாகம் செய்த காலத்தில் என்னை முத்தமிட்டபோது அவரது முகத்திலிருந்த உஷ்ணம் இப்பொழுது இல்லை. ஆதலால், எனக்கு விவாக விலக்குக் கிடைக்க வேண்டும்" என்று புகார் கூறி இருந்தாள்.

5. மிஸஸ் பேக்கர் என்பவளுக்கு நாய்கள் மீது அதிகப் பிரியமிருந்தது. ஒருநாள் அவள் தனது பிரியமான நாய்க்கு சோப்புத்தேய்த்து குளிப்பாட்டி சீப்புப்போட்டு நாயின் மயிரைச் சீவிக்கொண்டிருந்தாள். இதற்குள்ளாக அவளது கணவன் மிஸ்டர் பேக்கரும் வந்து விட்டான். புருஷன் தன்னுடைய சீப்பை அடையாளங் கண்டுகொண்டான். தனது சீப்பினால் நாயின் மயிரைச் சீவி விட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்கு கோபம் வந்தது. இப்படிக் கோபம் வருவது இயற்கையுமாகும். கொஞ்சம் கடுகடுப்பாக, "நாய்க்காக எனது சீப்புத்தான் கிடைத்ததோ" என்று கூறினான்.

அதற்கவள் "அன்பே, நான் முதலில் இந்தச் சீப்பை நன்றாகக் கழுவிக்கொண்டேன். அப்புறம்தான்................" என்று கூறினாள். அதற்குள் அவன் "சரி, போதும், சும்மா இரு" என்று கூறி விட்டான்.

மறுநாள் தம்பதிகளிருவரும் கோர்ட்டு அறைக்கு வந்து விட்டார்கள். கணவன் கொடுத்த மனுவின்பேரில் விசாரணை நடந்தது. "இந்த அவமதிப்பை"க் காரணமாகக் கொண்டு அவளை விவாக விலக்குச் செய்து விட கோர்ட்டார் அனுமதி கொடுத்தனர்.

6. மனிதனுக்கு ஒரு விஷயத்தில் வெறுப்போ அலுப்போ ஏற்பட்டு விட்டால் அதனை விட்டு விடுபடுவதற்கு விதம் விதமான யுக்திகளைத் தேடுவது மனித இயற்கையிலிருந்துவருகிறது. மிஸஸ் எடிஸன் என்பவள் சம்பந்தமான சம்பவம் இதற்குப் போதிய சாக்ஷியமாகும். இவள் தன்னை மணந்துகொள்ள முற்பட்டவன்மீது ஆரம்ப காலத்தில் மிகப் பிரீதியாக இருந்தாள். மிஸ்டர் எடிஸன் இவளை மணந்துகொண்டபின் இவனுக்காகத் தனது உயிரையும்கூடக் கொடுத்து விடத் தக்கவாறு அவ்வளவு அபிமானம் கொண்டிருந்தாள்; அவன் செய்யும் பெரும் பெரும் தவறுகளை எல்லாம் கூட அவள் இன்பமாகவே கருதி வந்தாள்; சுருங்கக்கூறின், மிஸ்டர் எடிஸனைப் பார்க்கிலும் சிறந்த மனிதன் உலகில் வேறு யாரும் பிறக்கவே இல்லை என்று கருதி இருந்தாள். விவாகமாகி இரண்டு மூன்று வருஷ காலம் இவ்விரு சதிபதிகளும் சந்தோஷமாகவும் இன்பகரமாகவும் கூடி வாழ்ந்து காலத்தைக் கழித்தனர். என்றாலும், எத்தனை நாட்களுக்கு இவ்வின்பம்? மிஸஸ் பர்டனுக்கு (முதலில் மிஸஸ் எடிஸன்) தனது கணவன் மிஸ்டர் எடிஸனிடம் எவ்வித இன்பமும் இருப்பதாகத் தோன்றாத காலம் வந்தது. அவனிடமிருந்த நல்ல அம்சங்களெல்லாம் அவனது குறைகளாகவே தோன்றின. ஆகவே இவ்வாழ்க்கையை விட்டுப் பிரிந்துவிடவேண்டுமென்று விரும்பினாள். அதற்காக "சரியான காரணம்" கூறவேண்டுமல்லவா? தனது விசாலமான அறிவில் அதனை ஆராய்ந்து கண்டுபிடித்தாள். விவாக விலக்குச் செய்து கொள்ள கோர்ட்டில் மனுப் போட்டாய் விட்டது. வழக்கும் விசாரணைக்கு வந்தது.

"எனது கணவன் அதிகாலையில் எழுந்து விடுகிறான்; என்னை படுக்கையில் தனிமையாக விட்டுவிடுகிறான்; ஆனால், காலை நேரத்தின் அந்த இளங்காற்று வீசும்போதுதான் அதிக

இன்பகரமாகவும், மன ரம்மியமாகவும் இருக்கிறது; அவன் அதிகாலையில் எழுந்து விடுவதால் அவன் பக்கத்தில் இல்லாதிருப்பது எனக்கு அதிகக் கஷ்டமாகவும் துயரமாகவும் இருக்கிறது. ரொம்பக் காலமாக நான் இதனைச் சகித்துக்கொண்டிருந்தேன். பொறுமைக்கு எல்லையுண்டல்லவா? பொறுமை என்ற பானகம் பொங்கி வடிகிறது. விவாக விலக்குச் செய்து கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை'' என்று வாக்குமூலம் கொடுத்தாள். இறுதியாக விவாக விலக்குச் செய்து கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது.

சோதரீர், விவாக விலக்குச் செய்துகொள்ள ஸ்திரீகளுக்கு ஆடவர்களைப்போல் உரிமை அளிப்பதால், அதனை ஸ்திரீகள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதை இச்சம்பவங்களிலிருந்து தெரிந்து கொள்வீர்களாக.

நஞ்சோதர்களின் மனப் பான்மை.

இந்தியா மிக விசாலமான தேசம். உலகின் ஜனத்தொகையில் ஐந்திலொரு பாகத்தைத் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. உலகில் எத்தனை மதங்களிருக்கின்றனவோ அத்தனை மதங்களும் இந்தியாவில் இடம் பெற்றிருக்கின்றன என்று கூட கூறலாம். உலகிலுள்ள செல்வம் மிகுந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலகிலுள்ள எல்லா தேசத்தாரும் இந்தியாவில் வியாபாரம் செய்ய வருகின்றனர். யாவரும் கொழுத்த செல்வம் திரட்டிக் கொள்கின்றனர். கப்பல் தவறாமல் தங்கத்தையும் அள்ளிச் செல்கின்றனர். ஒவ்வொரு தேசத்தாரும் இந்தியாவின் மீது ஆசை கொள்கின்றனர். இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்தும் பிரிட்டிஷாருக்கு இந்தியாவினாலேயே உலகில் முதன்மை ஸ்தானம் கிடைத்திருக்கிறதென்றும், இந்தியாவினாலேயே இங்கிலாந்தின் மீது மற்றவருக்குப் பொறாமையும் துவேஷமும் ஏற்பட்டிருக்கிறது என்றுங் கூடச் சொல்லலாம். இவ்வளவிற்கும் இந்தியா தான் காரணம். ஆனால், இந்திய மக்களின் நிலைமையை நாம் சிந்திப்போம்: இயற்கை வசதியை இவ்வளவு அதிகமாகப் பெற்றுள்ள இந்தியர் இன்று பிறரால் அடிமைகளாக்கப்பட்டிருக்கின்றனர். பிற நாட்டாரது இஷ்டத்திற்கு விரோதமாக இந்தியர் நடந்து கொள்ள முடியாது. பிறரது நன்மைக்காக இந்தியர் நஷ்டம் அடைய வேண்டும். இதனைத் தவிர, இந்தியர் நிலை வேறு ஒன்றுமில்லை.

இதற்குக் காரணம் என்னவெனில், இந்தியரின் பேராசையே யாகும். இந்தப் பேராசை உலகிலுள்ள மற்றைய தேசத்தினருக்கும் இல்லாமலில்லை. ஆனால், மற்றைய தேசத்தினர் இதனை நிறைவேற்றிக் கொள்ளும் முறையும் இந்தியரது முறையும் வெவ்வேறாக இருக்கின்றன. ஏனைய தேசத்தினர் தங்கள் நாட்டவரை அந்நியராக மதிப்பதில்லை. ஆதலால், தங்கள் நாட்டாருக்கு இடைஞ்சல் வராத முறையில் அந்நிய நாட்டாரிடம் தங்கள் பேராசையை நிறைவேற்ற முயலுகின்றனர். இதனால்தான், இந்தியாவில் தொழில் முறையாக வந்திருக்கும் வெளி நாட்டார் தங்களுக்குள் விரோத மில்லாமல் ஒருவருக் கொருவர் சகாயமாக இருக்கின்றனர்; எல்லோரும் ஒரேவித மனப்பான்மையுடன் நமதிந்தியரை நெருக்கடி செய்கின்றனர். ஆனால், நமது இந்தியர் அவ்வாறன்று. ஒரு தேசத்திலேயே பிறந்து வளர்ந்து வாசஞ் செய்கிற பிற மதத்தவரை அந்நியராகப்பாவிக்கின்றனர். ஆகவே, வெளி நாட்டார் நமதிந்தியரிடம் நடந்து கொள்கின்ற அதே முறையை நமதிந்தியர் தங்களுக்குள்ளாக அநுஷ்டித்துப் பார்க்கின்றனர்.

நமது நாடு இதுகாறும் பிறரிடம் அடிமைப் பட்டிருந்தது என்பதிலும், இன்னமும் அடிமைப் பட்டிருக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை. என்றாலும், நம்மவரிற் பலர் பல்லாண்டுகளாகச் செய்த பல வித முயற்சியின் பயனாக

ஓரளவு மாகாண சுயேச்சை இந்தியாவிற்குக் கிடைத்திருக்கிறது. இச் சுயேச்சையை நன்கு பயன்படுத்திக் கொண்டு பூரண சுயேச்சையை அடைய நம்மவர் முயலுவதே புத்தி சாலித்தனமாகும். அவ்வா றில்லாமல் அச் சுயேச்யைத் தப்பான வழியில் உபயோகிப்ப தால் அனர்த்தம் விளையுமேயன்றி நன்மை விளையப் போவதில்லை. இந்தியாவிலுள்ள மாகாணங்களில் பீஹார் மாகாணமும் ஒன்று. அங்கு காங்கிரஸ்காரர்கள் மந்திரி சபையை அமைத்து அதிகாரம் செலுத்தி வருகின்றனர். அம்மாகாணத்தில் ஹிந்துக்கள் பெரும்பான் மையினராகவும், முஸ்லிம்கள் சிறுபான்மை யினராகவும் இருக்கின்றனர். இதற்கேற்ப அங்குள்ள அதிகார வர்க்கத்திலும் ஹிந்துக் களே மிகைத்திருக்கின்றனர். எவர் மிகைத் திருந்தாலும் நீதியாக நடந்துக் கொள்ளவேண் டும் என்பதே நமது விருப்பம்.

இம்மாகாணத்திலுள்ள மோங்கிர் டிவி ஷனைச் சேர்ந்த சில கிராமங்களில் பசு அறுக் கக் கூடாது என்பதாக மாகாண சர்க்கார் 144 வது தடையுத்தரவைப் பிறப்பித்து இருக் கின்றது. இதற்குக் காரணம், இக் கிராமங் களிலுள்ள ஹிந்துக்கள் பசு அறுப்பதற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தனர்; இக்கிளர்ச்சி யைச் சில காங்கிரஸ் தொண்டர்களும், தலை வர்களும் கூட ஆதரித்து, இதில் பங்கெடுத்துக் கொண்டனர் என்று சொல்லப் படுகிறது. இதன் பேரில் இங்குள்ள காங்கிரஸ் சர்க்கார், அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது என்ற காரணத்தால் பசு அறுப்பதற்கு 144 வது பிரிவுப்படி தடை உத்தரவு பிறப்பித்தது. இத்தடை உத்தரவால் பாதிக்கப்படுபவர்கள் முஸ்லிம்களாவார்கள். பாதக மடைவதுமட்டு மில்லாமல் முஸ்லிம்கள் மத விஷயமாகவும் தடை படுத்தப் பட்டிருக்கின்றனர் என்று கூறுவது பொருந்தும். குர்பானீ கொடுப்பதில் முஸ்லிம்களுக்கு இருந்து வருகிற உரிமையை இத் தடைவுத்தரவு பாதிக்கிறது. ஆகவே, பீகார் மாகாணச் சட்டசபையிலுள்ள முஸ்லிம் ஐக்கிய கக்ஷி மெம்பரான மிஸ்டர் எஸ். ஏ. முன்ஜிர் என்பவர் சர்க்காரின் இச்செய்கையைக் கண்டிப்பதற் கறிகுறியாக சபையின் நடவடிக் கை யை ஒத்திவைக்க வேண்டும் என, ஒரு தீர் மானத்தை சென்ற ஜுன் மீ 28வ பிரேரணை செய்தார். இப்பிரேரணையைப் பற்றிய விவாத மும் நடந்தது. இப்பிரேரணையை ஆதரித்து முஸ்லிம்லீக் மெம்பர்கள், சுயேச்சை கக்ஷி மெம் பர்களும் பேசினர். ஆனால், சர்க்காரின் சார் பாக இக்கண்டனத் தீர்மானத்திற்கு பதில் கூறிய பார்லிமெண்டரி செக்ரெடரி "அமைதி க்குப் பங்கம் வருவதாகத் தோன்றியதால் தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டது" என்ப தாக சமாதானம் கூறியதாகப் பத்திரிகை செய்திகள் அறிவிக்கின்றன.

சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக, கல கம் வாராமற்தடுப்பதற்காக அரசாங்கத்தார் 144 வது பிரிவைப் பிரயோகித்தது புத்தி சாலித் தனமான காரியந்தான். ஆனால், அத னைப் பிரயோகிக்க வேண்டிய இடத்தில் பிர யோகிக்காமல், தவறான முறையில் பிரயோகித் தது கண்டிக்கத்தக்கதே யாகும். இப்போதேற் பட்ட காங்கிரஸ் மந்திரிச் சபை அதி காரத்திற்கு வருமுன்பு, இடை கால மந்திரிச் சபைஆட்சி புரிந்தது. அதற்கு முன்னர் இர ட்டையாட்சி இருந்தது. அக்காலத்திலெல்லாம் இக் கிராமங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம் களும் வாழ்ந்து கொண்டுதானிருந்தனர். முஸ்லிம்கள் பசு அறுத்துக் கொண்டு மிருந்தனர். அப்பொழுதெல்லாம் ஹிந்துக்கள் கிளர்ச்சி செய்யவில்லை. இப்பொழுது புதிதா கக் கிளர்ச்சி செய்து, அமைதிக்குப் பங்க முண்டாக்குவது ஹிந்துக்கள்தாம். ஆகவே, ஹிந்துக்களுக்கு 144-வது பிரிவுப்படி தடை யுத்தரவைப் பிறப்பித்து, கிளர்ச்சியை அடக்கி இருக்கலாம். இத்தடையுத்தரவிற்கு அவர்கள் கீழ்ப்படிய மறுத்தால் சர்க்காரிடம், போலீஸ் ராணுவம் முதலியவைகளில்லாமலில்லை. இவை களை உபயோகிக்க சக்தியும் உண்டு. இவ்வித நிலைமையில் ஏழை முஸ்லிம்களின் பிரஜா உரிமையையும் மத உரிமையையும் பறித்து குழப்பத்தை அடக்குவதாக அரசாங்கத்தார் கூறுவது எம்மட்டும் நியாயம் என்பதைப் பொது ஜனங்கள் உணர்ந்து கொள்ளாமல் இல்லை. சட்டசபையில் முஸ்லிம்கள் சிறு பான்மையினராக இருப்பதால் அவர்களது இக்கண்டனத் தீர்மானம் ஓட்டுக்கு விடப் பட்டால் தோல்வியடையும் என்பது நிச்சயம். ஆகவே, இத்தீர்மானம், ஓட்டுக்கு விடப்படா மல் பேசிக் கழிக்கப்பட்டாலும், முஸ்லிம் மெம் பர்கள் சமாதானம் அடைந்து விடுவார்கள் என்று நம்ப முடியாது. சட்ட சபையிலுள்ள

முஸ்லிம் மெம்பர்கள் சமாதானமடைந்தாலும் நாட்டிலுள்ள முஸ்லிம் மகாஜனங்கள் திருப்தி யடைந்து விடமாட்டார்கள்.

இதற்குமுன் எப்பொழுதும் ஆக்ஷேபனே செய்யாதிருந்த ஹிந்துக்கள் காங்கிரஸ் மந்திரிச் சபை ஏற்பட்டவுடன் இதில் சிரத்தைகொண்டு கிளர்ச்சி செய்ததற்குக் காரணம் இல்லாம லில்லை. காங்கிரஸ் சபை ஹிந்து மதத்தைக் காத்து, ஹிந்துக்களுக்கு உயர்வைக் கொடுப்ப தற்காக ஏற்பட்ட சபை என்பதாக ஹிந்துக்கள் நம்பி வருவதாலேயே காங்கிரஸ் மந்திரிச்சபை ஏற்பட்டவுடன் அவர்கள் கிளர்ச்சியை ஆரம் பித்து விட்டனர். காங்கிரஸ் மந்திரிமார்களும் ஹிந்துக்களை ஆதரிக்க வேண்டும் என்ற நோக் கங்கொண்டிருப்பதால் ஹிந்துக்களுக்குச் சாதக மாகவும் முஸ்லிம்களுக்குப் பாதகமாகவும் தடை உத்தரவைப் பிரயோகித்து விட்டனர். தேசத்தில் யாவருக்கும் ஜாதிமத பேதமின்றி நீதி வழங்கவேண்டும் என்ற எண்ணமிருந்தால் முஸ்லிம்களது பாத்தியதையை இவ்வாறு பறித்திருக்கமாட்டார்கள். பெரும்பான்மை யினரின் ஓட்டுகளால் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் மந்திரிச் சபைக்கு இருக்குமாயின் சிறுபான்மையினரின் நம்பிக்கையையும் ஆதரவையும் அச்சபை அடைய முடியாது என்பதை அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தியாவில் வசிக் கும் எல்லா ஜாதியினருக்கும், அவரவருடைய மதம், கலை, ஆசாரம், பாஷை ஆகியவைகளைக் காப்பாற்றுகிறோம்; காங்கிரஸ் எல்லோருக்கும் பொதுச் சபை என்பதற்கு அர்த்தமே இல்லா மற் போய்விடும். தவிரவும், இந்தியாவில் ஹிந்துக்கள் தாம் பெரும்பான்மையினர்; பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்திற்கு மற்றவர்கள் கட்டுப்பட வேண்டும்; பெரும் பான்மையினருக்குத் தான் தேசத்தை ஆள உரிமை உண்டு என்பதாக ஹிந்துக்கள் நினைத்து, அதனைக் கிரியாம்சையில் செய்து கொண்டிருக்கும்வரை இந்தியாவில் வகுப்பு ஒற்றுமை ஏற்படுவது குதிரைக் கொம்பே யாகும்.

மேலும், அமைதியை நிலைநாட்டுவதற்காக, அவசர காலத்தில் உபயோகிப்பதற்காக 144-வது பிரிவை பிரயோகம் செய்ய சர்க்காருக்கு உரிமை உண்டு. ஆனால், அதனை நெடுக உபயோ கித்துக்கொண்டே இருக்க சர்க்காருக்கு உரிமை இல்லை. முஸ்லிம்களது உரிமையைப் பறித்து அமைதியை நிலை நாட்டிய அரசாங்கம் மறுபடி யும் அவ்வுத்தரவின் தவணை காலத்தை இன் னும் 6 மாத காலத்திற்கு நீடித்து முஸ்லிம்க ளின் மத உரிமையைப் பறிப்பது நீதியான செய்கையாகாது. ஆகவே, காங்கிரஸ் சர்க்கார் கள் இம்மாதிரியான செய்கைகளின் மூலமாக சிறுபான்மையினரின் அவநம்பிக்கையைப் பெருக்கிக் கொள்ளாமல் சிறுபான்மையினரின் அபிமானத்தைப் பெருக்கி வகுப்பு ஒற்று மையை உண்டுபண்ண முயலுமாக.

காதியான் கலீபாவிற்கு பகிரங்கக் கடிதம்.

காதியானி கலீபாவிற்கு அவரது முரீதுகள் விடுத்திருக்கும் பகிரங்கக் கடிதம் வரு மாறு:—

“விண்ணப்பதாரர்களாகிய நாங்கள் தங்களது மேலான சமூகத்தில் கைகட்டியவர்களாகக் கேட்டுக் கொள்வது யாதெனில், நம்முடைய “ஸில்ஸிலா” விற்கு விரோதமாகவுள்ளவர் தங் கள் மீது விதம் விதமான அபாண்டங்களையும் குற்றங்களையும் கூற எப்பொழுது ஆரம்பித்தார் களோ அந்தச் சமயத்திலிருந்தே மிர்ஜாயி ஸில் ஸிலாவின் மீதும், அதன் ஸ்தாபகர் மீதும் விதம் விதமான ஆக்ஷேபனைகள் செய்யப்படுகின்றன. இப்பொழுதோ நிலைமை இவ்வாறாகி விட்டது. எதிரிகள் மிர்ஜாயியத் என்ற பெயரைச் சொல் லக்கூட விடுகிறார்களில்லை. நாங்கள் எங்கேனும் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டால் எதிரி

கள் உடனே எங்களைக் கழுத்தைப் பிடித்துக் கொண்டு, உங்களுக்கு விரோதமான குற்றச் சாட்டுகள் நிறைந்த நீண்ட ஜாப்தாவை எங்களிடம் கொடுக்க வாரம்பித்து விடுகின்றனர். உங்களது காதியானி கலீபாஜீ இக்குற்றங்களை (அதாவது வியபிசாரம், மதுபான மருந்தல் முதலியவைகளை) விட்டு நிரபராதியாக இருப்பாராயின், ஏன் தனது நிலைமையைத் தெளிவு படுத்தாமலிருக்கின்ருர். நபிமார்களும், முற்காலததிலிருந்த மார்க்கப் பெரியார்களும் தங்கள் நிலைமையைத் தெளிவுபடுத்தி வந்திருக்கின்றனர். ஹஜ்ரத் யூஸுப் அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களது நிரபராதத் தன்மையை ருஜூப்படுத்தாமல் ஜெயிலை விட்டு வெளி வரவில்லை. ஹுஜூர் (ஸல்) அவர்கள் தங்களது பிரிய மனைவியான ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்கள் நிரபராதி என்பதைக் குறித்து அல்லாஹுதஆலா தெரிவிக்கும் வரையில் அவ்வம்மையாருடன் ஸலாம் சொல்வதைக் கூட நிறுத்திக் கொண்டார்கள். ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள், ஆக்ஷேபனை செய்வோருக்கு பதில் கூறும்வரை தாங்கள் குத்பா நிகழ்த்த மாட்டார்கள். இமாம் புகாரீ (றலி.) அவர்கள் தங்கள் நிலைமையைப்பற்றி யாருக்கும் எவ்விதச்சந்தேகமும்வரக்கூடாது என்பதற்காக தங்களிடமிருந்த ஆயிரம் தங்க நாணயங்களுள்ள பணப்பையை சமுத்திரத்தில் போட்டு விட்டார்கள். ஆகவே காதியானி கலீபா உண்மையாளராக இருந்தால் அவரும் தமது நிரபராதத் தன்மையை ருஜூப் படுத்த வேண்டும்'' என்று கூறுகிருர்கள்.

ஹுஜூர் அவர்களே ஒரு பக்கல் எதிரிகள் தங்கள் மீது அசங்கிதத்திலும் அசங்கிதமான குற்றத்தைச் சுமத்துகின்றனர், மறுபக்கல் தாங்கள் மௌனமாக இருக்கின்றீர்கள். இவ்விரு நிலைமைகளும் எவ்வாறிருக்கின்றன வென்ருல், இவைகளினுல் எதிரிகள் பிரயோஜனமடைகின்றனர். தங்கள்மீது எதிரிகள் சுமத்தும் அசங்கிதத்திலும் அசங்கிதமான குற்றங்கள் தங்களிடமிருக்கின்றன வென்றேற்படுகிறது. இவ்விஷயம் தங்களை மட்டிலும் பொறுத்ததாக இருக்குமாயின் தாங்கள் தங்கள் நிரபராதத்தன்மையை ருஜூப்படுத்தாவிடினும் குற்றமில்லை. ஆனுல், இவ்விஷயம் நமது ஸில்ஸிலா ஜீவித்திருப்பதா அல்லது சாவதா என்ற பிரசினையா யிருக்கிறது. தங்களது மௌனத்தால் மிர்ஜாயி ஸில்ஸிலாவிற்கும், அதன் ஸ்தாபகருக்கும் கெட்ட பெயர் உண்டாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் தங்களிடம் அல்லாஹ்வையும் றஸூலே அக்ரம் (ஸல்.) அவர்களையும், நமது ஸில்ஸிலாவின் ஸ்தாபகரையும் ஆணையிட்டுக்கேட்டுக்கொள்கிருேம். தாங்கள் தங்களது நிலைமையைத் தெளிவுபடுத்தி திக்கற்ற நிலைமையிலுள்ள மிர்ஜாயிகளான எங்களை தற்போதுள்ள கஷ்டங்களிலிருந்து விடுவியுங்கள். மிர்ஜாயியத்திற்கும், அதன் ஸ்தாபகருக்கும் ஏற்பட்டு வருகிற கெட்ட பெயரை அகற்றுங்கள். மௌனம் அரைச் சம்மதம்'' என்ற பழமொழியையுங்கூடச் சிலர் எங்களிடம் சொல்லிக் காண்பிக்கின்றனர்.''

சோதரீர்! மிர்ஜாயி கக்ஷியையும், அதன் தலைவர்களையும் குறித்து நமது சுன்னத்து வல் ஜமாஅத்துப் பேரறிஞர்கள் கூறிவந்த குற்றங்குறைகள் பொருமைக் குணத்தினுலும், துவேஷத்தினுலும், வயிற்றெரிச்சலினுலும் சொல்லப்பட்டவை என்பதாக மிர்ஜாயீ குஞ்சுகள் பிதற்றி வந்தனர். என்ருலும், இப்பொழுது அக்குஞ்சுகளுக்கும்கூட அறுப்பேற்பட்டுவிட்டாற்போற் ருேன்றுகிறது. முஸ்லிம் பேரறிஞர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் பெருந்தன்மை வாய்ந்தவை; காதியானி ஸ்தாபகரையோ, கலீபாவைப்பற்றிய தனி வாழ்க்கையைப்பற்றியோ அப்பேரறிஞர்கள் பேசாமல், அவர்கள் இஸ்லாம் மதத்திற்கு மாருகச் செய்துவந்த, வருகிற காரியங்களைப்பற்றியே குற்றங் கூறினர். அதுபோழ்து மிர்ஜாயிக் குஞ்சுகள் அப்பேரறிஞர்களின் குற்றச்சாட்டிற்குத் தக்க விடை பகரும்படியாக தங்கள் குருவைக் கேட்கவுமில்லை, தாங்களாகவே பதில்கூற முன்வந்து, வாய்கொண்டபடி நமது பேரறிஞர்களைத் திட்டவும் தூஷிக்கவும் செய்தனர். பத்திரிகைகளில் தங்கள் கை கொண்ட மட்டில் விஷமத்தனமாக எழுதினர். ஆனுல், இப்பொழுதோ நிலைமை முற்றிலும் மாறி சாயம் வெளுக்க வாரம்பித்து விட்டது. மிர்ஜாயிக் குருக்களின் தனி வாழ்வும் கூட அம்பலத்திற்கு வரக்கூடிய நிலைமைத் தோன்றி விட்டது. அவர்களைப் பின்பற்றிய சிஷ்யர்கள் பாடு திண்டாட்டத்தில் வந்துவிட்டது. குருவிடம் மண்டியிட்டுச் சலாம் போடுகிருர்கள். என்ருலும், மிர்ஜாயிக் குருக்கள் இதனை லக்ஷியம்

செய்யப்போவதில்லை. மௌனம் சாதிப்பதில் தான் தங்கள் கௌரவம் இருக்கிறது என்பதை நன்குணர்வர். நமது நாட்டிலுள்ள மிர்ஜாயி குஞ்சுகள் தங்கள் குருக்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பதிற் கூற முன் வருகிறார்களா? அல்லது அவர்களை விட்டு விலகி நேர் வழிக்கு வருகிறார்களா? என்பது இனி போகப் போகத்தான் தெரியும். (ப-ர்).

இப்பொழுதே இல்லையேல் எப்பொழுதுமில்லை.

இது இங்கிலிஷ் பாஷையிலுள்ள பிரபலமான ஒரு பழமொழி. ஒரு காரியத்தைச் செய்யவேண்டியது அவசியமாக இருந்தால் அதனை நீங்கள் உடனே செய்ய ஆரம்பித்து விட வேண்டும். அவ்வாறில்லாமல், நாளைக் கென்றோ அல்லது மற்றொரு சமயத்திற் கென்றோ அதனை நீங்கள் ஒத்தி வைத்தால் அந்தக் காரியத்தை அப்புறம் செய்து முடிக்கவே முடியாது என்பது இப் பழமொழியின் கருத்து. வெளித் தோற்றத்தில் இப்பழமொழி மிகைப்பட கூறியதுபோல் காணப்பட்டாலும், உண்மை இது தான் என்பதிற் சந்தேகமில்லை. இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலையை நாளைக்குச் செய்து கொள்ளலாம் என்று ஒத்தி வைத்தால், அப்புறம் அதனைச் செய்வதற்குச் சாவகாசமும் வசதியும் கிடைப்பதில்லை என்பது அனுபவப் பூர்வமாகத் தெரிந்த விஷயம். ஏனெனில், நாளை என்ற தினம் வரும்போது, அன்று செய்து முடிக்கவேண்டிய காரியங்களையும் அது தன்னுடன் கொண்டு வருகிறது. ஆகவே, முன்னர் ஒத்தி வைத்த வேலையைச் செய்யச் சாவகாசம் இருப்பதில்லை.

"நேரம், காலம் என்ற பெரிய கடிகாரத்தில் மணியையும் நிமிஷத்தையும் அறிவிக்கிற முட்கள் இல்லை. "இப்பொழுதே" என்ற ஒரே ஒரு வார்த்தை தான் அந்தக் கடிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது." என்பதாக எட்வர்டு யூரிட் என்பவர் கூறி இருக்கிறார்.

"கொஞ்சங் கொஞ்சமாக ஆகிவிடும்" என்ற வார்த்தைகள் ஒரு தெருவிற்குச் சமமாகும். இத்தெரு "இனி என்றுமே முடியாது" என்ற வீட்டில் நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடும்" என்பதாக மற்றொரு பேரறிஞர் கூறி இருக்கிறார். நமக்கு வெற்றி கிடைக்கக் கூடிய சமயம் பெரும்பாலும் "ஒரே ஒரு க்ஷணப் பொழுதில்" தான் வருகிறது. அச்சமயத்தை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளாமல் வீணாக்கி விட்டால் மாதக் கணக்காகவும் வருஷக் கணக்காகவும் நாம்தோல்வியை அனுபவிக்கநேரிடுகிறது.

"ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காலம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது" என்பது அறபிப் பழமொழி. ஒரு காரியத்தில் வெற்றி அடைவதற்குரிய சமயம் ஒரே ஒரு முறை தான் வருகிறது. அந்தச் சமயத்தை நாம் உபயோகித்துக் கொள்ளாவிடில், பிறகு வெற்றி நம்மை விட்டு வெகு தூரத்திற்கு அகன்று விடுகிறது என்பது தான் இப் பழமொழியின் கருத்து.

"இன்றைய வேலையை நாளைக்கு விடாதே" என்ற பார்ஸிப் பழமொழிக்கும் இது தான் கருத்து. அதாவது, இன்று செய்யவேண்டிய வேலையை நாளைக்குச் செய்யலாம் என்று நினைத்து ஒத்திவைக்கக் கூடாது. உண்மையில் காலத்தின் பஞ்சாங்கத்தைப் பார்ப்போமாயின் "நாளை" என்பது ஒரு தினமாகவோ, ஒரு சமயமாகவோ, ஒரு நேரமாகவோ இல்லை. "நாளை" என்ற நாள் நம்மிடம் வரும்போது, அது "இன்று" என்ற பெயருடனேயே வருகிறது. வேலை செய்வதை, ஊழியம் புரிவதை, காரியம் பார்ப்பதைப் பொறுத்த மட்டில் இவ்வுலகில் உண்மையாகவே இருப்பது ஒரே ஒரு நாள் தான். அந்த ஒரு நாள் "இன்று" என்பது தான். இன்றைய வேலையை இன்றே செய்து விட வேண்டுமென்பதற்குப் பதிலாக "இன்றைய வேலையை இன்று செய்வதில்லை" என்பதாக நாம் நிர்ணயம் செய்து கொண்டால், அப்புறம் நமது வேலை என்றுமே செய்யப்படமாட்டாது என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. ஏனெனில், நம்மிடம் வருகிற நாள் எப்பொழுது வந்தாலும், எந்தக்காலத்தில் வந்தாலும் "இன்று"

என்ற நாளாகவே இருக்குமே யல்லாமல் வேறு எந்த நாளாகவும் இருக்காது. இன்றைய வேலையை இன்றே செய்வதில்லை என்பது நமது நிர்ணயமாக இருப்பதால் நம்முடைய இன்றைய வேலையை அன்றையத்தினம் செய்ய முடியாது. ஆதலால், எந்தக் காரியத்தையும் நாளைக்கென ஒத்திவைப்பது கூடாது.

"எந்த வேலையை மறுபடி பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திவைக்கிறோமோ அந்த வேலை அப்புறம் எப்பொழுதுமே செய்ய முடியாது" என்ற வாக்கியம் ஆங்கிலத்தில் பழமொழியைப் போல் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

பிரஞ்சு தேசத்திலிருந்த பிரபல வீராதி வீரத் தளகர்த்தரான நெப்போலியன் போனபார்ட், வாட்டர்லோ என்ற இடத்தில் தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்னவென நினைக்கிறீர்கள். நெப்போலியன் குறிப்பிட்ட நேரத்தில் அவருடைய தளகர்த்தரில் ஒருவர் குறிப்பிட்ட ஸ்தலத்திற்குச் செல்லத் தவறிவிட்டார். இதனைத்தவிர வேறு ஒன்றையும் அவருடைய தோல்விக்குக் காரணமாகக் கூற முடியாது. அவருடைய மற்றொரு தளகர்த்தர் தமக்குக் குறிப்பிட்டபடி குறித்த காலத்தில் குறித்தஇடம் போய்ச் சேர்ந்தார். என்றாலும், மற்றொருவர் சில நிமிஷங்கள் பிந்திவிட்டதால் யுத்தத்தின் போக்கே, போர்க்களத்தின் திட்டமே வேறு விதமாக மாறிவிட்டது. இதன் பலனாக ஜெயக்கொடியைத் தாங்கி, தோல்வி என்பதையே அறியாமலிருந்த நெப்போலியன் பகைவர்களிடம் கைதியாகி செய்ன்ட் ஹெலினா என்ற தீவில் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியதாயிற்று.

ஸர் வால்டர் ரேலே என்பவரிடம் ஒருவர், தாங்கள் இவ்வளவு அபூர்வமான, அருமையான காரியங்களை இவ்வளவு சொற்ப நேரத்தில் எவ்வாறு செய்து முடித்து விடுகிறீர்கள் என்பதாக விசாரித்ததற்கு "அவர் வேறு ஒன்றுமில்லை, ஒரு காரியத்தை நான் செய்ய வேண்டியதேற்பட்டால், உடனே எழுந்துட் கார்ந்து விடுவேன், அதனை அப்பொழுதே செய்து முடித்து விடுவேன்" என்று பதில் கூறினாராம்.

ஆனால், வேலை செய்ய அஞ்சாமல், தங்களது எல்லா வேலைகளையும் செய்துகொண்டு, தங்கள் வாணாள் முழுவதிலும் "வெற்றி" என்பதைக் காணாமல் மிகவும் துக்கத்தையும், வருத்தத்தையும், கவலையையும் கொண்டுள்ளவர்கள் உலகில் ஏராளமாக இருக்கிறார்கள். "இவ்வளவு சிரம மெடுத்து முயன்றும் தோல்வி அடைவது ஏன்?" என்பதாக அவர்கள் தங்கள் மனதிற்குள்ளாகவே தங்களை வினவிக்கொள்வதுமுண்டு. இவர்களது தோல்விக்குக் காரணம் இவர்கள் குறித்த காலத்தில் செய்யாமலும், தங்களது அருமையான காலத்தில் அதற்குரிய காரியத்தை அவ்வப்பொழுது செய்ய முன் வாராமலும் இருப்பதே காரணம் என்பதை இவர்கள் உணருவதில்லை. குறித்த காலத்தில் ஒரு காரியத்தைச் செய்யவில்லையானால் அப்புறம் அதனைச் செய்வதும் செய்யாதிருப்பதும் ஒன்றேயாகும். அன்றியும், காலந் தவறி அக்காரியத்தைச் செய்வதால் நமது ஏனைய காலமும் வீணாகவே, வீண் முயற்சியிலேயே கழிந்து விடுகிறது. ரயில் புறப்படுவதற்கு ஏற்பட்ட காலத்திற்கு ஐந்து நிமிஷம் நாம் பிந்திச் சென்றால், ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வதற்காக நாம் செலவு செய்த காலம் வீணாகி விடுகிறதல்லவா?

ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில் முதலிய பலவிதமான காரியங்களில் ஈடுபடாமலில்லை, தக்க முயற்சி எடுத்துக்கொள்ளாமலில்லை. மேலும், பிறர் செய்வதைப் பார்க்கினும் அதிகமாகவே முயற்சி செய்கின்றோம். என்றாலும், நம்மவரில் பெரும்பாலர் பெரும்பாலும் அவரது முயற்சியில் வெற்றியடைவதில்லை. தோல்வியின் முகத்தையே காண்கின்றனர். இதற்குக் காரணம் குறித்த காலத்தில் குறித்த வேலையைச் செய்யாமலிருப்பதேயாகும். நல்ல காரியங்களைச் செய்யவேண்டும்" என்னும் எண்ணமோ, அதற்குரிய முயற்சியோ மற்றவர்களைப் பார்க்கினும் நம்மவரால் அதிகம் செய்யப்படுகின்றன. என்றாலும், அவை சித்தி பெறுவதில்லை. இதனால் சோர்வுறுகின்றனர். நம்மவர் சோர்வடையவோ, அதைரியமடையவோ காரணமில்லை. முயற்சியிலும் பிரயத்தனத்திலும், ஊக்கத்திலும் நம்மவர் மற்றவர்களைப் பார்க்கினும் குறைந்தவர்களல்லர். என்றாலும், நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று அலக்ஷியமாக மதித்து, ஒவ்வொரு காரியத்தையும் அதற்குரிய நேரத்தில் செய்யாமல் ஒத்திவைக்கும் வழக்கம் நம்மில் அதிகமுண்டு. இதனை நம்மவர் உணர்ந்து, தங்களைத் திருத்திக்கொள்வார்களாக.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை

இந்தியாவில் வாழும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இதர சிறு பான்மையினருக்கு மிடையில் ஒற்றுமை இருந்தால் தான் இந்தியாவை சுயராஜ்யத்திற்கான பாட்டையில் வேகமாக இட்டுச் செல்ல முடியும் என்பதும், வகுப்பு ஒற்றுமை இன்றி சுயராஜ்யம் குதிரைக் கொம்பாகும் என்பதும் இந்தியாவில் வாழும் எல்லா வகுப்பினருக்கும் தெரிந்த விஷயம். ஆதலால், ஹிந்து முஸ்லிம் தலைவர்கள் இவ் விஷயத்தில் தங்களாலான முயற்சியைச் செய்கின்றனர். என்ருலும், இருக்கிற நிலைமையை உத்தேசிக்கும் போது இந்தியாவில் வகுப்பு ஒற்றுமை ஏற்படும் என்பதாகத் தோன்றவில்லை. ஏனெனில், இப்பொழுதிருக்கிற பெரும்பான்மைச் சமூகத்தினரின் போக்கு வகுப்பு ஒற்றுமைக்கு விரோதமாக இருக்கிறது என்பதே பலரின் அபிப்பிராயம். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஸ்தாபிக்கும் விஷயத்தில் சில மாதங்களுக்கு முன்னிருந்து முஸ்லிம் லீக் தலைவர் ஆலீ ஜனுப் ஜின்னுவிற்கும், காங்கிரஸ் மாஜி தலைவர் பண்டிதர் ஜவ்ஹர்லால் நேருவிற்கும், அப்புறம், காந்திஜீக்கு மிடையில் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டது. இதன் பயனுக காந்திஜீ ஜனுப் ஜின்னுவைப் பம்பாயில் கண்டு பேசினுர். பின்னர், தற்போதைய காங்கிரஸ் தலைவர் சுபாஷ் சந்திர போசும் ஜின்னுவை நேரில் கண்டு சம்பாஷணை செய்தார். பின்னர், முஸ்லிம் லீகின் கோரிக்கைகளைக் குறித்து ஜின்னு போஸுக்கு எழுதிய கடிதம் முஸ்லிம் லீக் நிர்வாக சபையில் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. இனி, காங்கிரஸ் காரியக்கமிட்டி அதனைப் பரிசிலனை செய்து, அபிப்பிராயம் கூறும் வரை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்னை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இப்பிரச்னையை ஒழுங்காகத் தீர்க்கும் விஷயம் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது. ஆனுல், இதற்குள்ளாக இந்தியாவில் நிகழும் காரியங்களைக் கவனிக்கும்போது காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவு யாதாக இருக்கலாம் என்பதை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். தலைவர்களுக்கிடையில் நடந்த கடிதப் போக்குவரத்தை தலைவர்கள் அனுமதியின்றியே பத்திரிகைகள் பிரசுரித்து விட்டன. இதனைப் பற்றிக் காங்கிரஸ் தலைவர்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. போகட்டும், தலைவர்களில் ஜின்னுவிற்கும் ஜவ்ஹர்லாலுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தைக் கவனிக்கும் போது அம்பட்டன் குப்பையைக்கிளருவதைப் போலவே இருக்கிறது. மனஸ்தாபப்பட்ட இருவர் ஒன்று சேருவதாயின் அவர்கள் பழய விஷயங்களைக் நினைக்காமல் இனி மேல் நடக்க வேண்டிய விஷயங்களை கவனிக்க வேண்டும்; பழைய விஷயங்களைத் திரும்பக் கூறினுல் ஒற்றுமை ஏற்படமாட்டாது. இது உலகில் இருந்து வரும், நடைமுறையில் தெரிந்து வரும் ஒரு விஷயம்.

பண்டித ஜவ்ஹர்லால் நேரு ஜனுப் ஜின்னுவிற்கு எழுதிய முதற் கடிதத்திலேயே "கல்கத்தாவில் நீங்கள் ஆற்றிய சொற் பெருக்கில் எனக்கு ஏன் சாலஞ்ஜ் செய்தீர்கள்" என்று குறை கூறி இருக்கிருர். அதற்கு ஜின்னு "நான் சாலஞ்ஜ் செய்யவில்லையே" என்பதாகப் பதில் கூறுகிருர். அதற்கு ஜவ்ஹர் "இல்லை, நீங்கள் சாலஞ்ஜ்தான் செய்தீர்கள்" என்று மறுபடியும் வற்புறுத்துகிருர். அப்புறம் காங்கிரஸ்காரர்களின் 5 லக்ஷ ரூபாய் சங்கதி அம்பலத்திற்கு வருகிறது. பிறகு உருதூ ஹிந்திப் பிரச்னைத் தகராறு, ஹிந்து ராஜ்யத்தை ஏற்படுத்தும் கனவு போன்றவைகளெல்லாம் அக்கடிதங்களில் விவாதத்திற்கு வருகின்றன. இக்கடிதங்களைப் படிக்கும்போது ஆரம்ப முதல் கடைசிவரை அனுவசியமான ஆட்சேபனைகளும், சமாதானங்களும் நிறைந்திருப்பதாகவே நடு நிலைமை வகிப்பவர்கள் உணருவார்கள்.

ஒரு தலைவரை இன்னொரு தலைவர் தாக்குவதும், அவரது எண்ணத்தைச் சந்தேகிப்பதும், குறை கூறுவதும், ஒரு தலைவரை இன்

ஞெரு தலைவர் குறுகிய நோக்கமுள்ளவர், வகுப்புவாதி என்று பரிகசிப்பதும், தேடித் தேடிப் பார்த்துக் குற்றங் குறைகளைச் சொல்வதும்தான் சமாதானத்திற்கு வழியா? இது சமாதானத்திற்கான முறையல்ல. தலைவர்கள் தங்களுக்குள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்கான மார்க்கமேயாகும். இவ்விதமான கடிதப் போக்குவரத்தை அவர்கள் செய்து கொண்டு சமாதான விஷயமாகச் சம்பாஷணை செய்ததுதான் நமக்கு ஆச்சரியகாமாக இருக்கிறது. இவ்விதமான முரண்பட்ட கடிதப் போக்குவரத்தைப் பார்க்கும் எவரும் ஹிந்து முஸ்லிம் தலைவர்களுக்கிடையில் சமாதானமேற்படுவது முடியாது என நினைப்பர். தலைவர்களுக்கிடையில் இவ்விதமான மனப்பான்மை இருந்துகொண்டிருக்கும்வரை ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை ஏற்படப் போவதில்லை. நேர்விரோதமாக சமூக வேற்றுமை அதிகரிக்கவே செய்யும்.

பண்டி ஜவ்ஹர்லால் நேருவின் கடிதங்களில் ஆரம்ப முதல் கடைசிவரை அதிகார உணர்ச்சியே மிளிர்கின்றன. ஜின்னுவின் கடிதங்களில் அவநம்பிக்கை ததும்புகிறது. இவ்வித நிலைமையில் சமாதானம் உண்டாகும் என்று நினைப்பது அறிவின்மையாகும். இவ்விதமான கடிதங்களைப் பொது ஜனங்களது பார்வைக்குக் கொண்டுவராமல் மறைத்து வைப்பதே முறையாகும். அதனை வேண்டுமென்றே பிரசுரித்த பத்திரிகைகளுக்கு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தில் சிரத்தை இல்லை என்றே கூறவேண்டும். கடிதத்தை மட்டிலும் பத்திரிகைகள் பிரசுரித்ததுடன் நின்றுவிடாமல் அவைகளுக்குக் கொடுக்கும் தலைப்புகளும், அக்கடிதங்களிற் கூறப்பட்ட விஷயங்களைக் குறித்தெழுதும் தலையங்கங்களும் இரு சமூகத்தாரையும் தூண்டிவிட்டுக் கலகஞ் செய்யத் தூண்டுவனவாக இருக்கின்றனவே அன்றி, இரு சமூகத்தாரையும் ஒன்று படுத்துவனவாக இல்லை. தலைவர்கள் களங்கமற்ற மனத்துடன் அதிகார உணர்ச்சியையும், அவநம்பிக்கையையும் காண்பிக்காமல், ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவரது அபிப்பிராயத்தை இன்னெருவர் இயன்றவரை ஒப்புக்கொள்ளும் முறையில் ஆற அமரச் சம்பாஷணை செய்தால்தான் இம்முயற்சி வெற்றியடையும். இப்பொழுதிருக்கிற நிலைமையில், இவ்வுணர்ச்சி சமூகங்களுக்குள்ளும் தலைவர்களுக்குள்ளும் ஏற்படும் என்பதாகத் தோன்றவில்லை.

முஸ்லிம்கள் கவனிப்பார்களாக!

ஜனப் ஜி. எம். ஸதகத்துல்லா சாஹிப் (வரைவது)

நிச்சயமாக ஆதமுடைய மக்களை நாம் சங்கைவான்களாக ஆக்கினேம் (திரு குர்ஆன்)

சோதரீர்! கருணைகரனை பரிபூரணக் கடவுள் (அல்லாஹுதஆலா) தனது திருமறையின்கண் எவ்விஷயத்தால் நாம் மேலானவர்களென புகழ்ந்து கூறியிருக்கிருன் என்பதை நாம் உணர வேண்டும். சகல சிருஷ்டிப் பொருள்களையும் இறைவன் மூன்று வகுப்பாய் அமைத்துள்ளான். அதில் ஒரு வகுப்பினருக்கு மிக்க பிரகாஸம் பொருந்திய புத்தியை மட்டும் அளித்திருக்கிருன். அன்னவர்கள் புத்திக்குச் சம்பந்தமான நலமான காரியங்களிலேயே ஈடுபடுவர்; தீங்கான காரியங்களை திரும்பியேனும் பாரார்; சதா சர்வ சக்தனை தியானிப்பதையும், தூய்மைப்படுத்துவதையும், துதியானிற்பதையும் இன்னும் பல்வேறு நற்செய்கைகளைப் புரிவதையும் தங்களுக்கு ஆகாரமாக்கிக் கொண்டிருப்பர்; மற்ற செய்கைகளை அனுஷ்டியார்கள். இவர்களோ மிகத் தூய்மையானவர்கள். இரண்டாவது வகுப்பினருக்கு ஒரு வரம்புக்கும் கட்டுப்படாத அகங்காரம் பிடித்த ஆண்மை பூண்ட (நப்ஸ்) என்னும் மனம் ஒன்றை மட்டுமே அவர்களில் அல்லாஹ்தஆலா அமைத்துள்ளான். அவர்கள், சதா உண்பதும் தின்பதும் உறங்குவதும் சந்தானப் பெருக்குக்

குரிய செய்கையை செய்வதுமே யல்லாது, வேறொன்றையும் கண்டிலர். அவர்களுக்கேற்பட்டுள்ள புத்தி இன்மையால் வேத விதி விலக்கல்கள் அவர்களைத் தாக்குவதில்லை. மூன்றாவது வகுப்பினர்களில், முதல் வகுப்பினருக்கு கொடுக்கப்பட்ட புத்தியையும் இரண்டாவது வகுப்பினருக்கு அருளப்பெற்ற (நப்ஸ்) என்னும் மனதையும், அதற்குரிய ஐப்புலாதிகளையும் ஒருங்கு சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னோர்கள் இவ்விரண்டிற்கும் நேரான நலவான காரியங்களை செய்ய முன்வருவார்கள். ஆயினும் புத்தி என்ற சுத்த கருவியினால் சித்தமெனும் மனதை அடக்கி அதற்கு வழிப்படாது நடப்பது முக்கிய அத்தியாவசியமென்பதை நாம் உணரவேண்டும். புத்தி மட்டும் அருளப்பெற்றவர்கள் வானர்களெனும் மலக்குகளாகும். இவர்கள் மூவ்வாசை யெனும் தீய காரியங்களிலீடுபடாது ஊண் உறக்கமின்றி இறைவனையே என்றும் வணங்கா நிற்பர். இரண்டாவது வகுப்பினர் உயிருள்ள புத்தியற்ற ஆடுமாடு போன்ற ஜீவ ஜந்துக்களாகும். இவைகளை ஊண் தீனைத்தவிர மற்றவை பின்தொடர்வதில்லை. மூன்றாவது வகுப்பினர் மானிடர்களாகிய நாமாகும். நண்பர்காள்! நம்மில் புத்தி நப்ஸ் இரண்டுமிருப்பதால் நப்ஸின் இச்சையை அடக்கி அதற்கு வழிப்படாமல் புத்தியை மிகைக்கச்செய்து, நலவான காரியங்களை கடைப்பிடித்தொழுகும் தன்மை நம்மீதிருக்கிறது. இதனால் இம் மூவகுப்பிலும் நாம் மேலானவர்களென தெரிந்தெடுக்கப்பட்டு பெரும் மதிப்பையும் பெற்றோம். இதைப் பொருத்தே தான் நமது இறைவனும் நம்மை கண்ணியவான்களாய் ஆக்கியிருப்பதாகப் பகர்ந்திருக்கிறான். ஆகவே, இக்கண்ணியத்தை கை தவற விடாமல்கடைக்காலம் வரை காத்தவனே பரிபூரண மனிதனுவான். அங்ஙனமிலாது தான் தோன்றித் தனமாய் மனம் போன போக்கெல்லாம் சென்று உயர்தர மூச்சுகளை வீணே செலவிட்டு வாழ் நாளை வீண் நாளாக்கியவர்களைக் குறித்து இஸ்பஷ்டமாய் இறைவன் தனது திரு மறையின்கண்,

எவன் ஆண்டவனது சன்னிதானத்தை பயந்து தன் நப்ஸை, இச்சைக் குட்படுத்தாமல் விலக்கிக் கொள்வானோ அவன் ஒதுங்கும்தானம் (அதாவது, ஆகிரத்தில் அவன் வாஸஸ்த்தலம் அருள் நிறைந்த) சுவனபதியாகும்.

எனக் கூறியுள்ளான். அவ்வண்ண மிலாது, நலவிடரைக் கவனியாது தன் இஷ்டப்படி முறனான கருமங்களில் ஈடுபட எத்தனிப்பானுபின், அல்லாஹ்வினது கருணைக் குரியனுகான். பரலோக வாழ்க்கையில் யாதொரு சுகத்தையும் அடைய மாட்டான். இதைப் பொறுத்தும் இறைவன் தனது சுத்த சத்திய திருகுருஆனில் தெளிவாய் உரைத்திருக்கிறான். அதாவது—

எவன் அளிச்சாட்டிய மேன்னும் அக்கிரமத்தைச் செய்து அதாவது அல்லாஹ்வின் வரம்பை மீறி நடந்து, தாழ்ந்த உலகின் நிருவாகத்தை பிரிது பாராட்டி அதையே தேரிந்து கோள்கிறானே கடை காலத்தில் அவன் வாஸஸ்தலம் (அல்லாஹ்வின் முனிவால் நிறப்பப்பட்ட) நரகமாகும்—என்பதே.

சகோதரர்களே! பிரகாஸம் பொருந்திய ராஜ கருவியான சகல உறுப்புகளிலும் மிக மேலான அறிவு நம்மிலிருப்பதால் தான் நாம் மேலானவர்களானோம். அவ்வறிவு நம்மெல்லோருக்கும் ஒரே அளவாய் ஒரே மாதிரி கொடுக்கப்படவில்லை. பற்பல விதமாகவே நம்மில் அமைக்கப்பட்டிருக்கிறது. உலக வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் அதிலும் நமது அறிவுகள் வேறுபட்டிருக்கின்றன. சிலருக்கு வெள்ளாண்மை விவசாயத்தொழில் மிக்க சிலாய்க்கியமாய்த் தோன்றுகிறது. சிலர் அதை கண்ணெடுத்துப் பார்க்கக் கூட இஷ்டப்படுவதில்லை. சிலருக்கு வியாபாரத் தொழில் முறைகள் பிரியமாக இருக்கிறது. அதிலும் ஓர் சிலரின் மனம் ஓர் வியாபாரத்தை விரும்புகிறது. மற்றோர் மனம் அதை வெறுத்து மற்றொரு வியாபாரத்தை நாடுகின்றது. சிலருக்கு ஒருவர் கைக்குக் கீழிருந்து தொண்டு புரிவது அழகாய் தெரிகிறது. இதுவன்றி, நமது ஆகாரங்களிலும் அப்படியே. ஒருவர் இச்சிப்பதை மற்றொருவர் வெறுக்கின்றார். நடையுடை பாவனைகளிலும் நம் நிலைமைகள் வேறுபட்டே இருக்கின்றன. இனி பரலோக வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் அதிலும் மனிதர்கள் நிலைமை பல்லாயிரக் கணக்காய் பிளவுபட்டிருக்கின்றது. நலமான காரியங்கள் ஓர் சிலருக்கு பிடித்தமாயும், பிரியமாயும், அன்பாயும், ஆவலாயும் இருக்கிறது. வேறு சிலர் இதற்கு நேர்மாற்றமாய் இருக்கின்றார்கள். நலவிலும், திரேக சம்பந்தமானதாயும் இலகுவாயும், ஹிம்ஸை இல்லாததாயும், பணச் செலவு இல்லாததாயும் உள்ள செய்கைகள்

வெகு சிலருக்கு மிக மேலானதாய்த் தெரிகிறது. பணச் செலவென்றால், அவர்களுக்கு கடிய நஞ்சைப் போலிருக்கிறது. சிலர் எல்லாவித நற்செய்கைகளிலும், ஈடுபடுவதையே மேலானதாகக் கருதி, தங்களாலியன்ற அளவு பல்வேறு நன்மைகளைப் புரிந்து வருகிறார்கள். ஓர் சிலர் நலவிடர் இன்னதென்றே உணராது தீங்கான காரியங்களில் பிரவேசித்து பிரகாசம் பொருந்திய ஹிருதயத்தை பாபமெனும் பாஸத்தில் முங்கவைத்து அகக்கண் குருடர்களாய் யாதொரு உபயோகமுமின்றி சகலத்தையும் மறந்து, எல்லாவித இன்ப சுகானுபவங்களையும் அளித்த அல்லாஹ் தஆலாவையும் நினையாமல், அவன் வேதனையைப் பயப்படாமல் நமக்கென்றும் அழிவு வராது, நாம் மரணமடைய மாட்டோமென, கற்பகோடி வருடம் ஆயுள் வாங்கி வந்தவர்களைப் போல் நினைத்திருக்கின்றனர். இன்னோர் உலகத்திலேயே மேன்மையடைந்து செருக்காய் வாழ்வதுவே தங்க முழு லட்சியமெனக் கருதி நடக்கின்றனர். இவர்களது தனச் செருக்கும் ஜனப்பெருக்கும் யாரை என்ன செய்யும்? இவர்களது மமதை எவ்வளவு காலம் நீடிக்கும். இவர்கள் கௌரவமும், முதலாளிப் பட்டமும் இறைவனை என்ன செய்யக்கூடும். அவன்முன் இவர்களது சக்தியும் துணிபும் எதுகாறும் நிலை நிற்கும். சிருஷ்டிப் பொருள்கள்யாவும் ஓர் காலத்தில் அழிந்தே தீரவேண்டும். அழியாதிருப்பவன் (அல்லாஹ்) ஒருவனே. மற்றெல்லாம் ஓர் நிமிட நேரத்திற்குள்ளாக ஆடிமாதக் காற்றிற் பறக்கும் இலவம் பஞ்சுபோல் பறந்துவிடும். காலம் வந்து அடுத்துக் கொள்ளுமாயின் எந்த வஸ்துவின் உதவியும் எவ்விதப் பயனையும் அளிக்காது என்பதை இவர்கள் உணரவேண்டும். இப்படி அறவே மறந்து உலக இன்ப சுகானுபவங்களில் மூழ்கி ஆழ்ந்து கிடப்பவர்கட்கும் அறிவுகள் பல்வேறு வகையாய் இருப்பதை முன்னிட்டும், முன் காரியங்களையும் பின் காரியங்களையும் முழு லக்ஷியம் இன்னதென்பதையும், நாம் இறைவனிடம் கொடுத்த அறுதிமான மென்னும் வாக்குறுதிகளையும் ஞாபக மூட்டுவான் வேண்டியும், நலவிடர் விதி விலக்குகளை எடுத்துரைத்து நம்மை சீரான வழியில் நேராய் நடாத்துவதற்கும், முற்காலத்தில் (அல்லாஹ்)வின் விரோதிகள் அவனை நம்பாமலும், ஏவலை எடுத்து விலக்கலை தவிழ்ந்து நடக்காமலும், நபிமார்களை பின்பற்றாமல் அவர்களை ஏசியும் பேசியும் துன்புறுத்தியும் தூஷணித்துந் திரிந்ததால் அவர்களடைந்த துன்பங்களையும், சகலத்தையும் சிறமேற்கொண்டு பயபக்தியோடு காலங்கழித்த பெரியோர்களுக்குரிய பலாபலன்களையும் தெளிவாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகத்தாருக்கு எடுத்துக் காட்டும் போதகர்கள் வழிகாட்டிகள் தேவை ஏற்பட்டதால் அல்லாஹுத்த ஆலா மானிடர்கள்மீது கருணை கூர்ந்து 1,24,000 ஒரு லட்சத்து இருபத்திநாலாயிரம், 2,24,000 இரண்டு லட்சத்து இருபத்து நாலாயிரம், ஒரு சொற்படி கணக்கற்ற தீர்க்கதரிசிகளை நம்மை சீர்திருத்துவான் வேண்டி அனுப்பி இருக்கிறான். இந்த ஓர் பேருபகாரத்திற்கு மட்டும் நாம் காலாகாலம் ஏவலை எடுத்து விலக்கலைத் தவிழ்ந்து நடந்து நன்றி பாராட்டினும் அது அற்பமேயாகும். ஆகவே, சென்ற காலங்கள் வீண் காலமாயினும், எதிர் காலங்களிலாவது ஏவலை எடுத்து விலக்கல்களைத் தவிழ்ந்து நடக்க முன்வரல் வேண்டும். வீணே சென்ற காலங்களுக்காகவும் மூச்சுகளுக்காகவும் நம் தகாச் செய்கைகளுக்காகவும் காலைமாலை இறைவன்பால் பிழை பொறுக்குமாறு இறைஞ்சுவோமாக. ஏகவல்ல நாயன் (அல்லாஹுத்த ஆலா) தன்னை அறிந்த ஆரிபீன்களென்னும் மெஞ்ஞான சொரூபிகள் கூட்டத்தில் நம்மனைவோரையும் ஆக்குவானாக. வஸ்ஸலாம்.

பினங் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்! நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா மிக சொற்பமாகையால், அதனை அலக்ஷியமாகக் கருதி மணியார்டர் மூலம் அனுப்பிக்கொடுக்காதே இருந்து விடுகின்றீர்கள். இதனால் தங்களுடைய 1937-ம் ஆண்டுக்குரிய சந்தாவும், நடைபெறும் 1938-ம் ஆண்டின் சந்தாவும் வசூலாகாதே இருந்து வருகிறது. ஆகவே, அன்பர்கள் இவ்விரண்டு ஆண்டிற்குமுள்ள சந்தா பாக்கியை நமக்கு நேரிலாகிலும், அல்லது கிள்ளான் ஆலீ ஜனாப் அல்ஹாஜ் கோ. அ. பகீர் முகம்மது சாஹிப் அவர்களுக்காகிலும் அனுப்பிக் கொடுக்குமாறு கோருகிறோம்.

முஸ்லிம் சமூக முன்னேற்றத்தைத் தடுக்க சூழ்ச்சி

[தென்காசி மௌலவி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் வரைவது]

அருமைப் பெரியார்களே! தோழர்களே! காங்கிரஸ்காரர்கள் இன்று தேசீயம், சுதந்திரம், விடுதலை என்று தான் ஓலமிடுகின்றனர். ஆனால் அந்தரங்கத்தில்—அல்ல பகிரங்கத்தில்—அவர்கள் நடப்புகளெல்லாம் வேறு. தேசீயத்தின் பெயரால், காந்தியத்தின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால், அபேதவாதத்தின் பெயரால், பூரண ராம ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க தங்களின் முழு சக்தியையும் பூரணமாக செலவிடுகின்றனர். இவர்களின் இந்நடத்தை "யானை காட்டும் பல்வேறு, மெல்லும் பல் வேறு" என்ற பழமொழியை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. இவர்கள், முஸ்லிம் சமூக முன்னேற்றத்தையும், முஸ்லிம் சிற்றரசுகளையும், இதர இஸ்லாமிய அரசாங்கங்களையும் தங்கள் சபையால் எத்துணை இழிவு படுத்த முடியுமோ, பலக் குறைவாக்க முடியுமோ அத்துணையும் தவறாது செய்து வருகின்றனர். இவைகளிலிருந்து காங்கிரஸ் காரர்களின் பக்ஷபாதத்தன்மை எவ்வாறிருக்கிறது என்பதை நன்குணர்ந்து கொள்ளலாம். அவைகளில் சிலவற்றை மாதிரிக்காக இவண் குறிப்பிடுகிறேன்.

(1) ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, காங்கிரஸ் லீக் ஒற்றுமை வேண்டுமென்று காந்திஜியும், சுபாஷ்பாபுவும், ஜின்னாவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் இன்னும் பூர்த்தியாக வில்லை, முறிந்தும் போகவில்லை. இதற்கிடையே நிபந்தனையின்றி பாமர முஸ்லிம் மக்களை காங்கிரஸில் சேர்க்கவும், முஸ்லிம் லீகை ஒழிக்கவும், பொதுமக்களுக்கு ஜின்னாவின் மீதும் இதர தலைவர்கள் மீதும் அதிருப்தியை உண்டாக்கவும் சகல விதமான முயற்சியும் குறைவற நடந்து வருகிறது. இதை எந்த காங்கிரஸ் பொறுப்பு வாய்ந்த தலைவரும் இந்த நிமிஷம் வரை கண்டிக்கவில்லை. எங்ஙனம் கண்டிப்பார்கள்? இவர்களே இதைத் தலைமை வகித்து நடத்தும்போது எங்ஙனம் கண்டிக்க முடியும்?

(2) ஜான்ஸிபார் என்ற முஸ்லிம் அரபி சமஸ்தானத்தை வீழ்த்த "தேசியம்" என்ற பெயரால் கிராம்பு லவங்க பஹிஷ்காரத்தை ஆரம்பித்து பலவிதமாக மறியல் முதலானவைகள் செய்து அதைப் பணிய வைத்து விட்டனர். (இதன் உண்மை நிலைமையை நமது தலைவர் ஜின்னா அவர்கள் அறிக்கை மூலம் தெளிவாக விளக்கி விட்டது யாவரும் அறிந்ததே).

(3) சிந்து பலுச்சிஸ்தானத்தைச் சேர்ந்த "புகாதி" என்ற முஸ்லிம் சமஸ்தானத்தின் மீது காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் பிரிட்டன் தலையிட்டு நியாயம் வழங்கும்படி வேண்டிக் கொண்டனர். ஆனால் இதற்கு மாற்றமாக 100-க்கு 93 பேர் முஸ்லிம்கள் நிறைந்த ஹிந்து சமஸ்தானமான "காஷ்மீரில்" முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் அளவிடவொண்ணாது; சண்டைகளும் சச்சரவுகளும், அடக்கு முறைகளும் அதிகமாக நிகழ்வுறுகின்றன. இந்த நிலைமையில் இதைப்பற்றி காங்கிரஸ் தலைவர்கள் எவ்வித சிறிய முயற்சியும், ஆலோசனையும் இன்றுவரை செய்ய வில்லை.

(4) ஹைதராபாத், போபால் ஆகிய முஸ்லிம் சமஸ்தானங்களில் காங்கிரஸ் காரர்களும், ஹிந்து மஹா சபையினர்களும் பலவித வகுப்புக் கலவரங்களையும், உள்நாட்டு கலகங்களையும் மூட்டிவிட்டு அரசாங்கத்தின் மீதும், அரசர்கள் மீதும் பொய்யானவும், படுதூறானவுமான சமாச்சாரங்களைக் கிளப்பி விடுகின்றனர். இதைக் கவனித்த அவ்விரு சமஸ்தானங்களும் உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்டி வருகின்றன. இதற்காக இவ்விரு சமஸ்தானங்களையும் திட்டி சமீபத்தில் பண்டித ஜவ்ஹர்லால் நேரு பத்திரிகைகளில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். இன்னும் பல காங்கிரஸ் கமிட்டிகளும், தலைவர்களும் அவ்விரு சமஸ்தானங்களைத் தாக்கி

அறிக்கைகள் அடிக்கடி வெளியிடுகின்றன. ஆனால் இதற்கு மாற்றமாக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், சுயாட்சி வேண்டுமென்ற எண்ணத்துடன் எவ்விதப் பிரச்சாரமும் நடைபெறக் கூடாது என்று சட்டமிட்டிருப்பதுடன் பல தலைவர்களுக்கு வாய்ப்பூட்டும் போட்டிருக்கின்றனர். பலர்களை சிறையில் அடைத்தும் வைத்திருக்கின்றனர். ஆனால் இதைப்பற்றி எந்த காங்கிரஸ் தலைவர்களோ, கமிட்டிகளோ எவ்விதமாகவும் வாய்திறக்கவில்லை. தீர்மானம் நிறைவேற்றவில்லை. அதோடு நிற்காமல் அதை "தரும ராஜ்ஜிய ஆட்சி" நடைபெறும் நன்நாடு என்று புகழ் பாடுகின்றனர்.

(5) சென்ற ஏப்ரல் மாத இறுதியில், காங்கிரஸ் லீக் ஒற்றுமை வேண்டுமென்று பம்பாயில் ஜின்னாவுடன் சம்பாஷித்துவிட்டு எல்லைப் புறம் சென்ற காந்திஜீ, "பொதுப் பிரார்த்தனை" என்ற பெயருடன் ஆங்குள்ள பாமர பட்டாணிய முஸ்லிம் மக்களை, இஸ்லாமியப் பிரார்த்தனைகளை விட்டும் எவ்வாறு விலகச் செய்ய வேண்டுமோ அதை யெல்லாம் செய்ததுடன் காங்கிரஸ் பிரசாரத்தையும் பலமாகச் செய்தார். அத்துடன் முஸ்லிம்களின் வீரபராக்கிரமத்தை வீழ்ச்சி யடையச் செய்வதற்காக அஹிம்ஸா தருமமென்ற கோழைத்தனமான அம்சத்தையும் அவர்களுக்குப் போதித்தும் வந்தார்.

(6) மத்திய மாகாணத்தில் லீக் டிக்கட்டில் நின்று வெற்றி பெற்ற ஜனப் யூஸுப் ஷரீப் என்பவருக்கு காங்கிரஸ்காரர்கள் மந்திரிப் பதவி தருவதாக ஆசை காட்டி காங்கிரஸில் சேர்த்து மந்திரிப்பதவியுமளித்தனர். இம் மந்திரியார் சமீபத்தில் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு, மிகவும் துன்பத்திலும் சஞ்சலத்திலும் அகப்பட்டுக்கிடந்த ஒரு முஸ்லிம் கைதியை விடுதலை செய்து விட்டார். காரணமின்றியும் அக்கைதியை விடுவித்துவிடவில்லை. அக்கைதியின் பந்துக்கள் திடீரென்று இறந்து விட்டதால் அவரது குடும்பத்தைப் போஷித்துக் காப்பார் யாருமில்லை. மேலும், அவர் தண்டனைக்குரிய பெரும் பகுதியை அனுபவித்துமிருந்தார். அப்படிப்பட்ட ஓர் எளிய முஸ்லிம் கைதியை விடுதலை செய்து விட்டது தான் காரணம். உடனே காங்கிரஸ் காரர்களும், வகுப்பு விரோதிகளான ஹிந்து மஹா சபையினர்களும் அந்த மந்திரி ஷரீபின் நடத்தையைக் கண்டித்துப் பெருங் கிளர்ச்சி செய்தனர். காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இதைக் கண்டித்தது. இதை விசாரிக்க ஜட்ஜும் நியமிக்கப்பட்டார். இன்னும் பல முயற்சிகளும் கையாளப்பட்டது. மந்திரியார் தமது மனசாக்ஷிப்படி நியாயமாக நடந்துகொண்டிருந்தும் மக்களின் கிளர்ச்சியை மதித்துப் பொதுக் கூட்டங்களிலும், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலும் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். இங்ஙனமிருந்தும் இறுதியாக நடைபெற்றதென்ன? ஜட்ஜு அவர்மீது குற்றப் பத்திரிகை வாசித்தார்; காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அதை அப்படியே ஆதரித்தது; அவரும் மந்திரிப் பதவியை விட்டு நீக்கப்பட்டார். ஆனால், அம்முஸ்லிம் கைதியைவிட கொடிய குற்றங்கள் புரிந்த பல ஹிந்துக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். எவ்விதக் கிளர்ச்சியோ, எதிர்ப்போ இருந்ததில்லை. ஆனால் முந்தின சம்பவமோ, விடப்பட்ட கைதியும் முஸ்லிம், விட்ட மந்திரியும் முஸ்லிம் என்பதினால்தான் இத்துணை அமர்க்களமும் நடைபெற்றதென்பதை நேயர்கள் நன்குணர்ந்து கொள்ளலாம்.

(7) சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மஹாநாட்டிலும், இதர பல தலைவர்களாலும், பொது மக்களாலும் வந்தே மாதாக்கீத விஷயமாக ஏகோபித்துக் கிளர்ச்சி செய்த போது அதே வருஷம் நவம்பர் முதல் வாரத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வந்தேமாதரப் பாட்டின் இரண்டடிகளை மாத்திரம் தேசியப் பாட்டாகப் படிக்கலாமென்றும் அதுவும் வேறொரு தேசிய கீதத்தை ஏற்படுத்தும் வரைதான் என்றும் தீர்மானித்து இதற்கென ஒரு கமிட்டியும் நியமித்தனரே தவிர இன்றுவரை அக்கமிட்டி யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அப்பாட்டுகள் பூராவும் காங்கிரஸ் கூட்டங்களில் பாடப்பட்டு வருகிறது. மீண்டும் அப்பாட்டை எங்கும் பாடும்படி செய்ய பலவித முயற்சிகள் அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும் நடைபெற்று வருகிறது.

(8) முஸ்லிம் அரசாங்கமான ஆப்கானிஸ்தானத்தில் நின்றும் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் உலர்ந்த பழவர்க்கங்களை, அதை நடத்திவந்த வியாபாரிகளிடமிருந்து அரசாங்கமே இப்பொறுப்பை ஏற்று நடத்த முன்வந்ததால் இதை எதிர்த்து அப்பழங்களை பஹிஷ்

கரிக்கவும், அவ்வரசாங்கத்தைப் பணியவைக்கவும் தேசியத்தின் பெயரால் காங்கிரஸ் தலைவர்கள் (காந்தியாருட்பட) முயற்சி செய்து வருகின்றனர். (இரண்டு வருஷங்களுக்கு முன் இராக் அரசாங்கத்தில் இந்தியர்கள் அவதிப் படுகிறார்களென்று கிளர்ச்சி செய்து யாதொரு பலனுமின்றி காங்கிரஸ் தோல்வியடைந்ததைப்போலவே, இதிலும் தோல்வி அடையுமென்பது திண்ணம்).

சகோதரர்களே! மேற்குறிப்பிட்டவைகள் காங்கிரஸ்காரர்களால் இழைக்கப்படும் இன்னல்களில் ஒரு பகுதியேயாகும். அவர்கள் செய்யும் இடர்களை விரிவாக வரைவதற்கு இவ் வியாசம் இடந்தராதாகையால் இத்துடன் பூர்த்தி செய்கின்றேன். இதிலிருந்து முஸ்லிம் சமூகத்தின்மீது காங்கிரஸ்காரர்களின் அன்பும், பற்றும் எவ்வளவு தூரமிருக்கின்றதென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம். இந்நிலைமையில் "காங்கிரஸுக்கும் ஹிந்து மஹா சபைக்கும் அந்தரங்கத்தில் எவ்வித வித்தியாசமுமில்லை" என்று முஸ்லிம் லீக் தலைவர்கள் கூறுவது தவறென்று எவ்வாறு இயம்ப முடியும்? ஆதலின், உண்மையான சுயராஜ்ஜியத்திற்குப் பாடுபடுவதுடன் இந்திய சிறுபான்மை சமூக முன்னேற்றத்திற்குப் பொதுவாகவும் முஸ்லிம் சமூகத்திற்குக் குறிப்பாகவும் உழைத்துவரும் அகில இந்திய முஸ்லிம் லீகைப் பலப்படுத்த முன்வரும்படி நுங்களை வேண்டிக்கொண்டு இச்சிற்றுரையைப் பூர்த்தி செய்கின்றேன்.

வஸ்ஸலாம்.

காங்கிரஸின் கபட சூழ்ச்சி

"தேளைக் கடித்து துருத்தியைக் கடித்து இப்போது மனிதர்களைக் கடிக்க வந்துவிட்டது" என்பதுபோல், நாம் முஸ்லிம்லீகில் ஒன்றுபடுவதை காங்கிரஸ் கண்டு கோபங்கொண்டு குமுறுகிறது. கூர்மையாக்கிய மரத்திலே பதம் பார்ப்பதைப்போல், நம்மில் பிளவையுண்டாக்க முயற்சிக்கிறது. தூங்கி ஆதரவற்றுக் கிடந்த காங்கிரஸ் நமது சமூக முயற்சியால், நமது உண்மைத் தியாகத்தால், நமது அரும் பெரும் ஆதரவினால் மேன்மை யடைந்தது; பிறர் மதிக்கத்தக்க ஸ்தாபன மாயிற்று. அரசாங்கத்தாரும் கண்டஞ்சுவதற் குரிய சபையாக ஆனது என்பதை கடந்த 20 வருஷகால இந்திய அரசியல் நிலைமையை உற்றுணர்ந்த அறிஞர்கள் மறுக்க முடியாதென்பது திண்ணம்.

பொய்ப் பிரசாரத்தாலும் சூழ்ச்சி வஞ்சகத்தாலும், சுயராஜ்ஜிய மென்ற அர்த்தமற்ற பதப் பிரயோகத்தாலும் கடந்த மாகாணத் தேர்தல்களில் மக்களை மயக்கி அகஸ்மாத்தாக ஆறுமாகாண சட்டசபைகளில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப் பற்றியதிலிருந்து அது செய்துவரும் ஒவ்வொரு முயற்சியும் சூழ்ச்சியும் அளவிட்டுக் கூறமுடியாத நிலைமையிலிருக்கிறது. லார்டு லோதியன் "முஸ்லிம்களுடையவும் ஆங்கிலேயர்களுடையவும் ராஜ்ஜியங்களுக்குப் பிறகு இந்தியாவில் ஹிந்து ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று கனவு காண்பவர்கள்" என்று காங்கிரஸ் ஹிந்துக்களைக் கூறுவது போலவே செயலிலும் இவர்கள் காட்ட ஆரம்பித்து விட்டனர்.

பூவுலகிற்குப் பணியாற்றுவதே தங்களின் உள்ளக்கிடக்கை யென்று நடித்து பறை சாற்றி வந்த காங்கிரஸ் பக்தர்கள், சட்டசபைகளைக் கைப்பற்றியதும் வாக்குறுதியின்றி பதவி ஏற்க மாட்டோ மென்று ஆணவம் பேசினார்கள். இதைக்கண்ட ஹிந்து முஸ்லிம் தலைவர்கள் ஆண்மையுடன் பதவிகளை யேற்று கபட எண்ணம், கலங்கிய மனது, பிறரை வீழ்த்த எண்ணிய சூட்சி முதலிய அம்சங்களைப் பெற்ற காங்கிரஸ்காரர்களுக்கு தக்க படிப்பினை கற்றுக் கொடுத்தனர். இவர்கள் பதவி ஏற்றதினால் தங்களுக்குப் பதவி கிடைக்கவில்லையே யென்று மூளை கிறுகிறுத்த காங்கிரஸ் தலைவர்கள், தேசிய பத்திரிகைகள் எனக் கூறிக்கொள்ளும் சுயநல வகுப்புவாதப்பத்திரிகைகள் இன்னோரை பிணமிகளென்றும், தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர்களென்றும் கூற முற்பட்டதுடன் பலவாறாகத் திட்டு

வதையும், அறிஞர்களால் மொழியக் கூடாத அப்படிப்பட்ட ஆபாசப் பதங்களை ஆத்திரத்தால் கக்குவதையும், திட்டுவதையும் தொழிலாகக் கொண்டிருந்தன ரென்பதை அறியாதார் யாருமிருக்க மாட்டார்களென்பது திண்ணம். காங்கிரஸ்காரர் மெஜாரிட்டியாயுள்ள மாகாணங்களில்தான் இவ்வாறு நடந்து கொண்டார்களென்று எண்ணவேண்டாம். முஸ்லிம்கள் மெஜாரிட்டியா யிருந்து சட்டமுறைப்படி பதவி ஏற்றிருந்த முஸ்லிம் மாகாணங்களையும் விட்டனரில்லை. ஒன்பது கோடி முஸ்லிம் சமூகத்தையே அலட்சியம் செய்தனர். ராம ராஜ்ஜிய ஆட்சி கிட்டிவிடுமென்று ஆனந்தக் கூத்தாடினர். முஸ்லிம் பாமர மக்களை முஸ்லிம் தலைவர்களை விட்டும் பிரித்து தங்கள் காங்கிரஸ் வலையிற் சிக்கவைக்க திட்டங்கள் வகுத்தனர். கூலிக்குக் கூத்தாடும் பிரசாரர்களை ஏற்படுத்தினர். முஸ்லிம் லீக் மீதும், அதன் தலைவர்கள் மீதும் பொது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படிச் செய்ய முயற்சி செய்தனர். செய்தும் வருகின்றனர். இஃதொருபக்கலிருக்க,

"புதிய சீர்திருத்தச் சட்டம் இந்தியாவுக்கு வேண்டாம், அதை நாகத்திற்கு அனுப்புவோம், அதைத் தொட்டாலும் கைநாற்றமெடுக்கும்" என்று பிரசாரமும் புரிந்தனர். தீர்மானங்கள் செய்தனர். இறுதியாக தங்கள் நோக்கம் பலிதமாகாததைக் கண்ட இவர்கள், பிரிட்டனுக்கு சரணாகதி அடைந்து, ராஜ விஸ்வாஸப் பிரமாணஞ் செய்து கொடுத்து பதவிகளை ஏற்று, முன்னால் தாங்கள் செய்த பொய்ப் பிரசாரம், போலி நடத்தைகள், ஆணவப் பேச்சுகள் முதலியவைகளனைத்தும் தவறென்று விண்ணப்பித்து ஆங்கிலேயருக்கு அண்ணன்கள்போல் ஆட்சி நடத்த ஆரம்பித்தனர்.

இவ்வித சூழ்ச்சிகளை யெல்லாம் நன்குணர்ந்த நம் முஸ்லிம் சமூகத்தவரும் நன்கு விழித்து தங்கள் ஏக பிரதிநிதி ஸ்தாபனமான முஸ்லிம் லீகை நல்ல முறையில் வலுவுள்ள ஸ்தாபனமாக ஆக்க முயற்சி செய்தனர்; ஆக்கியும் விட்டனர். காங்கிரஸின் கபட எண்ணத்திற்கு ஆணியும் அறைந்து விட்டனர். நம் சமூக முன்னேற்றத்திற்கும் உண்மையான தேச விடுதலைக்கும் "தன் கையே தனக்குதவி" என்ற பழமொழியை நினைவில் கொண்டு ஆவன செய்கின்றனர்.

சென்ற பல வருஷங்களாக ஏமாற்றப்பட்ட நம் சமூகம், சுறண்டப்பட்ட நம் சமூகம், இன்று தலை நிமிர்ந்துவிட்டது; கண்ணிமைப் பொழுதிலே வீரம் பிறந்துவிட்டது, வாலிப முஸ்லிம் வீரர்களே விழித்தெழுங்கள்! துள்ளிக் குதித்தெழுங்கள்!! முஸ்லிம் லீகின் செய்தியை எங்கனும் பறப்புங்கள்!!!

முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்.

மேனுட்டு நாகரீகமும் மக்களின் வீழ்ச்சியும்

(ஹாபிஸ் E. M. A. R. தென்காசி, வரைவது)

இன்றைய உலகின் எத்திக்கை நோக்கினும் "நாகரீகம்" என்ற கூப்பாடுதான் முழங்கிக் கொண்டிருக்கிறது. "நாகரீகம்" என்றால் என்ன? அது எத்தகைய தன்மையுடையது? அதனால் என்ன பிரயோசனம்? என்ற உட் கருத்துகளைத் தெரிந்து கொள்ளாது, ஏதோ ஒரு விஷயத்தை ஒருவர் செய்து காட்டி, அது ஜனங்களுக்குப் பிடித்து விட்டால் அதுவே நாகரீகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உண்மையில் அது கெட்டதாயிருந்தாலும் சரி, அதை கவனிப்பதில்லை. இது விஷயத்தில் நம் இந்தியா படுமோசத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. காரணம் என்னவென்றால், மேனுட்டு நாகரீகமென்ற அனுச்சாரம், அருவை நிறைந்த ஓர் நாகரீகம் மக்களை அடிமைப்படுத்திக்கொண்டு அந்தப் பேயிலிருந்து மனிதர் விடுதலையடையும் மார்க்கமறியாது அலைகின்றனர். இன்று மேனுட்டு மனிதன் ஒருவன் ஒரு புதிய விஷயத்தை அதாவது, உடையிலோ, நடையிலோ, அன்றி உண்டி

யிலோ, அல்லது மற்றெந்த விஷயத்திலோ, நடத்தி காண்பித்து விடுவானேயாகில், அவை நம் இந்தியாவில்தான் முதன் முதலாக காணப் படும். அதுவே நாகரீக மென்றும் கொண்டாட வும்படும். காரணம் அதை சீர்தூக்கிப் பார்த்து அது மனித இயற்கைக்கு ஒவ்வானதா? அன்றி புறம்பானதா? என்பதை கவனிப்பதில்லை. ஆகையால், இங்கு நாகரீக மென்றால் என்ன? இப்பொழுது அது எந்த நிலைமையிலிருக்கின் றது? என்பதை கவனிப்போம்:—

ஒருகாலத்தில் மக்கள் தக்க சுகஜீவிகளாக இருந்ததாயும் ஒவ்வொரு விஷயத்தையும் அன் னோர் நன்றாக ஆராய்ந்து கவனித்து வந்ததாக வும் சரித்திரவாயிலாக அறிகின்றோம். அன் னோர் ஒவ்வொரு காரியங்களிலும் தங்களது மார்க்கத்திற்கும், ஆசாரத்திற்கும், மனித இயற்கைக்கும் முரணாக ஒருவர் கூறுவதையோ அன்றி செய்வதையோ கண்டு மயங்கி மோசம் போகவில்லை. அதில் தங்களது அறி வைச் செலுத்தி நல்லதாகத் தெரிந்தால், எடுத்து நடப்பர். இன்றேல், அதை விரட் டியே விடுவார்கள். இது முற்கால முறை. ஆனால் நமது இக்காலம் இதற்கு நேர் விரோத மாகவே யிருந்து வருகிறது. ஏனெனில், இன் றைக்கு மேனாட்டில் ஒருவன் எதைச் செய்து காண்பிக்கிறானோ அதுவே நமக்கு சிறந் ததாகவும், நாகரீகமாகவும் தென்பட்டு நாமும் அவ்வாறே நடக்க ஆரம்பித்து விடுகிறோம். அது மார்க்கத்திற்கும் மற்றைய அனுஷ்டானங்களுக்கும் முரணாக இருந்தாலும் சரியே, அதை நாம் பொருட் படுத்துவதே கிடையாது. நமது அறிவினால் அதை அலசிப் பார்ப்பதும் கிடையாது. உடைகளில் நாகரீகம், உண்டிகளில் நாகரீகம், நடைகளிலும் நாகரீகம், மற்ற ஒவ்வொரு விஷயங்களிலும் நாகரீகம், இதெல்லாம் யாருடைய நாகரீகமென்றால் எல் லாம் மேனாட்டு நாகரீகம்தான். ஏன் நம் நாட்ட வர்களில் ஒவ்வொரு சாராருக்கும் அவர்களின் மதஸ்தாபகரோ, அன்றி அவர்களின் பெரி யார்களோ, அன்றி அவர்களின் மதக்கட்டளை களோ அவர்களுக்கு நாகரீக முறையை வகுக்க வில்லையா? இவைகளை நாம் விடாப் பிடியாகப் பிடித்து நடந்து வந்தால், நமது பழம் கீர்த்தி களெல்லாம் இவ்வளவு தூரம் குன்றிவிடுமா? நாம் என்றும் அறிவிலிகளாகவும், சொன்னதை நம்பும் சோணகிரிகளாகவும், பிறர் மதிப்பதற்கு ஏளனமானவர்களாகவும் இருக்க இஃதன்றோ காரணம்? நாகரீகம் என்ற இந்தப் பிரச்னை தானே நம்மை இன்னும் அடிமை படுத்திக் கொண்டு வருகிறது. நம்முடைய பண்டைய நாகரீகத்தை நாம் மறந்து விடுவதா? ஒரு வன் முற்றிலும் மேனாட்டு நாகரீகம்தான் தனக்கு பிடித்தமென்றால், அவன் இந்தியாவில் வாழ்வதில்தான் என்ன பிரயோசனம்? இந் தியா அடிமை நாடாகவிருந்தும் சில விஷயங் களிலாவது சுதந்திரம் இருப்பதையும் கெடுத்து, எல்லாவற்றிலும் நாங்கள் உங்க ளுக்கு அடிமைகள் தான் என்பதையன்றோ இந்த நாகரீகம் ருஜுப்படுத்துகின்றது.

நாமோ ஒவ்வொரு விஷயங்களிலும் அடிமை வாழ்க்கையைத்தான் அணைத்துக் கொள்கி றோம். எப்படியெனில், உடைகளை எடுத்துக் கொள்ளுங்கள். நம் நாட்டின் புராதன உடை கள் பெரியோர்களால் போற்றப்பட்ட உடை கள், இன்று நமக்கு கர்நாடகமாகவும், அநாக ரீகமாகவும் தோன்றி அதை அணிவதற்கே வெட்கமுறுகிறோம். ஆனால் மேனாட்டு உடை களையே நாகரீகமுடையதென்று புகழ்வதுடன், அது கண்ணுக்கு அலங்காரமாக தோன்றி அதை அணிவதற்கே ஆசிக்கின்றோம். இதனால் நம்மை அடிமைகள், ஒன்றும் தெரியாதவர்கள், ஒருவர் எதைக் காண்பித்தாலும் கண்மூடித் தனமாக அதையே பின்பற்றுபவர்கள் என்று பிறர் ஏளனமாக கருதக்கூடிய ஸ்திதியிலல் லவோ இருக்கிறோம். நம் முன்னோர்களின் நடத்தையைக் கடைப்பிடித்து அதையே வர் ணச்சிரமமாகக்கொண்டு நடந்துவந்தால், அத னால் நமக்கு கண்ணியம் கிடைப்பதுமல்லாமல் நம்மைப் பார்த்து எதிரிகள் துச்சமாக மதிக் காது பயப்படமாட்டார்களா? நமது கட்டுப் பாட்டைக் கவனித்து நம் நாகரீகத்தையே கடைப்பிடிக்கும்படியான நிலையில் வரமாட்டார் களா? நாம் ஒவ்வொரு விஷயத்திலும் பிறநாட் டினரை எதிர்பார்ப்பதினாலல்லவோ ஒருவருக்கு அடிமைப்படவேண்டிய அந்தஸ்து ஏற்பட்டி ருக்கின்றது. இன்று நாகரீகம் சிறந்த நாடு என்று போற்றப்படும் மேனாட்டினர் இவ்விந் தியாவுக்கு வந்து 160 சில்லரை வருஷங்களா கிறதே, அன்னோர் நம் நாட்டாச்சாரங்களின் ஏதாவதொன்றை தங்கள் நாடுகளில் புகுத்தி யிருக்கின்றார்களா? இதுவரை அப்படி ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. எல்லா விஷயங்களி லும் கண்ணுங்கருத்துமாயிருந்து தங்களது நட வடிக்கைகளையே நடத்தி நம்மையும், ஏமாற்றி

வருகிறார்கள் அவ்வன்னியர்கள். நாமோ அவர்களது தயவை எதிர்பார்க்கும் நிலைமையிலேயே இருக்கின்றோம். காரணம் என்னவென்றால், ஒவ்வொரு விஷயங்களிலும் அவர்களுக்கு நாமே மதிப்பு சம்பாதித்துக்கொடுத்து அவர்களது நடத்தையையே பிரதானமாகக் கொள்கிறோம்.

இதுதான் போகட்டுமென்றால், பாஷை விஷயத்திலாவது நாம் சுதந்தரமாக வாழ்கின்றோமா, அதுவுமில்லை. நமது சொந்த தாய் பாஷைகளெல்லாம் தூர ஒதுக்கித் தள்ளப்பட்டு அந்த மேல்நாட்டு ஆங்கில பாஷை தான் இன்று சொந்த பாஷையாக வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மாணவன் ஆரம்பமாக ஆங்கில கல்வி கற்க ஆரம்பித்து விட்டால் அப்பொழுதிருந்தே அவனது தாய்ப்பாஷை ஆங்கிலம் கலந்த பாஷையாக மாறிவிடுகின்றது. சாதாரணமாக பேசினால் கூட பாதி அதுவும் பாதி இதுவுமாகத்தான் வெளியாகிறது. ஆங்கிலமறியாத ஒரு மனிதன், அவன் என்னதான் பேசுகிறான் என்பதை விளங்க முடியாத நிலைமையிலாகிவிடுகின்றான். மேற்படி மாணவன் கொஞ்சம் அதிகமாக மேல் படிப்பு படித்து விட்டாலோ அப்புறம் அவனைப் பார்க்கவேண்டுமே. அப்படியே ஆங்கிலேய நாட்டிலேயிருந்து இந்தியாவுக்கு வந்த ஆங்கிலக் குஞ்சு மாதிரிதான் அவன் பேசுவதெல்லாம் ஆங்கிலம் தான். அவனிடத்தில் அவனது தாய் பாஷையின் அபிமானமும் நாளடைவில் குறைய வாரம்பிக்கின்றது. இதுவும் ஒரு நாகரீகமாம்? எவ்வளவுதான் அன்னிய பாஷையைக் கற்றாலும் நம் தாய் பாஷையை விட்டு விடலாமா? நம் சொந்த பாஷையை குழி தோண்டிப்புதைத்து விட்டு ஒரு அன்னிய பாஷைக்கு அடிமைப்பட்டுக்கிடந்தால் நம் தாய்நாட்டின் அபிமானம் நமக்கு எங்கிருந்து வரப்போகிறது. நம் பாஷையுடன் அன்னிய பாஷையையும் கலந்து பேசுவதால் பிறர் நம் பாஷையை பூர்த்தியற்ற பாஷையென்றும், அன்னிய பாஷைகளிலிருந்து இரவல் வாங்கித்தான் பேச முடியுமென்றும் கருதுவதற்கு இடமளிக்கிறதன்றோ? இவ்வளவுக்கும் ஆங்கில பாஷை நமக்கு கட்டாயப் பாடமுமல்லவே. ஆனால் அதையும் கற்க வேண்டியது தான். அதை உபயோகப்படுத்த வேண்டிய இடத்தில் அல்லவோ உபயோகப்படுத்தவேண்டும். இதைவிட்டு எல்லா நேரங்களிலும் அதற்கே அடிமைப்பட்டு அதையே வழங்கி வருவதனால் நாமே நம் தாய்பாஷைக்கு உலை வைக்கக் கூடியவர்கள் என்பதில் என்ன சந்தேகம். இப்படி கலை விஷயத்திலும் நமது அடிமைத்தனத்தை நாம் வெளிப்படுத்தினால், பின் எந்த விஷயத்தினால் தான் நமக்கு சுதந்திரம் கிடைக்கப்போகிறது ? நாம் ஒவ்வொரு விஷயத்திலும் ஏமாந்தது மல்லாமல் நமது சுதந்திரத்தையும் இந்த நாகரீகமென்ற பூதமாகிறது நசுக்கிக்கொண்டே வருகிறது. நாமோ இதையெல்லாம் கவனியாது மேலெழுந்த வாரியாக நாகரீகத்தை ஜபித்துக்கொண்டே காலத்தை கடத்திக்கொண்டு வருகிறோம். நமது அறிவென்ற சல்லடையை அகற்றிவைத்து விட்டோம். ஒவ்வொரு விஷயத்தையும் அலசிப் பார்க்க வேண்டிய நம் அறிவு மழுங்கிக் கொண்டே வருகிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த நாகரீகப் பித்துதான். ஆதலால் இனியாகிலும் உண்மையை அறிந்து உணர்ந்து தெளிவோமாக.

எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு நான் தெரிவிப்ப தென்னவென்றால், நீங்கள் மேனாட்டு நாகரீகமென்ற ஆழிய கங்கையில் மூழ்கி அழிந்துவிட வேண்டாம். அதனால் நமது இஸ்லாமிய நாகரீகத்திற்கு முற்ற முற்ற கெடுதலே நேரிடும். நமக்கோ ஒவ்வொரு விஷயங்களிலும் இஸ்லாம் நல்லவிதமான நாகரீகத்தை கற்பித்துக்கொடுக்கிறது. இதுவும்தவிர, நமது நாயகம்(ஸல்.) அவர்கள் ஒவ்வொரு விஷயங்களையும் செய்தும் காண்பித்திருக்கிறார்கள். இதைவிட சிறந்த ஓர் நாகரீகம் உலகத்தில் வேறெங்குமில்லை. இதை ஒட்டியே இறைவனும் தனது திருமறையில், "உங்களுக்கு உங்களது ரசூலில் முன்மாதிரி யிருக்கிறது" என அருளி யிருக்கிறான். இதுவே நமது மார்க்க பக்திக்கும், தெய்வ வணக்கத்திற்கும் ஏற்ற சிறந்த நாகரீகம். இதைவிட்டு நமது மார்க்கத்திற்கே முரணான காரியங்கள் மலிந்துள்ள—ஒருவர் புகழவேண்டுமென்ற கருத்துள்ள ஓர் நாகரீகமென்ற—அநாகரீகத்தைப் பின்பற்றி நடந்து வருவோமானால் நாம் முஸ்லிம் என்று கூறிக்கொள்ளும் வார்த்தைக்கே மதிப்பில்லாமற் போய்விடுவது மன்றி நமது கியாதியும் மழுங்கும் நிலையிலாகிவிடும். ஆதலால் எங்கு சென்றாலும், நமது இஸ்லாமிய ஆசாரத்தை கைவிடக் கூடாது. நமது மார்க்க பக்தியை ஒவ்வொரு

விஷயங்களிலும் காட்டவேண்டும். நமது நாயகம் (ஸல்.) அவர்களின் நடவடிக்கைகளையே எடுத்து நடத்தல் வேண்டும். இதுவே நமக்கு சிறந்த நாகரீகம். மற்றெல்லாம் நம்மைப் பொருத்த வரையில் நமக்கு மேன்மை யளிக்க வல்லதல்ல.

ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர் சொந்த அறிவு, மதாச்சாரம், முன்னோரின் முன்மாதிரி இவைகளைக் கொண்டு நடக்கவேண்டுமே யல்லாது, வெளிப்பகட்டில் மயங்கி வீணாக கெட்டுப் போகாமலிருக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் டெபுடேஷன்

ஜனாப் மௌலானா மௌல்வி அல்ஹாஜ் S. A. முகம்மத் அலீ சாஹிப், மௌலானா மௌல்வி முகம்மது ஷர்புதீன் சாஹிப், மௌலானா மௌல்வி முகம்மது மியான் சாயபு முதலிய கனவான்கள் சிலோனில் நமது சங்கத்தின் பிரதிநிதிகளாய் சுற்றுப் பிரயாணம் செய்து வருவது நேயர்களறிந்ததே. நமது சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உபகாரம் தேடி பிரசாரம் செய்வதோடு சிலோனிலுள்ள முஸ்லிம் கனவான்களின் வேண்டுகோளுக்கிணங்கி மௌலானக்கள் இஸ்லாமிய பிரசாரமும் புரிந்து வருகின்றார்கள். முஸ்லிம்களை உற்சாகமூட்டி மார்க்கச் சேவை, சமூகத் தொண்டின் முதற்படியில் வரவேண்டும் என உபந்நியாசித்து வருகின்றார்கள். இவ் வுபதேசங்களைக் கேட்டு ஆங்காங்கு சமூக ஒற்றுமை, சமூகப் புணருத்தாரணம் நிலவி வருகின்றது.

இத் தோரணையில் நமது மௌலானக்கள் கொழும்பில் பற்பல விடங்களிலும் பிரசாரம் புரிந்து அருஞ் சேவை செய்து சங்கத்திற்கு அங்குள்ள முஸ்லிம்களால் அளிக்கப்பட்ட நன்கொடைகளையும் ஒப்புக்கொண்டு 16-6-38-ல் புத்தளம் விஜயம் செய்தார்கள். அங்குள்ள கனவான்கள் நமது உலமாக்களை வரவேற்று உபசரித்து பிரசாரத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். அவ்விடத்தில் நாலு பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டது. ஜனங்களுக்கு சன்மார்க்க முன்னேற்ற விஷயத்தில் ஏற்பட்ட உற்சாகத்திற்கு அளவுகூற முடியாது. ஜனாப்களான ஹெட்மூர்மென், டவுன் காலீ S. A. K. ஹமீது ஹஸன்மரைக்காயர், ஷியார் மருகர் அல்ஹாஜ் முகம்மது அலி மரைக்காயர், S.A.M. ஹனீபா மரைக்காயர், புரக்டர் H.S. இஸ்மாயீல் மரைக்காயர், T. S. M. அப்பாஸ் மரைக்காயர், அரபி மத்ரஸாவின் உஸ்தாது மௌள்வி முகம்மது ஹஸன் சாஹிப் முதலானவர்கள் டெபுடேஷன் வெற்றிகரமாக முடிவதற்கு எடுத்துக் கொண்ட பிரயாசை அளவிடப் பாலதன்று. நமது மாசிகைக்கு புதிய சந்தாதார்களை சேமித்தும் சங்கத்திற்கு நன்கொடை திரட்டிக்கொடுத்தும் நமது பிரதிநிதிகளை வெகு சிறப்பாய் வழியனுப்பினார்கள். 22-6-37ல் நமது பிரதிநிதிகள் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். அவர்களில் மௌலானா மௌல்வி S. K முகம்மது ஷர்புதீன் சாஹிப் அவர்கட்கு திரேக அசௌகரியத்தால் அடிக்கடி கஷ்ட மேற்பட்டு கொண்டிருந்ததால் அன்னவர்களை 25-6-58-ல் வெகுசிறப்பாய் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நண்பர்கள் மௌலானா அவர்களுக்கு கோட்டை ஸ்டேஷனில் பிரிவுபசாரம் கூறி வழியனுப்பினார்கள்.

மௌலானா மௌல்வி அல்ஹாஜ் முகம்மத் அலி சாஹிப் அவர்களும், மௌலானா மௌல்வி அபுல்பயான் M. முகம்மதுமியான் சாகிபு அவர்களும் 25-6-38 கொழும்பிலிருந்து பிரயாணமாகி வத்துகாமம் வந்து சேர்ந்தார்கள். கனம் மௌலானக்களை அங்குள்ள வியாபாரிகள் வெகு சிறப்பாய் வரவேற்றார்கள். இவ் உலமாக்கள் விஜயம் செய்ததற்கு அங்குள்ள முஸ்லிம்களுக்கேற்பட்ட குதூகலத்திற்கு ஒரு அளவு கூற முடியாது. அவ்விடத்தில் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டது. ஏராளமான ஆண் பெண்கள் வந்து குழுமி, மௌலானக்களின் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தித்தார்கள்

அவ்விடமுள்ள பிரபல வியாபாரிகளான ஜனுப்கள் M. S. நாகூர் பிச்சை மரைக்காயர், மௌலானு கு. செ. அபுல்ஹசன் மரைக்காயர், கு. மு. அ. அப்துர்ரஹமான் மரைக்காயர் முதலிய கனவான்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை அளவிடக் கூடியதன்று. இக்கனவான்கள் அப்பகுதியில் டெபுடேஷன் செல்லுமிடங்களுக்கெல்லாம் கூடவே சென்று டெபுடேஷனை ஆதரித்தது குறிப்பிடத்தக்கதாகும். அக்கனவான்கள் நமது சங்கத்திற்கு நன்கொடைகள் அளித்ததுடன் பிறரிடமும் நன்கொடை வசூலித்தும் பத்திரிகைக்கு மிகுதமான சந்தாதார்களைச் சேர்த்தும் பேருபகாரம் புரிந்தார்கள். அன்னவர்களுக்கு அல்லாஹுதஆலா தனது அருள் மாரியைச் சொரியச் செய்வாளுக.

28-6-38 மௌலானுக்கள் தங்கள் சஹாக்களோடு மாத்தளை விஜயம் செய்தார்கள். அங்குள்ள முஸ்லிம்களும் வெகு குதூகலத்துடன் வரவேற்றூர்கள். ஆங்கு இரண்டு பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. "சவாதுல் அஃலம்" சங்கத்தின் காரியதரிசி ஜனுப்கள் K. M. சயீது, கதீப் கிதுர் முகம்மது லெப்பை, P. S. K. V. முகம்மது லெப்பை பல்லாக்கு லெப்பை கம்பெனியார், இக்கனவான்கள் அரும் பிரயாசை எடுத்து சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உதவி புரிந்தார்கள்.

1-7-38 மௌலானுக்கள் கண்டிமாநகர் விஜய செய்து மெஸ்ஸர்ஸ். K. K. பாவா அன் பிரதர்ஸ் விருந்தினராகத் தங்கி இருந்தார்கள். அவ்விடத்திலும் ஐந்து பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வொரு பிரசங்கத்திலும் கூட்டங்கூட்டமாய் ஜனங்கள் வந்து அரும் பிரசங்கங்களைச் செவியுற்று பயன் பெற்றூர்கள். ஜனுப்களான K. K. பாவா அன் பிரதர்ஸ், M. M. முகம்மது மைதீன் மரைக்காயர், மஜீது நானு, M. M. இஸ்மாயீல், இ. நி. கா. காதர் பாக்ஷா சாஹிபு, ஹாஜி ஆதம் ஹாஜிமூஸா, மௌலானு கம்பனி, K. M. மீருன் சாஹிப், K. A. M. P. ஹாஜி மீருசாஹிப் இவர்கள் கூட்டங்கள் கூட்டுவதற்கும், டெபுடேஷன் வெற்றிகரமாய் முடிவதற்கும் அரும் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள். இவர்களில் K. K. பாவா அன் பிரதர்ஸ், மு. மு. முகம்மது மைதீன் மரைக்காயர் இவர்கள் எடுத்துக் கொண்ட பிரயாசை தனிப்புகழுக்குரித்தானதாகும். இவர்கள் நன்கொடை திரட்டியும் சந்தாதாரர்களை சேமித்தும் உதவிபுரிந்தனர். அல்லாஹ் தஆலா நன்மைக்கு உதவி புரிந்தவர்களுக்கு நன்மையே செய்வானுகவும். இதனிறுதியில் பேருதனியில் "பேருதனி முஸ்லிம் சங்க"த்தின் கூட்டத்திற்கு மௌலானுக்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அங்கு மௌலானுக்கள் 'சங்கத்தின் அவசியம்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினுர்கள். கட்டம்பை முஸ்லிம்களின் வேண்டுகோளுக் கிணங்க சையது அகமது சாஹிப் அவர்களின் முயற்சியால் அவ்வூர் பள்ளிவாசலில் ஒரு உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது.

8-7-38-ல் மௌலானுக்கள் கண்டி முஸ்லிம்களிடம் விடைபெற்று கம்பளைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அன்று ஜும்ஆவில் டவுன் பள்ளியில் ஒரு சிறு உபந்நியாசம் புரியப்பட்டது. அன்று பின்னேரம் சனிக்கிழமை இரவு மோல்டன் ஸ்டிரீட்டில் "லஜ்னதுல் முஸ்லிமீன்" சங்கத்தின் வருஷ விழா நடத்தப்பட்டது. தலைவர்களும் ஊர் ஜனங்களும் வீற்றிருக்க ஆடம்பரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அலீ ஜனுப் M. S. N. உமர் பாக்ஷா சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். கிருஅத்து ஓதப்பட்டபின் சங்கத்தின் காரியதரிசியால் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சபையோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதுபொழுது நமது மௌலானுக்கள், "முஸ்லிம்களின் கடமை, நபிகள் பெருமான் (ஸல்.) அவர்களின் தியாகம்" என்னும் பொருள் பற்றி நீண்ட பிரசங்கம் செய்தார்கள். வந்தனேபசாரத்திற்குப்பின் சபை இனிது முடிவுபெற்றது. இக்கூட்டத்திற்கு கண்டி, பேருதனே மற்றும் கம்பளையின் சுற்றுப்புறங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் விஜயஞ்செய்திருந்தார்கள்.

9-7-38 சனி பின்னேரம் ஞாயிறு இரவு டவுன் பள்ளியில் மாபெருங்கூட்டம் நடைபெற்றது. அம் மஜ்ஜிதின் கதீப் கா. செய்யது முகம்மது ஆலிம் சாகிபு தலைமை வகித்தார்கள். நமது மௌலானுக்கள், நபிகள் கோன் (ஸல்.) அவர்களுடைய மகாத்மியத்தையும், பொய்யாக நபியென தாவாச் செய்தவர்களின் புரட்டுத்தனத்தையும் விளக்கிப் பேசியதோடு ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் செய்துவந்த—வரும் சேவைகளையும், அதனை முஸ்லிம்கள் ஆதரிக்க வேண்டி அவசியத்தையும் சவிஸ்தாரமாக எடுத்தோதினுர்கள். ஜனுப் வ. மி. ஷம்ஷுத்தீன்

சாகிப் ஹிபாஜத்துல் இஸ்லாம், ஸைபுல் இஸ்லாம் இவைகளை முஸ்லிம்கள் ஆதரிக்கவேண்டுமென்றும், தாருல் இஸ்லாத்தின் போக்கைக் கண்டித்தும் முஸ்லிம்களின் இராஜ்ய தேசிய முன்னேற்றத்தின் அவசியத்தை விஸ்தரித்தும் பேசினார். இதன்பின் பிரபல வியாபாரியும் இம்மஜ்தின் முத்தவல்லியுமான ஜனாப் ம. செ.செய்யது முகம்மது மரைக்காயர் அவர்கள் ஹிபாஜத்துல் இஸ்லாமை சகல துறைகளிலும் நாம் ஆதரித்து மௌலானாக்களைச் சிறப்பாக யனுப்பி வைக்கவேண்டும் என வற்புறுத்திப் பேசினார்கள். அதனை ஆதரித்து லஜனத்துல் முஸ்லிமீன் சங்க பிரசிடெண்ட் செ. ம. ஆ. மக்தூம் ஆலிம் சாகிபு அவர்களால் பேசப்பட்டு இரவு 12-மணிக்கு சபை இனிது முடிவு பெற்றது.

அதன் பின், டவுன் மஸ்ஜித் முஸ்லிம் சொஸைடியின் சார்பாக ஒரு கூட்டம் நடத்தப் பட்டது. அக் கூட்டத்திற்கு அலி ஜனாப் ம. செ. செய்யது முகம்மது மரைக்காயர் அக்கிராசனம் வகித்தார்கள். வி. டி. தெ. லெனரூல் என்பவரால் எழுதப்பெற்ற உலக சரித்திரத்தின் உத்தம புருஷர்கள் என்ற சிங்களவ வாசகமொன்றின் 9-வது பாடத்தில் ஒரு சித்திரப் படத்தைப் பொறித்து அதனடியில் "முகம்மதும் அவர் சிஷ்யர்களும்" என்று வரையப் பட்டிருக்கின்றது. இதைக் கண்டு முஸ்லிம் உலகம் மிகவும் மன வருத்தப்பட்டிருக்கிறது. நபிகள் நாயகம் அவர்களே படங்களை வைக்கக் கூடாதென்று வற்புறுத்தி கூறியுள்ளார்கள். அன்னிய மதத்தினர் அடிக்கடி இம்மாதிரி நபிகள் பெருமானாரின் (ஸல்.) படம் என்று எதெதையோ பிரசுரித்து வருகின்றார்கள். அவைகளெல்லாம் முஸ்லிம்களால் கண்டிக்கப்பட்டு இனி அவ்வாறு செய்வதில்லையென்று மன்னிப்பு கேட்டுக்கொண்ட விஷயம் உலகறிந்ததே. அத்தோரணையில் தான் இந்த புஸ்தகமும் இருந்து வருகின்றது. இதனைக் கண்டித்து அடியிற்கண்ட தீர்மானத்தை ஜனாப் செ. ம. அ. மக்தூம் ஆலிம் சாகிபு அவர்களால் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்.

1. இச் சிங்கள வாசக புத்தகத்தில் நபிகள் பெருமானார் அவர்களின் படம் என்று ஒரு சித்திரப் படம் பிரசுரித்திருப்பதை இம் மகாநாடு வெகு அழுத்தமாய்க் கண்டிக்கின்றது. இதனை, காருண்யம் பொருந்திய சிலோன் கவர்ன்மெண்டார் பறிமுதல் செய்து முஸ்லிம்களின் ஹிருதயத்திற்கு சாந்தியளிக்க வேணுமென்று கேட்டுக்கொள்கின்றது.

2. எல்லா முஸ்லிம் சங்கங்களும் இதனைக் கண்டித்து கவர்ன்மெண்டாருக்கு தெரியப் படுத்த வேண்டுமாய்க் கோருகின்றது.

3. இதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள டவுன் மஸ்ஜித் முஸ்லிம் சங்கத்திற்கு அதிகாரமளிக்கிறது. இதனை ஜனாப் M. S. N. உமர்பாக்ஷா அவர்களும், மௌலானா அபுல் பயான் முகம்மது மியான் சாஹிப் அவர்களும் ஆமோதித்துப் பேசினார்கள். மௌலானா அல்ஹாஜ் மௌல்வி முகம்மத் அலி சாஹிப் அவர்கள் இதனை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: இப்புத்தகம் கண்டி முஸ்லிம்களால் எங்களுக் களிக்கப்பட்டது. இதன் மீது சிலோன் முஸ்லிம்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை நாங்கள் பாராட்டுகிறோம். இன்ஷா அல்லாஹ் நாங்கள் சென்னை சென்றபின் உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் சார்பாகவும் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம். இவ்வாறே சென்னையிலும் பற்பல சம்பவங்கள் நிகழ்வுற்றது அவைகளை உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் தக்க முயற்சி செய்து கவர்ன்மெண்டின் மூலம் நடவடிக்கை எடுத்து சில புத்தகங்களைப் பறிமுதல் செய்யும் படியும் சிலவற்றிலிருந்து ஆக்ஷேபிக்கத்தக்க விஷயங்களை நீக்கிவிடும் படியும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே நாம் இது சம்பந்தமாக வேண்டிய முயற்சி செய்து எவ்விதத்திலும் இத் துற்கிரியை ஒழியவேண்டும் என்று பேசி முடித்தார்கள். இத்தீர்மானத்தை மகாஜனங்கள் எழுந்து நின்று அல்லாஹு அக்பர் என்ற கோஷத்துடனேயே ஆமோதித்தார்கள். துஆ ஓதப்பட்டு சபை இனிது முடிவுபெற்றது.

எவ்வாறு ஒற்றுமை ஏற்படும்

மாயூரம் முனிசிபல் ஹைஸ்கூல் தலைமை தமிழ் பண்டிதர் வித்துவான் கி. கோபால கிருஷ்ண ஐயர் அவர்களால் எழுதப்பட்டு சென்னை தம்புசெட்டி தெருவிலுள்ள பயொனீர் பப்ளிஷர்ஸ் கம்பெனியிலிருந்து வெளியான "வாசக மஞ்சரி, மலர் 41. பக்கம் 27-32 பாடம் நெ. 11-ல் கீழ்வருமாறு வரையப்பட்டிருக்கிறது.

மகம்மது நபி

ஆசியா கண்டத்தின் தீபகற்பங்களுள் அரேபியாவும் ஒன்று. அது நமது நாட்டின் மேற்றிசையிலுள்ளது. ஆனல் அது நமது நாட்டினின்று பல விதங்களிலும் வேறுபடும். அரேபியா பாலைவனமடர்ந்தது. அங்கு ஆறுகள் இல்லை. பெரிய நகரங்களும் இல்லை. ஜனத்தொகையும் அங்குக் குறைவாயிருக்கிறது. ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஊர்விட்டு ஊர் சென்று கொண்டேயிருப்பார்கள். பாலை வனங்களின் நடுவில் நீரூற்றுக்கள் உள்ளன. ஊற்றுக்களைச் சுற்றிப் பேரீச்ச மரங்களும் புல் வெளிகளும் இருக்கின்றன. பிரயாணஞ் செய்வோர் அப்பாலைவனச் சோலைகளில் தங்கிச் செல்வார்கள். பாலை வனத்தைக் கடப்பதற்கு ஒட்டகமே ஏற்ற ஊர்தி. அரேபியக் குதிரைகளும் சிறப்புற்றவை. புரவிகளை அவர்கள் தமது பிள்ளைகளைப்போல் நடத்துவார்கள்.

அரேபியர்கள் பிறருக்கு வணங்கமாட்டார்கள். போரில் அவர்களுக்கு அவா அதிகம். தங்களுக்குள் ஏற்பட்ட குறைகளை அவர்கள் வாள் கொண்டே நீக்கிக் கொள்வார்கள். வழியோடு செல்பவர்களும் போரில் கலந்துகொண்டு தங்கள் வீரத்தைக் காண்பிக்க முயல்வார்கள். முஹம்மதிய மதம் ஆரம்பிப்பதற்குமுன்பு அரேபியர்கள் கிரஹங்களையும், நக்ஷத்திரங்களையும், விக்கிரஹங்களையும் ஆராதித்து வந்தனர். கி. பி. 570-ல் இத்துணைச் சிறப்புவாய்ந்த நாட்டின் சிறந்த மெக்கா நகரில் மஹம்மது அவதாரம் செய்தார். மஹம்மதின் பெற்றோர் அப்துல்லாவும் ஆமீனவுமாம். அப்துல்லா குழந்தை பிறந்தவுடன் பரலோகம் சென்றார். தாயும் அதன் எட்டாவது ஆண்டில் உயிர் நீத்தார். பெற்றோரற்ற பிள்ளையை அபூதாலபு என்ற அவரது மாமன் பராமரித்து வந்தார். அபூதாலபு தமது மருமகனை வாணிகத்தில் பயிற்சி செய்வித்தார்.

மஹம்மது தமது இருபத்தைந்தாம் பிராயத்தில் மெக்காவிலுள்ள கடிஜா என்ற ஒருவரிடம் சேவகத்தில் அமர்ந்தனர். கடிஜா மிகுந்த செல்வம் படைத்தவர். கடிஜா மஹம்மதின் ஊழியத்தையும் அன்பையும் பாராட்டி மூன்று வருஷங்களுக்குள் அவரை மணம் புரிந்து கொண்டார். மஹம்மதின் பெருமையும் உயர்ந்துவிட்டது. அவர் மணம் செய்து கொண்ட பிறகு பதினைந்து வருஷங்கள் வரையில் உலகத்திற்குப் புதிய மதம் ஒன்றை உபதேசிக்க ஆலோசனை செய்துவந்தார். அவர் கி.பி. 609-ம் ஆண்டில் தம்முடைய கொள்கைகளை வெளியிடத் துணிந்தார். மெக்காவின் அருகில் ஹீரா என்ற ஒரு குகை இருந்தது. மஹமது நாள்தோறும் அங்கு சென்று பலக்கடுமையான நோன்புகள் செய்து இக்கொள்கைகளைக் கண்டுபிடித்தார். அவருடைய ஞானத்தைக் கண்ட அவருடைய மனைவியும், அடிமை ஒருவனும் அவருக்குச் சீடராயினர்.

பின்னர், ஆலி யென்ற அவருடைய மாமன் மகனும், அபுபேக்கர் என்ற மெக்கா நகரத்துத் தனவந்தரும் அவருடைய மதத்தைத் தழுவினர். அபுபேக்கர் மிகுந்த செல்வாக்கு படைத்தவர். அவருடைய விருப்பத்திற் கிணங்கப் பலர் மஹம்மதை தமது குருவாகக் கொண்டனர். அபூவினுடைய அருஞ் செயலை நோக்கி மஹம்மது அவருக்கு 'அப்து அல்லா' என்ற பட்டம் வழங்கினர். அதற்குக் கடவுளுடைய அடிமை யெனப் பொருள்படும். மஹம்மது மூன்று வருஷகாலம் தமது மதத்தை இரகசியமாகவே பரப்பிவந்தார். அவர் தமக்குத் தகுந்த துணைவர் கிடைத்து விட்டனரென்று அறிந்ததும் வெளிப்படையாக உபதேசம் புரியலாயினர். மஹம்மது தமது மாமன் மகனுகிய ஆலி

யைக் காலிபாகச் செய்து எல்லோரும் அவருக்குக் கீழ்ப்படுமாறு ஆக்ஞை செய்தார்.

மகம்மதின் அழகிய மேனியும், கூறிய அறிவும், கவரத்தக்க சொற்களும், ஞாபக சக்தியும் ஜனங்களை மயக்கின. ஆனால், அவர் விக்கிரக ஆராதனையையும், அரேபியரின் புராதன மதக் கொள்கைகளையும் அழுத்தமாக எதிர்த்தார். ஆதலால் அவருக்குப் பகைவர்கள் அதிகமாயினர். கோரிஷ் இனத்தார் மஹம்மதையும் அவருடைய சீடர்களையும் அல்லற்படுத்தினர். அவ்வல்லல்களைத் தாங்கவொண்ணாது அவருடைய சீடர்கள் பலரும் ஊரைவிட்டு வெளியோடினர். ஆனால் மஹம்மது தனது மாமனது காவலில் கவலை இன்றி அங்கேயே இருந்தார். கோரிஷ் இனத்தார் மஹம்மதைச் சேர்ந்தவருடன் எல்லாக் கூட்டுறவுகளையும் மறுத்தனர். சிறிது காலத்திற்குள் அவருடைய மாமனும், மனைவியான கடிஜாவும் காலஞ்சென்றனர். கோரிஷ் ஜாதியார் பலமாகத் தாக்கினர். மெக்காவிற்கு அருகில் மெடினா என்ற நகர் உண்டு. மெடினா வாசிகளிற் பலர் அவருடைய கொள்கைகளை ஆதரித்தனர். அவர்கள் மஹம்மதைக் காப்பாற்றுவதாக வாக்களித்தனர். கோரிஷர் மஹம்மதைக் கொல்ல ஏற்பாடு செய்தனர். ஆதலால், அவர் இரண்டொரு நண்பருடன் மெடினாவிற்குச் சென்றனர். மெடினாவிற்கு அருகில் 'கோபா' என்ற ஒரு கிராமம் இருந்தது. கோபாவை யடைந்ததும் அவருடைய ஒட்டகம் நடக்கமுடியாமல் முழங்காற் படியிட்டது. அதன் ஞாபகார்த்தமாகக் கோபாவில் ஒரு மசூதி கட்டப்பட்டது. கி.பி. 622-ம் வருஷத்தில் மெடினா வாசிகள் மஹம்மதை ஊர்வலமாகத் தமது ஊருக்கு அழைத்துச் சென்றனர். மெக்காவிலிருந்து மெடினாவிற்கு ஓடினதை 'ஹிஜிரா' என்று மஹம்மதியர்கள் கொண்டாடுகிறார்கள்.

மெடினா சென்றதும் அவருடைய நிலைமை மாறிவிட்டது. மெக்காவில் அவர் செய்த கொரான் உபதேசங்களைப் பார்த்தால் சாந்தம் நிலவி வருகிறது. ஆனால் மெடினாவுக்குச்சென்ற பின் அவருடைய உபதேசங்கள் வீரம் பொருந்தியவைகளாக உள்ளன. பலாத்காரமாகவும் மதத்தைப் பரப்புமாறு அவர் ஆக்ஞாபிக்க ஆரம்பித்தார். மெடினா வாசிகளும் கையில் வாளேந்தி அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படிந்து வந்தனர். அவர் மெடினாவுக்கு அரசராகி விட்டார். ஆதலால், அவர் தமது பகைவராகிய கோரிஷாரை எதிர்க்க முயன்றார். இறுதியில் 'பேடர்' என்ற இடத்தில் கோரிஷார் முறியடிக்கப்பட்டனர். கொஞ்சகாலம் வரையில் மஹம்மதியர்கள் கொள்ளை யடித்தும், பகைவர்களோடு போர்செய்தும் பராக்கிரமம் பெற்று மதத்தைப் பரப்பினார்கள். யூதர்கள் வெல்லப்பட்டனர். மக்கா நகரத்துக் கோரிஷாருக்கும் மஹம்மதுவுக்கும் சமாதானம் ஏற்பட்டது. பின்னர் அவர் சுற்றுப் பக்கங்களிலுள்ள சிற்றரசர்களையெல்லாம் தம் வயப்படுத்தினர். இறுதியில் மெக்கா நகரம் கைப்பற்றப்பட்டது. மஹம்மது தனது கணக்கற்ற வீரர்களுடன் அல்லா அக்பர் (கடவுளே பெரியவர்) என்று கூறிக்கொண்டு நகரத்தில் பிரவேசித்தார். மெக்கா கோயிலிலுள்ள விக்கிரகங்கள் தகர்க்கப்பட்டன. மெக்காக் கோயிலில் முதன் முதலாக மஹம்மதிய மதக்கொள்கைகள் போதிக்கப்பட்டன. அரேபியர்கள் மஹமத்தின் கொடியின்கீழ் எண்ணிறந்து சேர்ந்தனர். கொலையும், கொள்ளையும் அவர்களை உற்சாகப்படுத்தின. அரேபியா முழுவதும் மகம்மதிய மதம் பரவிற்று. மகம்மது தாம் அவதரித்த தன் நோக்கங்களை ஒருவாறு முடித்துவிட்டார். அவர் தமது அறுபத்து மூன்றாவது வயதில் விண்ணுலகுக்கேகினார். அவருடைய சீடர்கள் நாடு நாடாகச்சென்று மஹம்மதிய மதத்தைப் பரப்பினர். தற்காலத்தில் உலகத்திலுள்ள மதங்களில் மஹம்மதிய மதம் பெரும் பாலரால் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு அப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—வாசகபஞ்சரி மலர் 4-லினுள்ள இந்தப்பாடம் முஸ்லிம்களது மனத்தைப் புண்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இதனைக் குறித்து இதற்கு முன்னும் நம்மவர் கண்டனங்கள் செய்திருந்தும், இதனைத் திருத்தி வெளியிடாமல் இப்புத்தகத்தின் ஆசிரியர் வாளாவிருந்து வருவது கண்டிக்கத்தக்கதாகும். இதன் வாசகத்தைப் பார்க்கிற எவரும் இதன் ஆசிரியர் இங்கிலீஷ் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதைப் பார்த்து மொழி பெயர்த்திருக்கிறார் என்றே கருதுவர். இதன் வாசகம் முழுவதும் மரியாதைக் குறைவான தோரணையிலேயே இருக்கின்றன. ஹஜ்றத் ஆபூதாலிப் அவர்களை நாயகம் (ஸல்.) அவர்களது மாமன் என்பதாகவும், ஹஜ்றத் அலீ (றலி.)

அவர்களை மாமன் மகன் என்பதாகவும் எழுதி இருப்பது ஆசிரியருக்கு முஸ்லிம்களது சரித்திர விஷயத்தில் கொஞ்சம்கூட ஞானம் இல்லை என்பதை அறிவிக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தந்தையுடன் பிறந்தவர் பெரிய தந்தை, அவரது புதல்வரான ஹஜ்ரத் அலி (றலி.) அவர்கள் பெரிய தந்தையின் புதல்வரான தம்பி என்பதை ஆசிரியர் உணர்வாராக.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பலாத்காரமாக மதத்தைப் பரப்புமாறு ஆக்ஞாபித்தார்; முஸ்லிம்கள் கொள்ளையடித்தனர்; நபிகள் நாயகம் (ஸல்) இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்தார்கள் என்று கூறி இருக்கும் வாசகங்கள் கண்டிக்கத் தக்கவை. இவை இஸ்லாம் மதத்தின் கொள்கைகளை தவறான முறையில் சிறுவர்களுக்குப் போதித்து இஸ்லாத்தின்பால் துவேஷ உணர்ச்சி, தப்பு எண்ணம் இவைகளை வளர்ப்பதாக இருக்கிறது. இவைகளை அல்லாமல் இப்பாடத்தில் இன்னும் அநேக தவறுகளிருக்கின்றன இப்பாடத்தை மட்டிலுமேனும் இதன் ஆசிரியர் இஸ்லாம் மதக் கல்வியைக் கற்ற முஸ்லிம் அறிஞர்களிடம் காண்பித்துத் திருத்தி இருக்கலாம். இதனை இதற்கு முன்பும் கண்டித்திருந்தும் லக்ஷியம் செய்யாமல், திருத்திக்கொள்ளாமல் அவர் மறுபடியும் பிரசுரம் செய்து வருவது கண்டிக்கத்தக்கவிஷயம். முஸ்லிம் சகோதரர்கள் ஆங்காங்கு கண்டனக் கூட்டங்களைக்கூட்டி சர்க்காருக்குத் தெரிவித்து, அதனைத் திருத்திக் கொள்ளும்படி ஆசிரியரை நிர்ப்பந்திக்க வேண்டுமாக சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவ்வாறு திருத்திக்கொள்ளச் சம்மதிக்காவிடில் குறைந்தபக்ஷம் அதனைப் பாட புத்தகமாக வைக்காமல் இருக்கும்படியும், ஆசிரியர்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இஸ்லாத்தின் விரோதிகள் இஸ்லாத்தின் கால்களுக்குக் கீழில்

இஸ்லாம் மதம்தான் சன்மார்க்கம் என்பதற்கு அநேக ஆதாரங்களுண்டு. அவைகளில், இஸ்லாம் மதத்தின் ஆரம்பக் காலத்தில் இஸ்லாம் மதத்தை மிகக்கடுமையாக எதிர்த்து ஆக்ஷேபனை செய்ததுடன் நபிகள் நாயகம் அவர்களது ஜீவியம் என்ற விளக்கை அணைத்து விடுவதற்கு விரோதிகள் அபாயகரமான பல சதியாலோசனைகளையும் செய்தனர். இறுதியாக அவர்கள் தங்களது தவறான நடவடிக்கைகளுக்கு வருந்தி, பச்சாதாபப்பட்டு தங்களது எஞ்சிய ஜீவியகாலம் முழுவதையும் இஸ்லாம் மதத்தைப் பரவச்செய்யும் விஷயத்திலேயே கழித்தனர். தனது விரோதிகளையும் கூடத் தன்னுள் இழுத்துக்கொள்ளக்கூடிய ஆகிர்ஷண சக்தி இஸ்லாத்தில் இருப்பதும் அதன் உண்மைக்கு ஒரு அத்தாட்சியாகும். இஸ்லாம் மதத்திற்குக் கொடிய விரோதிகளாக இருந்து, பின்னர் அதனைப் பரவச்செய்யும் காரியத்திலேயே தங்கள் வாணாள் முழுவதையும் செலவு செய்த பெரியார்களிற் சிலரைப்பற்றி இச்சிறு வியாசத்தில் சொற்ப விபரம் கூறப்படுகிறது.

ஆஸ்யதுட்னு ஆமிர்

இவர் பனு ஸஅத் கோத்திரத்தைச் சேர்ந்த கல்நெஞ்சமும் திடசித்தமும் படைத்த ஒரு தலைவர். இவருக்கு இஸ்லாம் மதத்தின்மீதும், இஸ்லாம் மதத்தைப் பிரபல்யப்படுத்திய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் கடுமையான பகை இருந்தது. வெளியிலிருந்து வருகிற ஜனங்களிடம் இஸ்லாத்தையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பற்றித் தூஷணமாகக் கூற வேண்டும், குறைகள் கூறவேண்டும் என்பதற்காக இவர் அநேக ஆட்களைச் சம்பளத்திற்கு அமர்த்தி வைத்திருந்தார். இவரும் அநேக கூட்டங்களுக்குச்சென்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது விஷத்தைக்கக்கி இருக்கிறார். இறுதியாக கி.பி. 612-ம் வருஷத்தில் இவர்தௌபாச் செய்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தர்பாருக்கு வந்து இஸ்லாம் மதத்திற் சேர்ந்தார்,

ஹாரிதுப்னு அர்கம் (றலி.)

இவரும் பனூ ஸஅத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு வாலிபர். இவர் இக்ரிமாஇப்னு அபீஜஹ்ல் (றலி.) அவர்களுடன் சேர்ந்து பல வருஷங்கள்வரை இஸ்லாம் மதத்தை மிகக்கடு மையாக எதிர்த்தார். ஏழை நவ் முஸ்லிம்களுக் குச் சொல்லொணுத் துன்பங்களை உண்டாக்கி ஞர். இவர் புதிதாக வருகிறவர்களிடம் சென்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மீது குறை களைக் கூறிக்கொண்டிருந்தார். இறுதியாக கி. பி. 617-ம் வருஷத்தில் விக்கிரக ஆராதனை செய்வதை விட்டு விலகி தௌபாச் செய்த துடன், இஸ்லாத்திற்கு சிறந்த ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்காக எஞ்சியுள்ள தமது வாணுளை அற்பணம் செய்தார். இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்வதற்காக கிராமப் பகுதிகளுக்குச் செல்வதும், ஏழை நவ்முஸ்லிம் களுக்கு உதவி ஒத்தாசை புரிவதும் வழக்கம். தன்னுடைய வீடுகளி லொன்றை நவ்முஸ்லிம் கள் தங்குவதற்காகத் தர்மமாகவும் கொடுத்தார்.

ஸுஹைஹவுப்னுராபிக் (றலி.)

இவர் தாயிப்வாசி. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தாயிப் நகருக்குச் சென்றிருந்த போது இவரும் நாயகம் (ஸல்.) அவர்கள் மீது கற்களை வர்ஷித்தார். கி. பி. 618-ல் இவர் தமது பாவங்களை விட்டுத் தௌபாச் செய்து, நாயகம் (ஸல்.) அவர்களது சமூகத்திற்குவந்து "அல்லாஹ்வின் றஸூலே, எனது வழி தவ றுக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வ துடன், தாங்கள் அல்லாஹ்வின் தூதர் என்ப திற் சந்தேகமில்லை என்பதையும், தங்களது பிரசாரம் சத்தியமானது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்' என்றுங்கூறினர். இதற் கப்புறம் அவர் தமது ஜீவியத்தை இஷாஅத்தே இஸ்லாமுக்காக வக்புச்செய்து விட்டார்.

பாறுக்கே அஃலம் (றலி.)

இவரது உயர்ந்த அந்தஸ்தை அறியாதா ரில்லை. இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில் இவர் இஸ்லாத்திற்கு மிகக்கடிய விரோதியாக இருந்தார் என்பதற்கும், ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் உதிரத்தின்மீது தாகங்கொண் டிருந்தார் என்பதற்கும் சரித்திரங்கள் சாக்ஷி யங்கூறுகின்றன. விக்கிரக ஆராதனைக் காரர் களது கும்பல்களின் மத்தியில் "என்னுல் இய லுமாயின் இன்றையதினமே யான் முஹம் மதின் (ஸல்) ஜீவியத்தை அணைத்து விடுவேன். ஆனுல், இக்காரியத்தைச் செய்துமுடிக்க எனக் குச் சக்திஇல்லையே" என்று பலமுறை கூறி இருக்கிறார்.

ஒருமுறை அவர் ஹுஜூரே அக்ரம் (ஸல்.) அவர்களைக் கொலை செய்துவிடவேண்டும் என்ற எண்ணத்தால் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் சமூகத்தில் ஆஜரானுர். என்றுலும், ஹுஜூர் (ஸல்.) அவர்களைப் பார்த்தவுடன் "இந்த முகம் பொய்யாகாது" என்று கூறியதுடன், அல்லா ஹுவின் தூதர் அவர்களே, நான் களங்கமற்ற மனத்துடன் இஸ்லாத்தின் சத்தியத் தன் மையை ஒப்புக்கொள்கிறேன், எனது சென்ற காலச் செய்கைகளுக்காக பச்சாதாபப்படு கிறேன்" என்றுஇஸலாத்தைத்தழுவி விட்டார். இதே பாறூக் (றலி.) அவர்கள் தான் இஸ்லாத் தின் மிகச் சிறந்த பிரசாரகராகவும், தலைவராக வும் இருந்தார் என்று இன்றும் போற்றப்படு கிறது.

ஹஜ்றத் காலிதுப்னுல்வலீத் (றலி.)

கி. பி. 621-ம் வருஷத்தில் இவர் ஹுஜூர் (ஸல்.) அவர்களுக்கு மிகக்கொடிய விரோதியாக வும் இஸ்லாத்தை அழித்துவிட முயலுபவ ராகவும் இருந்தார். உஹத் யுத்தத்தில் காபிர் களின் குதிரைப் படைக்குத் தளகர்த்தராக இருந்து எவ்வளவு திறமையாக யுத்தம் செய்து, முஸ்லிம் வீரர்களைப் படு கொலை புரிந்தார் என் பது இன்றும் சரித்திரத்தில் அழியாமல் இருக் கிறது. இதே காலித் பிறிதொருநாள் ஹுஜூர் (ஸல்.) அவர்களது சமூகத்தில் வந்து தமது செய்கைகளுக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டதுடன் "நான் தவருன பாதையில் இருந்தேன்; விக்கிரக ஆராதனை மிகக்கொடிய பாவச் செய்கையாகும்; இஸ்லாம்தான் சன் மார்க்கம்" என்று பகிரங்கமாக விண்ணப்பஞ் செய்தார். இதே காலிது (றலி) அவர்கள் மற் ருெரு சமயம் இஸ்லாம் மதத்தை ஆதரித்து யுத்த களத்தில் இறங்கி, தமது வாள் வலிமை யினுல் உரோம ஈரானிய ஏகாதிபத்தியங்களைத் தலை கீழாகப் புரட்டுகிருர். இதே காலிப்னு வலீது (றலி.) தான் முஸல்லமத்துப்னு கத் தாபை அடக்கும்படியாக போர்க்களத்திற்கு அனுப்பப்படுகிருர். அவனது விஷமத்தை அடக்கி மண்ணுடன் மறைக்கிருர். இதே காலிது (றலி.) தான், இஸ்லாத்திற்கு விரோத மாகக் கிளம்பிய கலக்காரர்களை அடக்குவதற் காக நியமிக்கப்படுகிருர். போர்க் களத்தில்

தனது வீரதீர பராக்கிரமத்தைக் காண்பிக்கிருர்.

அம்றுப்னு ஆஸ் (றலி.)

இவர் இஸ்லாத்திற்குப் பெரிய விரோதியாகவும், இருலோகத்திற்கும் சர்தாரான நாயகம் (ஸல்.) அவர்களது ரத்தத்தை ஒட்ட விரும்புபவராகவும் இருந்தார். ஒரு நாள் நாயகம் (ஸல்.) அவர்களது தர்பாரில் ஆஜராகித் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டு, அவைகளுக்காகத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிருர். உடனே, இதே அம்றுப்னுஆஸ்(றலி.) இஸ்லாமியப் பிரசாரகராக மாறிப் பற்பல கிராமங்களுக்கும் செல்கிருர். தம்முடைய இப்பிரசாரத்தில் கம்பீரமாக வெற்றியடைந்து திரும்புகிருர். இதே அம்று (றலி.) மற்ெறாரு காலத்தில் இஸ்லாமிய வீரர்களுக்குத் தளகர்த்தர் என்ற முறையில் எகிப்துக்குப் படையெடுத்துச் சென்று, அதனை ஜெயிக்கிருர்.

உர்வத்துப்னு மஸ்ஊத் (றலி.)

இவரும் இஸ்லாத்திற்கும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் கொடிய விரோதியாக இருந்தார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவை ஹிஜ்றத்துச் செய்து, மதீனுவிற் குடியேறுவதற்குமுன் ஏழை முஸ்லிம்களுக்குப் பல கொடுமைகளைப் புரிந்தார். இஸ்லாம் மதத்தைவிட்டு அவர்களைத் திருப்பிவிட முயன்ருர். என்ருலும், இதே உர்வா மற்ெறாருநாளில் குப்ரின் மடியைவிட்டு மாறி இஸ்லாத்தின் மடியில் வந்து, இஸ்லாத்தின் உண்மைப் பிரசாரகராகிவிடுகிருர். இதே உர்வா இஸ்லாத்தைத் தழுவியபின் பற்பல பகுதிகளுக்கும் சென்று, ஜனங்களின் மத்தியில் "நான் இஸ்லாத்திற்குப் பரம விரோதியாக இருந்தேன்; விக்கிரகங்களை வணங்கினேன்; எனது ஆத்மாவிற்குச் சாந்தி ஏற்படவில்லை; எனது அறிவு இஸ்லாத்தின்பால் திரும்பிவிடும்படியாக எனக்குப் புத்தி சொல்லிற்று; பின்னர் நான் இஸ்லாத்தைத் தழுவிய பிறகுதான் எனக்கு ஆன்ம சாந்தி ஏற்பட்டது" என்று பகிரங்கமாகப் பிரசங்கம் புரிகிருர். இவரது முயற்சியால் கிட்டத்தட்ட 200 பேர்கள் இஸ்லாத்தைத் தழுவுகின்றனர்.

ஸுஹைறுப்னு அம்ர் (றலி.)

இஸ்லாத்திற்கு விரோதியாக இருந்தது மட்டுமில்லாமல் நாயகம் (ஸல்.) அவர்களையே தொலைத்துவிடவேண்டுமென இவர் விரும்பியவர். ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போழ்து நாயகம் (ஸல்.) அவர்களை கொலை செய்துவிடவேண்டுமென நினைக்கிருர். உடன்படிக்கைப் பத்திரத்தில் "முஹம்மதுர்ரஸூலுல்லாஹ்" என்று எழுதக்கூடாது என்று கூறி "முஹம்மதுப்னு அப்தில்லாஹ்" என்று எழுதச்செய்கிருர். சில தினங்களுக்குப் பிறகு இவர் நாயகம் (ஸல்.) அவர்களது உண்மை சிஷ்யராகிவிடுகிருர். திறமைவாய்ந்த பிரசாரகராக மாறிவிடுகிருர். பனு ஸலீம்கோத்திரத்தாரிடம் இஸ்லாம் மதப் பிரசாரம் செய்கையில் சபையினரிடம் "நான் இஸ்லாத்தின் பரம விரோதியாக இருந்தேன்; நாயகம் (ஸல்.) அவர்களுக்கு கொடிய பகைவனுமாக இருந்தேன்; விக்கிரக ஆராதனைதான் எனது சொந்த தொழிலாக இருந்தது; என்ருலும், அறிவு என்னை இஸ்லாத்தின்பால் திரும்பச்செய்தது; ஹுஜூர் (ஸல்.) அவர்களது உண்மையையும் சத்தியத் தன்மையையும் உணர்ந்திருந்தேன்; இறுதியாக அவர்களது உண்மை என்னை பணியச்செய்தது; இஸ்லாத்தின் மடியில் எனக்குச் சாந்தி கிடைத்தது; இப்பொழுது நான் இஸ்லாத்தின் உண்மைச் சேவகனுக இருக்கிறேன்" என்று பிரசங்கித்துப்பலரை இஸ்லாத்திற் சேர்த்தார்.

நேயர்காள்! இஸ்லாத்தின் உயர்தர உன்னதமான மகிமை எவ்வாறிருக்கிற தென்பதை நன்கு ஆராய்ந்து பாருங்கள்.

இஸ்லாத்தின் பரம விரோதிகளுடையவும், நபிகள்திலகம் (ஸல்) அவர்களை கொலை செய்து இஸ்லாத்தையும்—முஸ்லிம்களையும் இவ்வுலகிலேயே இல்லாது செய்துவிடவேண்டுமென்று மூர்க்க குணத்துடன் மார்தட்டி முன்வந்தவர்களுடையவும் நிலைமைகளெல்லாம் என்னவாயிற்றென்பதை உன்னிப் பாருங்கள். அவ்விரோதிகளெல்லாம் இஸ்லாத்தின் கால்களுக் கீழால் சத்தியத்திற்கு முன்னிலையில், நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களது சமூகத்தில் எவ்வாறு சரணடைந்தார்களென்பதை நன்கு நோட்டமிட்டுப் பாருங்கள். கடைசியில் சத்தியமே ஜெயம்பெறும் என்பதை நன்குதெரிந்துகொள்வீர்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208355
சென்னை-600 008

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

யான் எனது காரியாலயத்தில் வீற்று முக்கிய கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்குங்கால், இற்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் சீமானாகவிருந்த லாலா நந்துகுஷூர் என்பவர் என்னிடம் வந்து ஐந்து ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென, வேண்டிக்கொண்டார். உடனே யான் லாலாஜீ இதுபொழுது உமக்கு அவ்வளவு முக்கியமாய் ஐந்து ரூபாய் எதற்காகத் தேவையென வினவினேன். லாலா நந்துகுஷூர் ஆஹ் யென, ஓர் பெரும் மூச்சுவிட்டவராக என்ன சொல்லப்போகின்றேன்; யான் ஓர் சங்கடத்தில் மாட்டிக்கொண்டதன் பயனாய் பலரிடமும் ஐந்து ரூபாய் கடன் கோரியும் ஒருவரும் கொடாததால் கடைசியாய் தங்களிடம் ஓடி வந்திருக்கிறேன் எனக்கூறினார். நல்லது உட்காருங்கள். தங்கள் தந்தை கோபிந்து சஹாயி என்பார் ஒரு லக்ஷ ரூபாய் ரொக்கத்துடன் அநேக கட்டடம், கடை முதலியவைகளை தங்களிடம் ஒப்புவித்ததுடன் தக்க முறையில் நடைபெற்றுக்கொண்டிருந்த வியாபாரத்தையும் விட்டுச் சென்றாரே அத்தொழிலும் ஐவேஜிகளும் என்னவாயிற்று என, வினவினேன். தங்கள் நடவடிக்கையில் யான் ஒரு வித்தியாசத்தையும் காணவில்லையே; தாங்கள் குடிகாரராயுந் தெரியவில்லை; சூது விளையாடும் பழக்கமிருப்பதாயுந் தெரியவில்லை. சுருங்கக் கூறின் ஐசுவரியம் நீங்கிப் போவதற்குள்ள எவ்வித கெடுதியும் தங்களிலிருப்பதாக வெளிப் பார்வைக்கு தென்படவில்லையே யென, வினவினேன்.

லாலாஜீ: தாங்கள் கூறுவது வாஸ்தவந் தான். நான் இப்போது எந்தக்கடையில் வீற்றிருக்கிறேனோ அந்தக் கடையிலிருந்து தான் என் தந்தை இவ்வளவு ஐசுவரியங்களையும் சம்பாத்தியஞ் செய்தார். என் பிதாவால் எனக்களிக்கப்பட்டுள்ள ரொக்கம் முழுவதையும் செலவிட்டுவிட்டு அசையாப் பொருள்கள் யாவற்றையும் அடமானம் வைத்துவிட்டேன். இதுபொழுது யான் ஒவ்வொரு காசுக்கும் இதரர்களை வழிபார்த்தவனா யிருக்கிறேன்.

“யான் அனுபமற்றவனாயிருந்தேன். செலவு செய்வதைக் கற்றுக்கொண்டிருந்தேனே யல்லாது சம்பாத்தியஞ் செய்யும் மார்க்கத்தைத் தெரிந்து கொண்டேனில்லை. காலப்போக்குக் கேற்றவாறு யான் நடந்து கொள்ளவில்லை. யான் சிக்கன முறையைக் கைகொள்ளவில்லை. யான் பேராசையின் மிகுதியால் தானியங்களை இலாபத்திற்குக் கொடுத்தேன். அநேகர் என்னிடம் வந்து தானியம் பெற்றுப் பெற்றுப் போனார்களையன்றி வசூல் செய்வதில் யான் ஈடுபடவில்லை. என்னுடன் தொழிலி லீடுபடுபவர்களுக்கு யான் தக்க உபகாரஞ் செய்யவில்லை. யான் கஷ்டப்பட்டு சம்பாதியாது, என் தந்தையால் தானியம் எனக்குக் கிடைத்து வந்ததால் யான் இதரர்களுக்குக் கடனாக கொடுக்கும் தானியங்களை வசூல் செய்வதற்கு முற்படுவதில்லை. யான் தகுதியற்ற வேலைக்காரர்களை பொறுப்புடைய பதவிகளி லேற்படுத்தி யிருந்தேன். யான் தூக்கத்திலிருந்து வெகு நேரத்திற்குப்பின் விழித்தெழுந்து வெளியிற் சென்று வருவதற்குமுன் இதர கடைக்காரர்கள் தங்கள் வியாபாரங்களை முடித்து விடுவர். இந்த நிலைமையில் என் விபாபாரம் மந்தத்தில் வந்த போது சதி மோசம் ஏமாற்றம் இவைகளைக் கையாள முற்பட்டேன். என் வியாபாரம் மக்களிடையே பிரஸ்தாபிக்கப் படுவதர்க்கான எவ்வித ஏற்பாட்டையும் யான் செய்யவில்லை. வியாபாரத்தில் எவ்வாறு அபிவிர்த்தி யடைவதென்பதை கிஞ்சிற்றும் யான் ஆராய்ந்து பார்த்தது கிடையாது. வருவாய்க்குத் தக்கவாறு யான் செலவு செய்து வந்தேனில்லை. சிறிய சிறிய விஷயங்களை அறவே பொருட்படுத்தாதிருந்து வந்தேன். யான் என்னை மகா சிறந்த புத்திசாலியெனக் கருதிக்கொண்டிருந்தேன்' ஐசுவரியம் ஒருவர் கையைவிட்டு மற்றவர் கைக்கு மாறும் சுபாவமுடையதென யான் கிஞ்சிற்றும் கருதியது கிடையாது. யான் விளையாட்டுத் தனமாய் அளவுக்கதிகமானவும், தேவையற்றதுமாகிய உயிர்ப்பிராணிகளை வைத்திருந்தேன். (தொடரும்.)

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளை அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவது கொண்டு வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும் புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானுல் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை அவ்விடம் வந்திருக்கும் நம் சங்கப் பிரதிநிதிகளிடமாவது, அல்லது நமது ஏஜண்டுகள் மெஸ்ஸர்ஸ் **A.M.K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) அல்லது ஜனுப் **M. I.** ஷம்ஸு மொய்தீன் (65 பிரிஸ்டல் புல்டிங் கோட்டை கொழும்பு) இவர்களிடமாவது கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதாருக்கும் தனித்தனியே தபால் எழுதுவது கொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் சென்றவருட பாக்கியையும் நடைபெறும் இவ்வருடத்திற்குரியவைகளையும் உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினுங், மலாயா :—இவ்விடங்களிலுள்ளவர்கள் சென்ற வருஷத்திய தங்கள் பாக்கிகளையும், புதிய வருடத்திய சந்தாவையும் கிள்ளான் ஆலி ஜனுப் அல்ஹாஜ் **K. A.** பகீர் முகம்மது சாஹிப் அவர்களிடம் நேரிலோ, தபால் மூலம் அனுப்பியோ ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சிங்கை :—இவ்விடத்திய சந்தாநேயர்கள் சென்ற வருடத்திர்க்குரிய தங்கள் சந்தா பாக்கியையும், புதிய வருடத்திர்க்குரிய சந்தாவையும் ஜனுப் **L. A.** முகம்மதுயாஸீன் அவர்கள் (249, தஞ்சாங்பகர்ரோட், சிங்கை) இடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மானேஜர்.

மௌலானா ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள்.

மிறட்வாசியும், அறபி பார்ஸி உர்தூ ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மாபெரும் பாண்டித்துவம் பெற்று, மேனாட்டு கலைகளிலும் கீழ்நாட்டு சாஸ்திரங்களிலும் சிறந்து விளங்கும் மேதாவி ஹிஸ் எக்ஸால்டெட் எமினன்ஸ் மௌலானா மௌல்வி அல்ஹாஜ் ஹாபிஜ் காரீ அல்லாமஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் தங்கள் பிரசார தோரணையில் இவண் சென்னை விஜயஞ் செய்து, திருக்களாச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட மஸ்ஜித் திறப்பு விழாவை நடத்திவைப்பதற்காக ஆங்கு சென்று நாகூர், காரைக்கால், வடகரை, பறங்கிப்பேட்டை முதலிய இடங்களில் அரிய சொற்பெருக்காற்றினார்கள். பின்னர் நெல்லிக்குப்பம் ஜனாப் M. முகம்மது யாசீன் சாஹிப் பிரதர்ஸ் அவர்கள் வீட்டில் நடைபெற்ற நிகாஹ் வைபவத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

ராஜகிரியில் காலஞ் சென்ற அல்ஹாஜ் R. E. முகம்மது காஸிம் சாஹிப் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மத்ரஸயெ காஸிமிய்யா, பள்ளிவாசல் திறப்பு விழாவுக்காக அழைத்து செல்லப்பட்டு அதுபொழுது பல்லாயிரக் கணக்கான மக்களிடையே தொழுகையை நடத்திவைத்து அழகிய பிரசங்கங்கள் புரிந்தார்கள். பிறகு பண்டாரவாடை, அய்யம்பேட்டை, கூடலூர், சிதம்பரம் இவ்விடங்களில் சொற்பொழி வாற்றிவிட்டு மத்ராஸ் வந்து சேர்ந்தார்கள்.

இச்சென்னையின்கண் முத்தியால் பேட்டை மஸ்ஜித மஅமூர், ஈதுகாஹ் பள்ளிவாசல், மூர் தெரு, திருவல்லிக்கேணி, நவ்வாப் மஸ்ஜித், ரூயபுறம், புரூட்மார் கட், ரூயப்பேட்டை முதலிய இடங்களில் மனம் கவரத்தக்க முறையில் அழகிய உபந்நியாசம் புரிந்தார்கள்.

மேன்மை தங்கிய மௌலானா அவர்கள் தங்கள் உத்தமப் பிரசார தோரணையில் சௌத்ஆப்ரிக்கா, மும்பாஸா, கீழ்ஆப்ரிக்கா, அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று தங்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்கள், பிரசார சபைகளின் நிருவாகங்களை கவனிக்கவும், இஸ்லாமிய பிரசாரம் செய்யும் நோக்கத்தோடும் 15-7-38 வெள்ளிக்கிழமை மாலை 9-மணிக்கு இவண் சென்னையைவிட்டு இண்டோ—சிலோன் எச்ஸ்பிரஸில் கொழும்பு பிரயாணமானார்கள். கனம் மௌலானா அவர்களை வழி யனுப்புவதற்காக முத்தியால் பேட்டை, கிடங்கு தெரு, ஆண்டர்ஸன் தெரு, திருவல்லிக்கேணி, ராயபுரம், ராயப்பேட்டை முதலிய சென்னை நகரின் நானா பாகங்களிலுமிருந்து ஏராளமான மக்கள் எழும்பூர் ஸ்டேஷனில் குழும்பி புஷ்ப ஹாரங்கள் சூட்டினர். கனம் மௌலானா அவர்கள் மலர்ந்த புன்னகையான முகத்துடன் எல்லோருடனும் கைலாகு செய்துக்கொண்ட பின் அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கத்துடன் புகைரதம் அங்கு குழுமியிருந்த மக்களிடம் விடை பெற்று புறப்பட்டது.

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam,